பொது நூலகம்
கோண்டாவில்

# உதயன்

சுடர் 30 | கதிர் 309 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 14, வியாழக்கிழமை 01.10.2015



## இரண்டு பஸ்கள் நேரெதிரே மோதி 35 பேர் படுகாயம்

மல்லாவி, ஒக்.1

மாங்குளத்தில் இருந்து துணுக்காய் நோக்கிச் செல்லும் பாதையில் ஒட்டறுத்தகுளப் பகுதியில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 35 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி பக்கம் 24

## தீர்மானத்தை இலங்கை வழி மொழியும்

ஜெனிவா, ஒக்.1

இலங்கை குறித்து இன்று ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படும் தீர்மானத்தை வழிமொழிவதற்கு இலங்கை அரசு ஒத்துக்கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த பிந்திய செய்திகள் தெரிவித்தன.

இதனால் இந்தத் தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று சமர்ப்பிக்கப்படும் தீர்மானத்தைத் பக்கம் 24

## தீர்மானத்தை வரவேற்கிறார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், ஒக்.1

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்காக ஐ. நா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதை வரவேற்பதாக வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே பக்கம் 24

# போர்க்குற்ற விசாரணை நடத்தக்கூடிய நீதித்துறை இலங்கையிடம் இல்லை

## எனவே கலப்பு நீதிமன்றமே ஒரே வழி என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உறுதி

ஜெனிவா, ஒக்ரோபர் 1

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தக்கூடிய நீதிமன்றக் கட்டமைப்பு இலங்கையிடம் கிடையாது என ஐ. நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கையின் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றின் ஊடாகவே விசாரணை நடத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ. நா. மனித பக்கம் 21



## 20 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைந்தனர்

வவுனியா, ஒக்.1

இறுதிப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளில் 20 பேர் புனர்வாழ்வின் பின்னர் நேற்றுப் புதன்கிழமை சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.



இந்த நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

இவ்வாறு இணைக்கப்பட்டவர்களில் 11 பேர் புனர் வாழ்வுக் காலத்தில் கிராம சேவகர் பரீட்சையில் தோற் றிச் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை, முன்னர் புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை ஊக் குவிக்கும் வகையில்

அவர்களில் பக்கம் 24

## நல்லாட்சியை வலுப்படுத்தும் மைத்திரிக்கு ஒபாமா பாராட்டு



நியூயோர்க், ஒக்.1

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அதற்கான அவரது அர்ப்பணிப்பையும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாராட்டியுள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றுமுன்தினம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, புதிய அரசின் கீழ்இலங்கை பக்கம் 24

## தடுப்பில் இருக்கும் அப்பாவை எம்மிடம் திருப்பித் தாருங்கள்

### அரசியல் கைதிகளுடைய பிள்ளைகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

மாமா இண்டைக்குச் சர்வதேச சிறுவர் தினம் எண்டு சொல்லு கினம். சிறுவர் தினம் எண்டால் என்ன? இண்டைக்கு மட்டும் நாங்கள் சந்தோசமா இருக் கிறதா?, எங்கட அம்மா சொல் லுறா புலிகளுக்கு உதவி செஞ்சதால அப்பாவைப் பிடிச்சு வைச்சிருக்கிறார் களாம் என்ற மனதை நெகிழ வைக்கும் குரல்களுக்கு மத்தியில் அரசியல் கைதிகளின் பிள்ளைகளால் நேற் பக்கம் 24



## அமெ. தீர்மானத்தை செயற்படுத்துவது தவிர்க்கமுடியாதது

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக்.1

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்படும் அமெரிக்கத் தீர்மானத்தை நேர் மையாக நடை முறைப்படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாதது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்து ஆங்கில நாளி தழுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நா மனித உரிமைகள் பக்கம் 24

# நல்லிணக்கத்தை எட்டும் இலங்கை

## ஐ.நாவில் ஜனாதிபதி உறுதி

நியூயோர்க், ஒக்.1

நிலையான அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரட்டைக் காரணிகளை எட்டுவதே இலங்கை அரசின் இலக்காகும் என ஐக்கிய நாடுகளின் 70 ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இலங்கையில் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான உடனடித் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இரவு இலங்கை நேரப்படி 7.30 மணியளவில் ஐ. நா 70ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில்



தனது பிரதான உரையை நிகழ்த்தியிருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அதனை மேம்படுத்தி பக்கம் 24

## வலுவிழந்துள்ளது அமெ. தீர்மானம்

### மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டு

ஜெனிவா, ஒக்.1

இலங்கை அரசை திருப்திப்படுத்துவ தற்காகவும், இந்தியாவின் கரிசனை களை போக்குவதற்காகவும் அமெரிக்காவின் தீர்மான வரைவு வலு விழக்கச் செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித் துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் ரொய்ட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பக்கம் 24

## சந்திரிகா மீதான தாக்குதல்; 300 வருட சிறைத் தண்டனை

### அதிர்ச்சியில் உறைய வைத்தது கொழும்பு மேல் நீதிமன்றின் தீர்ப்பு

கொழும்பு, ஒக்.1

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு உதவிய இருவரில் ஒருவருக்கு 300 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியது கொழும்பு மேல்நீதிமன்றம்.

சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று உயர்நீதி பக்கம் 24



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்கவில்லை ரவுடிகள் அடாவடி

## சுன்னாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 1
ரவுடிகளின் அட்டகாசம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என்று சுன்னாகப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவுகூட சுன்னாகம் கந்தரோடை மடம் பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் வாள்கள், பொல்லு கள், தடிகள் சகிதம் வந்த ரவுடிக் கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.


அந்தப் பகுதியில் உள்ள பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டின் வேலிகளை வெட்டி வீழ்த்தியதுடன் அந்த வீட்டில் இருந்த கல்வி கற்கும் மாணவனையும் தாக்கி அட்டகாசம் செய்து விட்டு அந்தக் குழு சென்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்கப்பட்ட வீட்டுக் காரர்களுக்கும் அவர்களுக்கு அயலிலுள்ள ஒரு வீட்டுக்காரர்களுக்கும் இடையே நிலவிய பகைமை காரணமாகவே அயல் வீட்டுக்காரர் அவரது சிநேகிதர்கள் மூலமாக இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்று பாதிக்கப்பட்டவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு இரவு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் கொக்குவிலில் ரவுடிக் கும்பலைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள், வாள், கொட்டன், நவீனரகக் கைத்தொலைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டிருந்தன. ஆயினும் அன்றையதினம் இரவே சுன்னாகத்தில் மற்றொரு குழு வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் சென்று தாக்குதல் நடத்தி அட்டகாசம் செய்துவிட்டுச் சென்றுள்ளது. தனிப்பட்ட தகராறு காரணமா என்பதற்கப்பால் அத்தகைய செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர்.

வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதோடு அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களையும் உடன் கைது செய்யுமாறு யாழ்.மேல்நீதிமன்றால் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் பொலிஸாரும், அதிரடிப்படைப் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆயினும் ரவுடிக் குழுக்களின் அடாவடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (ந-4)



## சாராயம் விற்ற பெண்ணுக்கு ரூ.20 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 1
சட்டவிரோதமாக சாராயம் விற்ற பெண்ணுக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதி மன்று. வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராஜா புஸ்பராணி என்பவரே சட்டவிரோதமாக சாராயம் விற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போது குறித்த பெண் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அந்தக் குற்றத்துக்காகக் குறித்த பெண்ணை 20 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்று நீதிமன்று தீர்ப்பளித்தது. அபராதம் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. எனினும் அவர் குற்றப் பணத்தைக் கட்டிவிட்டுச் சென்றார். (ந-4)



## சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவு தனியாக திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையங்களில், சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவு தனியாக திறந்து வைக்கப்படவுள்ளன.

மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரா இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவின் திறப்பு விழா இன்று மாலை 3 மணிக்கும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அமைக்கப் பட்டுள்ள சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவின்திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் இடம் பெறவுள்ளன. (ந-5)

# ‘சிறுவரை எமது உயிர்போல் காப்போம்’

## தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று பல இடங்களில் விழிப்புணர்வுப் பேரணிகள்




யாழ்ப்பாணம், ஒக்.1
சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணிகள் நேற்று தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தினரால் வடக்கில் பல பகுதிகளில் நடத்தப்பட்டன. சிறுவர் தினத்தை முன்னிட்டு ‘சிறுவர்களை எமது உயிர்போல் காப்போம் ’ எனும் தொனிப் பொருளில் இந்தப் பேரணிகள் நடத்தப்பட்டன.

யாழ். சிறைச்சாலை மற்றும் யாழ். சென். சார்ள்ஸ் மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் இணைந்து சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்குமாறு வலியுறுத்தி அமைதியான போராட்டத்தினை முன்னெடுத்தனர். இதன்போது சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கண்டித்து சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப் பட்டன.



அதேவேளை வவுனியா பிரதேச செயலகத்தினரும் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தினரும் இணைந்து பேரணி நடத்தியிருந்தனர். இந்தப் பேரணியை வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா ஆரம்பித்து வைத்தார். வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆரம்பமான இந்தப் பேரணி வவுனியா நகர்ப்புற வீதியூடாக சென்று தெற்கு பிரதேச செயலகத்தில் நிறைவடைந்தது. ‘அதிகரித்து வரும் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை வன்மையாக ஆட்சேபிக்கிறோம்’ எனும் தலைப்பில் நடைபெற்ற இந்தப் பேரணியில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வூட்டல் மற்றும் வாகனத்துக்கு ஸ்ரிக்கர் ஒட்டுதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ம. தியாகராசா உட்பட பிரதேச செயலக பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சாவகச்சேரி பஸ் நிலையத்திலும் இடம்பெற்றது. சாவகச்சேரி நகர்ப் பகுதி பாடசாலைகளின் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் ‘சிறுவர்களை எமது உயிர் போல் காப்போம்’ என்னும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டன.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் புறாப் பொறுக்கிச் சந்தியில் பேரணி நடத்தப்பட்டது. இமையாணன் அ.த.க. பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன், உதவிப் பிரதேச செயலர் சி.ரஜீவ், இமையாணன் கிழக்கு கிராம சேவையாளர் எஸ். சுதர்சன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பிர தேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மடுவில் நடைபெற்ற பேரணிக்கு பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் ந.[illegible] காந்தன் தலைமை வகித்தார். இந்த நிகழ்வில் பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ந-10,106,108,40,86,108)

மீண்டும்

அளப்பருங்கருணை

நடன நாடகம்

02, 04 ஒக்ரோபர் 2015
மாலை 6.00 மணி

கைலாசபதி அரங்கம்,
யாழ். மருத்துவபீடம்.

நுழைவுக்கட்டணம் ரூ.500/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி, முறிகண்டி பிள்ளையார் கோவிலை தரிக்க வரும் பயணிகள் ஆலய சுற்றுச் சூழலில் குப்பைகளை வீசுகின்றனர். அதனால் ஆயல சுற்றுச் சூழலில் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இது தொடர்பில் பயணிகள் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கப்பட்டது. (ற)

# பிரமிட் முறையில் இலாபமீட்டும் அனைவரையும் கைது செய்க

## மன்னார் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம் ஒக்.1

பிரமிட் முறையில் இலாபமீட்டும் அனைவரையும் உடன் கைது செய்யுமாறு மன்னார் நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

பிரமிட் முறையில் பொருள்கள் விற்பனை செய்யும், பணம் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். அதையடுத்தே மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த இரண்டு பேர் இது தொடர்பில் தாம் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவித்து பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதில் பிரமிட் முறையில் தமக்கு பொருள்களை விற்றவர்கள், அதன் மூலமாக அதனை மேலும் பலருக்கு விற்பனை செய்வதன் மூலமாக லாபத்தை அடையலாம் என்று கூறியே அவர்கள் பொருள்களை விற்பனை செய்தனர். அதற்காக இருவரும் தலா 61 ஆயிரத்து 300 ரூபாவைச் செலுத்தியிருந்தனர். ஆனால் பிரமிட் முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அந்தப் பொருள்கள் மூலமாக தமக்கு எவ்வித லாபமும் கிடைக்கவில்லை. அதனால் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்துப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அது கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கின் படி குறித்த சந்தேக நபர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

விசாரணையின் போது அந்தப் பிரமிட் முறையில் ஏற்கனவே பலர் பொருள் விற்பனை மற்றும் பணம் லாபமீட்டும் செயலில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. குறித்த 2 சந்தேக நபர்களுக்கு முன்னரும் அவர்களுக்குப் பின்னரும் பலர் அந்தப் பிரமிட் முறையில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளை அடுத்து பிரமிட் முறையில் செயற்படும் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள் ளது. பிரமிட் முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 2 பேரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

முன்னர் இந்தப் பிரமிட் முறை மூலம் யாழ்.மாவட்டத்திலும் பலர் தீவிரமாக ஈடுபட்டுப் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த முறையானது தடை செய்யப்பட்ட ஒரு நடைமுறை என்று மத்திய வங்கி அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அது பற்றிய விழிப்புணர்வை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இவ்வாறு பலர் ஏமாற்ற முற்படலாம் என்றும் பலராலும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

ஆனால் பிரமிட் முறை சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒரு விடயம் என்பது தெரிந்தும் யாழ்.மாவட்டத்தில் தற்போதும் அதனைச் சிலர் ரகசியமாகச் செய்துவருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக தற்போது அந்தப் பிரமிட் முறை மன்னாரில் தீவிரமடைந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

தடை செய்யப்பட்ட இந்தப் பிரமிட் முறைபற்றி மக்கள் ஏமாற்றப்பட்டு பணம், பொருள் இழப்புக்களைச் சந்திக்காது இருக்க பொதுமக்களே கவனமாக அது பற்றிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. (ற-4)



# வடமாகாண இணையத் தளத்தில் கவனிப்பாரற்றுத் தமிழ் மொழி

வடக்கு மாகாண சபை அரசியல் ரீதியாக செயற்பட ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் தமிழ் மொழி தொடர்ந்தும் புறக்கணிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பார்வையிடுவதற்குரிய வசதிகளைக் கொண்டிருக்கின்றது. அதில் வடக்கு மாகாண சபை தொடர்பிலான பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன.

ஆங்கில மொழி மூலம் இணையத் தளத்தைப் பார்வையிடும் போது, வெளியீடுகளுள் நிறைய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக புள்ளிவிவரங்கள், மாகாண சபை உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் திட்டங்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் நிதியியல் அறிக்கை என்று பல்வேறு விடயங்களும் ஆங்கில மொழியில் உள்ளன.

ஆனால் தமிழ் மொழி மூலம் இணையத் தளத்தைப் பார்வையிடும் போது, வெளியீட்டினுள் தனித்து 2011 ஆம் ஆண்டுக்குரிய ஆளுநர் உரை மாத்திரமே உள்ளது. புள்ளி விவரங்கள் உள்ளிட்ட ஏனைய விவரங்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபை கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமைக்கப்பட்டது. இயங்க ஆரம்பித்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், தமிழ் மொழி மூலமான தரவு வெளியீடுகளை மாகாண சபை புறக்கணித்து வருகின்றது. (ற-5)



# சிறுவர் தின நிகழ்வுகள் வீரசிங்கம் மண்டபத்தில்

தேசிய சிறுவர் தின நிகழ்வு இன்று மு.ப.10 மணிக்கு, வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் விவகார மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திரானி பண்டாரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

சிறுவர் தின நிகழ்வுகளின் தேசிய நிகழ்வு இந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படுகின்றது. அமைச்சர்கள் பங்கேற்கும் பிரதான நிகழ்வு, வீரசிங்கம் மண்டபத்தில் காலை இடம்பெறுகின்றது. நிகழ்வுக்கு, யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலிருந்தும் சிறுவர்கள் அழைத்து வரப்படவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள், பழைய பூங்காவிலுள்ள சிறுவர் பூங்காவில் நடைபெறவுள்ளன. இதன் போது சிறுவர் மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நாளை வெள்ளிக்கிழமையும் சிறுவர் பூங்காவில் மகிழ்வூட்டும் நிகழ்வுகள் நடைபெற வுள்ளன. நாளை மறுதினம் சனிக்கிழமை, மல்லாகம் மகா வித்தியா லயத்தில் சிறுவர்களுக்கான மருத்துவ முகாமும் நடைபெறவுள்ளது. (ற-5)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 88 ஆசிரியர் வெற்றிடங்கள்

## மாவட்ட செயலகத்தில் புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 01

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 88 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று மாவட்ட செயலகத்தில் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு கோட்டக்கல்வி பணிமனைகளையும் உள்ளடக்கியே இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதில் ஆங்கிலப் பாடத்துக்கு 15 ஆசிரியர்களும் விஞ்ஞானபாடத்துக்கு 51 ஆசிரியர்களும் கணித பாடத்துக்கு 22 ஆசிரியர்களும் [illegible] காணப்படுகின்றன.

இது தொடர்பாக வலயக்கல்வி அலுவலகத்தோடு தொடர்பு கொண்ட போது:-

இந்தக் கணிப்பீட்டில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் உள்ளடக்கப் படவில்லை எனவும் இந்த வகையிலேயே மேற்குறிப் பிட்ட தகவலில் உள்ள 88 ஆசி ரியர்கள் பற்றாக் குறை காணப்படு கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

கோட்டக்கல்வி பணிப்பாளர்களுடன் இது தொடர்பில் கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ.ராஜகுலசிங்கம் தெரிவித்ததாவது:-

தமது கோட்டத்தில் ஆங்கில ஆசிரியர்கள் 5 பேரும் விஞ்ஞானபாட ஆசிரியர்கள் 2 பேரும் தேவைப்படுகின்றனர் என்று தெரிவித்தார்.

பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் இதுகுறித்துத் தெரிவித்ததாவது:-

தமது கோட்டத்தில் 8 ஆங்கில ஆசிரியர்களும், 7 விஞ்ஞான ஆசிரியர்களும், 9 கணிதபாட ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர் – என்றார்.

பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஐ.குகானந்தராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தாம் தற்போது பளை கோட்டத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளதால், தகவல்கள் தம்மிடம் இல்லை என்றும் வலயத்தினூடாக அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தார். (ற-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# அரசியல் கைதிகள் விடயம் அரசியல் ஆக்கப்பட்டுள்ளது

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

இலங்கையில் அரசியல் கைதிகளினுடைய நிலைமை அரசியல் ஆக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் அவர்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடனேயே தீர்க்ககூடியதாக இல்லை. – இவ்வாறு வடக்கு முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி அவர்களுடைய பிள்ளைகளால் வடக்கு முதலமைச்சருக்கு அவருடைய அலுவலகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகளினுடைய பிள்ளைகள் தங்களது தந்தையின் பாசத்தை பல விதங்களிலும் எடுத்து காட்டினார்கள். எனக்கு கடிதம் ஒன்று தந்திருக்கின்றார்கள் இந்த கடிதத்தை ஜனாதிபதி மாமாவிற்கு அனுப்புங்கள் என்று அதில் தங்களுடைய குறைகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கின்றார்கள். – என்று அவர் கூறினார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:–

எங்களுடைய அரசியல் கைதிகள் தொடர்பாக நாங்கள் சென்ற இரண்டு வருட காலமாக – இந்த வட மாகாண சபை பதவி ஏற்ற காலத்தில் இருந்து பேசி கொண்டு தான் இருக்கின்றோம். ஆனால் அதற்கேற்றவாறு எந்த ஒரு நல்ல தீர்மானமும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. விரைவில் வழக்குகளை முடிப்பதாகக் கூறினாலும் வழக்குகள் முடிவதற்கு காலம் சென்று கொண்டிருக்கின்றன. அத்துடன் கைதிகள் சார்பிலே வழக்கை எடுத்து நடத்த கூடியவர்கள் மிக சொற்பமாக இருக்கின்றார்கள். அதை எடுத்து நடத்த முன்வருபவர்களுக்கு பணத்தை கொடுக்க கூடிய நிலையிலே அரசியல் கைதிகள் இல்லை.

நாங்கள் ஏதாவது ஒரு வழியில் அவர்களுக்காக ஒரு அமைப்பை அமைத்து அதற்கூடாக பணத்தை எடுத்து இந்தச் சட்டதரணிகளுக்கு கொடுத்து ஏதாவது செய்ய முடியுமா என்று பல விதங்களிலும் நடவடிக்கை எடுத்து வந்திருக்கின்றோம். ஒரு சிலருடைய விடயமாக அதைப் பற்றி நடைமுறைபடுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் அதை ஒழுங்கமைப்பு ஒன்றுக்குள் கொண்டு வருவதற்கு இது வரையில் எங்களால் முடியவில்லை.

இது எவ்வாறு இருப்பினும் இப்போது குழந்தைகளை பொறுத்த வரையிலே தங்களுடைய தகப்பன்மார், அண்ணன்மார், திரும்பி வருவார்களா? எப்போது திரும்பி வருவார்கள்? என்ன குற்றம் செய்தார்கள்? என்று பல கேள்விகளையும் அவர்கள் கேட்டு கொண்டிருக்கின்றார்கள். அரசியல் கைதிகள் என்று சொல்லும் போது சில அரசியல் காரணங்களுக்காக அவர்களை எடுத்து கொண்டு சென்றார்ளே தவிர நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அவர்கள் குற்றங்கள் புரிந்ததாக அல்ல. ஆகவே தான் அரசியல் கைதிகளை அரசியல் ரீதியாக அவர்களுக்கு மன்னிப்பு கொடுத்து வெளியேற்ற வேண்டும் என்றதொரு கோரிக்கையை நாங்கள் முன் வைத்தோம்.

அப்படி இருந்தும் பல விதத்திலும் இவர்களுடைய விடுவிப்பு காலம் தாமதமாகின்றது. ஆனால் ஒன்றை மட்டும் கூறலாம். இன்று இலங்கையில் அரசியல் கைதிகளினுடைய நிலைமை அரசியல் ஆக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் அவர்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடனேயே தீர்க்ககூடியதாக இல்லை. ஆனால் தற்போது ஜெனீவாவில் நடக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியானதும் அரசு தன்னுடைய நல்லெண்ணத்தை வெளிக்காட்டுவற்காக சில நடவடிக்கைகளை விரைவிலே எடுக்கக் கூடும் என நம்புகின்றேன்.

அந்த நல்லெண்ணத்தின் பயனாக இந்த அரசியல் கைதிகளை அவர்கள் விடுவிப்பார்கள் என்று நாங்கள் எண்ண இடம் இருக்கின்றது. ஆகவே இன்னும் ஒருமாதம் அல்லது இரண்டு மாதங்கள் காத்திருங்கள். அரசு எப்பேற்பட்ட நடவடிக்கை எடுக்கின்றது என்பதை பொறுத்து உங்களுடைய நடவடிக்கைகளை எடுங்கள். தற்போது இது தொடர்பாக பெரிதாக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று இந்த குழந்தைகளையும், அவர்களுடன் வந்தவர்களையும் கேட்டு கொள்கின்றேன். இதனை ஓரிரு மாதங்களுக்கு பின்னர் மீளாய்வு செய்வோம் என்பது தான் தற்போதய நிலமை – என்றார்.

(ற– 21)

## மனிதவளப் பற்றாக்குறையால் நவலோகா திட்டம் இரத்தானது

யாழ்ப்பாணம், ஒக்.1

தகுதியான வேலையாள்கள் மற்றும் வைத்தியர்களைப் பெற்றுக் கொள்வது சிரமம் என்பதால், நவலோகா வைத்தியசாலையை யாழ்ப் பாணத்தில் ஆரம்பிக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று நவலோக குழுமத் தலைவர் ஜெயந்த தர்மதாஸா தெரிவித்துள் ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலமொழிமூல அரச ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 300 கட்டில்களைக் கொண்டதாக நவலோகா வைத்தியசாலையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் அந்தத் திட்டம் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளது – கை விடப்பட்டுள்ளது என்று நவலோக குழமம் தெரிவித்துள்ளது.

'எப்படியிருந்த போதிலும் நாம் குறித்த திட்டத்தை ரத்துச் செய்யும் முடிவு எடுத்துள்ளோம். மனிதவளப் பிரச்சினையாலேயே இந்த முடிவுக்கு வந்துள்ளோம். எங்களுக்கு தகுதியான வேலையாள்கள் மற்றும் வைத்தியர்களை யாழ்ப் பாணத்தில் பெற்றுக் கொள்வது சிரமமாக உள்ளது', என்று ஜெயந்த தர்மதாஸா குறிப்பிட்டுள்ளார்.

நவலோகா வைத்தியசாலை இலங்கையில் மிகப் பெரிய தனியார் வைத்தியசாலை என்பதுடன், நாடு முழுவதிலும் அது தனது வலையமைப்பை உருவாக்கியுள்ளது.(ற–5)

## விசுவமடுப் பெண் வன்புணர்வு: வழக்கு தீர்ப்புக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

விசுவமடுவில் பெண் ஒருவரைக் கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ளன. இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தினார்கள் என்று குற்றஞ் சுமத்தப்பட்டிருந்த ராணுவத்தினருக்கு எதிராக சட்டமா அதிபரால் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு யாழ்.மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணையில் இருந்து வந்தது. இந்த வழக்கில் பாதிப்புக்குள்ளாகிய பெண் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், மருத்துவ பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் சாட்சியமளித்துள்ளனர்.

வழக்குத் தொடுநர் சாட்சியங்கள் மற்றும் எதிரி தரப்பு சாட்சியங்கள் என்பன முடிவுறுத்தப்பட்டு, திங்களன்று இருதரப்பு சட்டத்தரணிகளினதும் தொகுப்புரைகள் இடம் பெற்றிருந்தன. எதிரிகளான இராணுவத்தினர் தரப்பில் சட்டத் தரணி அசேலடிசில்வா தொகுப்புரை வழங்கினார். வழக்குத் தொடுந ரான சட்டமா அதிபர் திணைக்களத் தின் சார்பில் தொகுப்புரையை அரசசட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி வழங்கினார்.

வழக்கு விசாரணையில் நான்காவது சந்தேகநபரானசிப்பாய் நீதி மன்றத்தில் முன்னிலையாகியிருக்க வில்லை. அதனால் அந்தச் சந்தேக நபரைக் கைது செய்து நீதி மன்றில் முற்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் ஊடாக மேல்நீதிமன்று பிடி விறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது.(ற–4)

## கடற்படையின் செயற்பாட்டால் வலி.வடக்கு மீனவர் பாதிப்பு

வலி.வடக்கு, ஒக்.1

வலி.வடக்கில் நிலை கொண்டுள்ள கடற்படையினரின் அடாவடித்தனமான செயற்பாட்டால் சுமார் அறுநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மீன் பிடித் தொழிலாளர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை துறைமுகப் பாதுகாப்புக்கெனத் தெரிவித்து ஏற்கனவே பாதுகாப்பு எல்லையாக இருந்த பிரதேசத்தில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரம் தமது எல்லையை கடற்படையினர் நீடித்துள்ளனர் என்று கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது வரை காலமும் காங்கேசன் துறை துறைமுக பாதுகாப்பு எல்லையை கீரிமலைக் கேணி பகுதியை அண்டி அமைத்து இருந்த கடற்படையினர் கடந்த சனிக்கிழமை முதல் திடீரென நான்கு கிலோ மீற்றர் தூரம் வரை தள்ளி அமைத்துள்ளனர் என்றும், அந்தப் பகுதிக் குள் தோணிகள் எவையும் உட் செல்லா வண்ணம் கம்பிகளை கொண்டு அமைக்கப்படும் போயா எனப்படும் தடையையும் அமைத்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.


கோப்புப்படம்

இதன் காரணமாக சேந்தாங்குளம், வலித்தூண்டல், சீந்துப்பந்தி, போயிட்டி மற்றும் ஊறணி பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாதகல் போன்ற பகுதிகளின் தொழிலாளர்களும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் என்று சுட் டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள கடலில் பாதுகாப்பு எல்லையை வரையறுத்து அடையாளமிட்டுள்ள பகுதியில் மிதவையாக போடப்பட்டுள்ள மிதவைகளிலும் கூட பாரிய இரும்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதால் இரவில் வரும் தோணிகள் படகுகள் அதில் மோதுண்டால் அவை சேதமாகும் என்றும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்படையினருடன் கடற்றொழில் சங்கங்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது, பாதுகாப்புக் கருதி எல்லை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று பதலளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றி இளவாலைப் பொலிஸாரிடமும், சிவில் பாது காப்புச் சபைக் கூட்டத்திலும் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–86)

## பாலியல் துஷ்பிரயோகங்களை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்




வவுனியா, ஒக்.1

கொட்டதெனியா சிறுமி வன்புணர்வுக்குட்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், பெண்கள், சிறுவர்கள் மீதான வன்புணர்வைக் கண்டித்தும் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மு.ப 9.30 மணியளவில் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அந்த அமைப்பின் செயலாளர் எஸ்.டொன் பொஸ்கோ தலைமைதாங்கினார்.

குழந்தைகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்புணர்வு மற்றும் அதன் பின்னான கொலைகள் நாட்டில் தொடர்ந்தவண்ணம் உள்ளன. புங்குடுதீவு பாடசாலை மாணவி, கொட்டதெனியாவில் 5 வயதுச் சிறுமி என இந்தப் பட்டியல் நீண்ட வண்ணம் உள்ளது. இத்தகைய கொடூர சம்பவங்கள் தொடராத வண்ணம் இருக்க அரசு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். எமது குழந்தைகளை அரசு பாதுகாக்க வேண்டும். இத்தகைய கொடூரங்களைப் புரியும் குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்கவேண்டும். குற்றவாளிகள் தப்பித்து [illegible] [illegible] வேண்டும். என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவமோகன் மற்றும் வட மாகாணசபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, நாடாளுமன்றஉறுப்பினர் நடராஜ், இ.இந்திராஜா, புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சந்திரமோகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோத ராதலிங்கம், மதப்பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், கல்வியலாளர்கள், வர்த்தகர்கள் பெண்கள் அமைப்புக்களை சார்ந்தவர்கள், அரச சார் பற்ற நிறுவனங்களை சார்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நடைபெற்ற போராட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.(ற–10,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க தலைவரான சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரானமை பெருமை

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். கரீஸ் தெரிவிப்பு

எருவில், ஒக்.1

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருக்கும் எனக்கும் பொது வேட்பாளர் யார் என்ற இரகசியத்தை மிகவும் சூட்சுமமாக கூறிய பெரும் தலைவராக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனைப் பார்க்கின்றோம்.

–இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். கரிஸ் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையில் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச் சருமான எச்.எம்.எம்.கரிஸின் நிதி ஒதுக்கீட்டில் கல்லூரியின் முகப்பை அழகுபடுத்தும் முகப்புத் திறப்பு விழா கல்லூரி முதல்வர் விறையினர் செலர் தலைமையில் கல்லூரி சிசிலியா மேரி அரங்கில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாங்கள் கடந்த அரசில் ஆளும் தரப்புடன் சேர்ந்திருக்கின்றோம் என்ற உண்மை நிலை அறிந்தும் த.தே. கூட்டமைப்பின் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் எமது கட்சித் தலைமைக்கு ஒரு அழைப்பை விடுத்திருந்தார். அது வழமையான ஒரு அழைப்பு என்றே எதிர்பார்த்து நானும், ரவூப் ஹக்கீமும் அதிகாரிகளுமாக சம்பந்தன் ஐயாவை சந்திப்பதற்காகச் சென்றிருந்தோம்.

அப்போது சம்பந்தன், நான் மிகவும் இரகசியமான ஒரு விடயத்தைக் கூறவேண்டியிருப்பதால் உங்களது உயர் அதிகாரிகளை விட்டு தனியாக வரும்படி ஹக்கீமிடம் கூறினார். அந்தச் சந்தர்ப்பத்தில் நானும் அங்கு நின்றிருந்தேன். அவர் என்னைப் பார்த்து இது மிகவும் இரகசியமான விடயம், உம்மை நம்புகின்றேன், உள்ளே நீரும் வாரும் என்று அழைத்துச்சென்றார்.

நாட்டில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக சந்திரிகாவும், ரணிலும், நானும் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்யவேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றோம். நீங்களும் ஆதரவுதர வேண்டும் என்று அவர் கூறினார். பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கப் போகின்றோம் என்றும் தெரிவித்தார்.



அதுவரைக்கும் நாங்கள் பொது வேட்பாளர் யார் என்பதை அறிந்திருக்கவில்லை. அவ்வாறான சாணக்கியம் படைத்த மிகவும் துணிச்சல் மிக்க ஒரு தலைவராக சம்பந்தன் திகழ்ந்தார். அவ்வாறான ஒருவருக்கு தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்திருப்பதை இட்டு சிறுபான்மை சமூகம் என்ற ரீதியில் நாங்களும் பெருமைப்படுகின்றோம்.

எதிர்காலத்தில் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து அரசியல் ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப் பதற்கு நாங்கள் எண்ணியிருக்கின்றோம். அந்தவகையில்தான் எங்களுக்கென்று இருக்கும் 13ஆவது திருத்தச் சட்ட வரைவை வலுப்படுத்தி எமது சிறுபான்மை மக்களுக்கான தீர்வைப் பெறுவதற்கான அரசியல் பயணத்தை மேற்கொள்ளவுள்ளோம்– என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஷாம், கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் அப்துல் ஜலீல் மற்றும் அழைப்பு அதிதிகளாக கல்முனை வலயத்துக்கு பொறுப்பான பிரதிக்கல்வி பணிப்பாளர்களான வி.மயில்வாகனம், எஸ்.எல்.ஏ.றகீம், பி.வை.எம். அறபாத், தமிழ்ப்பிரிவுக்கு பொறுப்பான கோட்டக்கல்வி அதிகாரி, எஸ்.ஜெகநாதன், பொறியியலாளர் கென்றி அமல்ராஜ், அருண் மற்றும் பி.எஸ்.ஏ. இணைப்பாளர் பத்திரண, கல்லூரி பிரதி அதிபர்கள், கல்லூரியின் முன்னாள்அதிபர் எம்.எஸ். ரீபன் மத்தியு, அயல் பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ற)

# ஆளும் கட்சியின் பக்கம் தாவும் எண்ணமில்லை

## பிரசன்ன ரணதுங்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.1

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சகல உறுப்பினர்களும் தேசிய அரசில் இணைவதற்காக ஆளும் கட்சிப் பக்கம் தாவினாலும், தாம் ஒருபோதும் அவ்வாறான செயற்பாட்டை மேற்கொள்ளப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மக்கள் தேசிய அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக எமக்கு வாக்களிக்கவில்லை. மக்கள் ஆணையால் ஆட்சியைப் பிடிக்க முடியாவிடினும், எதிர்க்கட்சிகளின் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இன்றி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசு அமைப் பதில் அர்த்தமில்லை. தேசிய அரசு என்பது மக்களின் நிலைப்பாடு இல்லை. இதற்கு நான் ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வந்தேன்– என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# அமெரிக்காவின் பிரேரணை மக்களுக்கு நீதியைத் தரும்

## யோகேஸ்வரன் எம்.பி. நம்பிக்கை



மட்டக்களப்பு, ஒக்.1

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத் தும் – என்று நம்பிக்கை வெளி யிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்ரன்.

செங்கலடியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமா என்ற குழப்பம் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. தமிழ் மக்கள் நீண்டகாலமாக பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். மக்களின் அவலக்குரல் 2009 ஆண்டின் பின்னர்தான் ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் தற்போது நடை பெற்றுவரும் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையை முன்வைத்துள்ளார். அந்த அறிக்கையை ஆராயும்போது எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற பூரணமான நம்பிக்கையில் நாங்கள் இருந்தோம். இலங்கை அரசு உள்ளக விசாரணையொன்றைக் கோருவதால் அமெரிக்கா தனது அறிக்கையில் சில திருத்தங்களை மேற் கொண்டுள்ளது. உள்ளக விசாரணையில் நீதி கிடைக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்ட காலமாக வலியுறுத்திவருகிறது. ஆனால், புதிய அரசு சில நல்ல விடயங்களை தனது செயற்பாட்டின் மூலம் சர்வதேசத்துக்கு வெளிக் காட்டியதன் காரணமாக சர்வதேச நாடுகள் சில புதிய அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளன. அதன் காரணமாக இலங்கை தொடர்பான அறிக்கையில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, 26 பந்திகள் 20 பந்திகளாகச் சுருக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அறிக்கை இலங்கை அரசுக்குச் சாதகமானது என நாம் கருதக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் அறிக்கையாகவே இது காணப்படுகிறது. நாங்கள் இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது. இதுவரை காலமும் எமக்கு நடந்த அநீதிகளுக்கு ஒரு நீதி கிடைக்கும் சந்தர்ப்பத்தை எமது மக்கள் பொறுமையாகக் வேண்டும் – என்றார். (ற–10)

# நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக்.1

நல்லாட்சிக்கான அரசால் சமர்ப்பிக்கப்படவுள்ள முதலாவது வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது.

மாத்தறை பொல்ஹேன்கொட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த 100 நாள் அரசில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு– செலவுத்திட்டத்தில் பொதுமக்களுக்கு ஏராளம் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு குறித்த நிவாரண அறிவிப்புக்களும் பின்னணிக் காரணிகளாக இருந்தன.

இதற்கிடையே அடுத்த வருடத்துக்கான வரவு–செலவுத் திட்டம் இன்னமும் ஓரிரு வாரங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், கடந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் இதுவரை பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை – என்றார். (ற)

# பெண் பணியாளர்களுக்கு பதில் ஆண் சேவையாளர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

பணிப்பெண்களுக்கு பதிலாக பயிற்சி பெற்ற ஆண் சேவையாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு பெண்களை பணிப்பெண்களாக அனுப்புவதன் ஊடாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்றும், அவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, கடந்த காலங்களில் வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாள்களாக செல்லும் பெண்கள் பல்வேறான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாகியமை தொடர்பில் தகவல்கள் வெளியாகியிருந்தன. (ற)



# சஜின் வாஸை நம்பி மோசம் போனேன்

## மகிந்த எம்.பி. வேதனை



கொழும்பு, ஒக்.1

சஜின் வாஸ் குணவர்த்தனவை, அருகில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என தனது மூத்த சகோதரர் பல முறை எச்சரித்தபோதும் தான் கேட்காமல் உதாசீனம் செய்து விட்டேன் என்று மகிந்த வேதனையுடன் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது ஏனைய சகோதரர்களும், மனைவி, பிள்ளைகளும் சஜின் குறித்து எச்சரிக்கை விடுத்தனர் என்றும், எனினும், தான் அதனைப் பொருட்படுத்தாத நிலையில் சஜின் வாஸ் குணவர்த்தன தனது பலவீனத்தை நன்கு பயன்படுத்தியுள்ளார் என்றும் அவர் கூறினார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் சஜின் வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில் அவர் எப்படியான தகவல்களைத் தெரிவித்துள்ளார் என்பது குறித்து அறிந்து கொள்ளுமாறு எனது வழக்கறிஞர்கள் அறிவுறுத்தினர். அதற்கமைய நான் 20 முறைக்கு அதிகமாக அவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி விட்டேன். ஒன்றுக்கேனும் அவர் பதிலளிக்க வில்லை என்றும் ஜனாதிபதி குறைப்பட்டுக் கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிரியும் கூட சமரச மனத்துடன் நட்புப் பாராட்டுவான். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி, வீடு வந்து சேரும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெல்வர்.

**இடபம்:** ஒருமுகத் தன்மையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான இலாபம் கிடைக்கும். விரைவில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மிதுனம்:** உடல்நலத்தில் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி ஆதாயம் சீராகும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.

**கடகம்:** குடும்பவிடயத்தைப் பிறரிடம்சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக் கும். அறிமுகம் இல்லாதவரிடம் அதிக நெருக்கத்தைத் தவிர்க்கவும். பெண்கள் சகோதர வழியில் உதவி கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** உதவி மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெற்றோரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். குடும்பத்தினரின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:** உறவினரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சீர்திருத்தம் மூலம் இலாபம் சீராகும். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை காட்டி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**தனுசு:** தடைகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். அரசியல்வாதிகள் திடீர் பயணம் மேற்கொள்வர்.

**மகரம்:** முன்னர் செய்த உதவிக்கு நற்பயன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். பெண்களுக்கு ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்:** நல்லவர்களின் நட்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தின்போது கவனம்தேவை. பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

## தூதராகிறார் தனுஷ்



எட்டு அணிகள் இடையிலான இரண்டாவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்துப் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் எதிர்வரும்3 ஆம் திகதி முதல் டிசெம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இந்தப் பருவத்துக்கான ஐ.எஸ்.எல். போட்டிகளின் விளம்பர தூதராக முன்னணி தமிழ் திரைப்பட நடிகர் தனுஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் கால்பந்து போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆட்டத்தை பிரபலப்படுத்தும் பணியில் ஈடுபடுவார்.

ஐ.எஸ்.எல். தூதராக நியமிக் கப்பட்ட நடிகர் தனுஷ் கூறியதாவது:-

இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டிகளின் தூதராக நியமிக்கப்பட்டு இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. சிறு வயது முதலே நான் கால்பந்து இரசிகன். கால்பந்து ஆட்டங்களை இரசித்துப் பார்ப்பேன். சிறுவயதில் தெருக்களில் கால்பந்து விளையாடி இருக்கிறேன். 90 நிமிடங்கள் விறுவிறுப்பாக அரங்கேறும் கால்பந்து ஆட்டம் எல்லோருக்கும் பிடித்தமானதாகும். ஐ.எஸ்.எல். போட்டிகள் கடந்த ஆண்டு இந்தியாவில் அறிமுகம் ஆனதுடன் நல்ல வரவேற்பையும் பெற்றன. இந்தப் பருவம் கடந்த ஆண்டை விட விறுவிறுப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த ஆண்டில் நிறையத் திறமையான புதிய வீரர்கள் அணியில் இடம் பிடித்துள்ளனர். எமது நாட்டில் கிரிக்கெட் ஆட்டம்தான் பிரபலமாக விளங்குகிறது. இந்தப் போட்டிகளின் மூலம் உதைபந்து ஆட்டம் நிச்சயம் பிரபலம் அடையும். சினிமாவில் கால்பந்து வீரராக நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் நடிப்பேன். அந்தப் பாத்திரத்துக்கு நான் பொருத்தமானவன் என்று நினைக்கிறேன்.- இவ்வாறு நடிகர் தனுஷ் கூறினார்.

காய்கறிகளின் நடுவில் மறைந்திருக்கும் பெண் ஓவியம்...







# பேஸ் புக்கிஸ் பிடித்தவை...






அடாத மழையிலும் விடாது குடைபிடித்து அசத்திய அணில்

என்ன நடக்குமோ..? ஏது நடக்குமோ...?
என்று யோசித்துக் கொண்டிருப்பதைவிட...
முயற்சித்துப் பார்....
கிடைத்தால் வெற்றி...!
இல்லையேல்... அனுபவம்..!!
இரண்டுமே நமக்குத் தேவை தான்...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இன்று அமைதி யாத்திரை

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.01
சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிராக நடை பெறும் வன்முறைகளைக் கண்டித்து அமைதி யாத்திரை ஒன்று இன்று வியாழக் கிழமை யாழில் நடைபெறவுள்ளது.
சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக் கத்தினர் இதனை ஏற்பாடு செய் துள்ளனர். இந்த அமைதி யாத் திரையில் மாவட்ட மீனவர் ஒத்து ழைப்பு இயக்கம், தேசிய பெண்கள் சம்மேளனம், கிராமிய உழைப் பாளர் சங்கம் ஆகிய அமைப் புக்களும் இணைந்துள்ளன. யாழ் மாவட்ட தேசிய மீனவ ஒத்து ழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என். இன் பம் தலைமையில் இந்த யாத்திரை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கட்சி பேதமின்றி அனைத்துப் பொது ஸ்தாபனங்களையும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் சமூக நலன்விரும்பிகளையும் பொது மக்களையும் கலந்துகொள்ளு மாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-10)

# முதியோர் தினத்தில் ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு,ஒக்.01
பலமுதியவர்கள்பழைய வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள அதே நேரம், பிள்ளைகள் தத்தமது வீடு களில் இயந்திர வாழ்க்கையை வாழ்கின்றனர். இத்தகைய நிலை யில் தான் இன்று சர்வதேச முதி யோர் தினம் கொண்டாடப்படுகின் றது என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.
சிறுவர் முதியோர் தினத்தை முன் னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார். மேலும் அந்த வாழ்த்துச் செய் தியில்,
எந்தவொரு சமூகத்திலும் முதி யோர் பெறுமதி வாய்ந்த மனித வளமாகக் கருதப்படுகின்றனர். முதியோர் வாழ்க்கை அனுபவங் களின் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர். தொன்மை தொட்டு கீழைத்தேய மக்கள் முதி யோருக்கு மரியாதை கொடுக்கின் றனர். இலங்கையைப் பொறுத்த வரை குடும்பங்களில் முதியோ ருக்கு விசேட இடம் உண்டு.
பலமுதியவர்கள்பழைய வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள அதே நேரம் பிள்ளைகள் தத்தமது வீடு களில் இயந்திர வாழ்க்கையை வாழ்கின்றனர். இத்தகைய நிலை யில்தான் இன்று சர்வதேச முதி யோர் தினம் கொண்டாடப்படுகின் றது. இதுபோன்ற ஒரு நாளில் முதியோர்கள் எதிர்நோக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமைகளை தவிர்க்க எடுக்கவேண்டிய நடவடிக் கைகளை வலியுறுத்தி தேசிய உரை யாடல் இடம்பெறவேண்டும். இலங் கைச் சமூகம் தனது கடந்தகால வரலாற்றிலிருந்து பெற்றுக் கொண்ட பெறுமதி வாய்ந்த பண் பாடுகளுக்கு அமைய ஒருதீர்வைக் கண்டடைவதே இன்றுள்ள சவாலா கும். நகரமயமாக்குதலுக்கு உட் பட்டுள்ள சமூகத்துக்காக முதியவர் களது அறிவையும் அனுபவத்தை யும் பயன்படுத்திக்கொள்வதற்கும் முதியோர்களுக்கான பாது காப்பை உறுதி செய்வதற்கும் முதி யோருக்கான தேசிய செயகத்தி னால் எடுக்கப்பட்டுவரும் நடவ டிக்கைகள் பாராட்டத்தக்கவை. வயோதிபர்களுக்கு ஒரு பாதுகாப் பான சமூகத்தை உருவாக்குவதன் மூலமே அவர்களது மனக்குறை களைப் போக்க முடியும். சர்வதேச முதியோர் தினத்துடன் இணைந் ததாக நடைபெறும் தேசிய முதி யோர் தினக் கொண்டாட்டங்கள் முழுமையாக வெற்றி பெற வாழ்த் துகிறேன் எனக் குறிப்பிட்டுள் ளார். (ஐ-10)

## சிறுவர் தினத்தில் விசேட வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.01
உலக சிறுவர் தினமான இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் விசேட வேலைத்திட்டங்களை மேற் கொள்ளுமாறு வடமாகாண கல் விப் பணிப்பாளர் செ.உதயகுமார் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அறிவித்துள்ளார். பாட சாலை மாணவர்களுக்கு உள மற்றும் ஆளுமை விருத்திக்காக அவர்களுக்கு அன்பு காட்டுதலும் தற்காலசமூகத்தில்உருவாகி வரும் பாதுகாப்பற்ற சூழலில், சிறுவர் களின் பாதுகாப்பு தொடர்பாக ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற் றும் மூத்தோர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பாடசாலை மட்டத்தில் அறிவூட்டல் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறார்களின் பல்விதத் திறமை களை முன் வைப்பதற்கான சந்தர்ப் பங்களை வழங்குவதுடன் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு சம்பந் தமான கருத்துரைகளை வழங்கு மாறும் அறிவித்துள்ளார். (ஐ)

## சிறுவர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்க அறிவிப்பு

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் எதிர் வரும் 4 ஆம் திகதி வரை சிறுவர் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிக்கு மாறு அனைத்துப் பாடசாலைக ளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாரத்தில் அனைத்துக் கல்வி வலயங்களிலும் அனர்த்தத்தைக் குறைப்பது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர் பாக பெற்றோர் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் இந்த வேலைத் திட்டங்களுக்கு அந்தந்தப் பிரதேச சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுப் பொது சுகா தார பரிசோதகர் ஆகியோரின் உதவியுடன் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது.

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஒக்.01
புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ்த்தூது தனிநாயகம் தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மதுரம் சதுக்கத்தில் இடம் பெறவுள் ளது. இந்த நிகழ்வில் பிரதம விருத்தினாரக புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவனும் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்து கொள்வார். (ஐ-23)

# மகாத்மா காந்தியின் 146ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.01
மகாத்மா காந்தியின் 146ஆவது பிறந்ததினம் நாளை வெள்ளிக் கிழமை கொண்டாடப்படவுள்ளது. இந்த நிகழ்வை முன்னிட்டு யாழ்ப் பாணம் போதனா வைத்தியசா லைக்கு முன்பாகவுள்ள காந்தியடி களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல், மலரஞ்சலி, நினைவஞ்சலி போன்ற நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற வுள்ளன. அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராச நாயகம் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தி லுள்ள இந்தியத்துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்வார். இதேவேளை உருத்திரபுரத்தில்அமைந்துள்ளகாந்தி நிலையம், சிறுவர் இல்லத்திலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இல் லப் பொறுப்பாளர் ம.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு ஏற்பாட் டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (10)

## சிறுவர் தின நிகழ்வுகள்

வவுனியா,ஒக்.01
சர்வதேச சிறுவர் தினத்தை முன் னிட்டு வவுனியா குஞ்சுக்குளம் பண் டாரவன்னியன் வித்தியால யத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று வியா ழக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலை அதிபர் இ. அருந்தவ லிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வில் பிரதம விருந் தினராக வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந் தன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களான ம. தியாகராசா, ஜி.ரி. லிங்கநாதன், இந்திரராஜா, எம். ஸ்ரீ. நடராஜா, ஆகியோரும் கலந்துகொள்வர். நிகழ்வில் சிறுவர் களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சைக்கிள் சறுக்கி வீதியில் விழுந்து காயமடைந்த பெண் சாவு

யாழ்ப்பாணம்,ஒக்.01
சாய்வான வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது சறுக்கி விழுந்து சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பயனளிக் காது உயிரிழந்துள்ளார். எள்ளுக் காடு உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் சுந்தரி (வயது - 64) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த மாதம் 22 ஆம் திகதி கணவன் மனைவியான இருவரும் ஒன்றாகச்சைக்கிளில் சமுர்த்தி வங்கிக்குச் சென்று கொண்டிருந்த போது சாய்வான தரையில் சறுக் கியத னால் வீதியில் விழுந்தனர். அதில் மனைவி தலை மற்றும் நெஞ் சுப் பகுதியில் உட்காயங்களுடன் வாந்தி எடுத்த நிலையில் கிளி நொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படடார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பய னளிக்காது கடந்த 28 ஆம் திகதி அவர் உயிரிழந்தார். நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப் படைத்தார். (ஐ-4)

# தொழில் சேவை மத்திய நிலையம் மன்னார் மாவட்டத்தில் திறப்பு

மன்னார்,ஒக்.01
மனித வலு வேலைவாய்ப்பு திணைக் களத்தால் பொது மக்கள் தொழில் சேவை மத்தியநிலையம் நேற்று புதன்கிழமை வைபவரீதியாக மன் னாரில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வில் லியம் வேர்போஸ்ற் வினால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை ஐரோப்பிய ஒன்றி யம் வழங்கவுள்ளது. மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ். தேசபிரிய தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிலை யம் வட மாகாணத்தில் இரண்டா வது நிலையமாகும். உலகத் தரத்திலான இலங்கை ஊழியர் அணியினை உருவாக்குவதே இந்த நிலையத்தின் நோக்கமாகும்.



இதன் மூலம் தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை பெறு வதற்காக பதிவுகளை மேற்கொள் ளவும், பதிவு செய்தவர்களின் அறி வுத் திறமை, சிந்தனைக்கேற்றவாறு தனியார் துறையில் பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், பொருத்த மான தொழில் சார் பயிற்சிகளை பெறுவதற்கான தொழில் [illegible] நிறுவனங்களில் [illegible] பாடநெறிகளை பரிந்துரைக்கவும், தொழிலை எதிர்பார்க்கும் இளை ஞர்,யுவதிகள் மிகவும் பொருத்த மான தொழில் துறைகளை தேர்ந் தெடுப்பதற்குத் தேவையான தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்காகவும் இந்த நிலையம் மன்னாரில் திறந்து வைக் கப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார் மாவட்ட செயலக அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையத் துடன் வேலையற்றவர்கள் தொடர்பு கொள்வதற்குப் பொது மக்கள் [illegible] மனித வலு வேலை வாய்ப்பு திணைக்களம், மன்னார் மாவட்ட செயலகத்திலுள்ள மனித வலு அபிவிருத்தி உத்தியோகத்தர்க ளுடன் தொடர்புகொண்டு ஆலோ சனைகளை பெற்றுக் கொள் ளலாம் எனவும் தெரிவிக் கப்பட்டுள் ளது. இந்தத் திறப்பு விழாவில் மனித வள வேலைவாய்ப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எச்.யி. யி.ஜே. தர்மசேன, தேசிய தொழில் ஸ்தாபனத்தின் மனித வலு இணைப் பாளர் ஆர்.சிவபிரகாசம், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் உள் ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

## வயாவிளான் மத்திய கல்லூரியின் ஊர்திப்பவனியும் கண்காட்சியும்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வயாவிளான் மத்திய கல்லூரி சமூ கத்தினரால் மகிழ்வான சிறுவர் உலகத்தை நோக்கி எனும் தொனிப் பொருளில் உரும்பிராயிலிருந்து கல்லூரி வரையுமான ஊர்திப் பவனி யுடன் கூடிய கண்காட்சியும் நடைபெறவுள்ளது. உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய முன்றலில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஒளிச்சுடர் ஏற்றப்பட்டு கல்லூரி வரை பவனி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் கலந்துகொள்வார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் காந்தி ஜெயந்தி

யாழ்ப்பாணம்,ஒக்.01

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு டி யும், மெய்யியற் கழகமும் இணைந்து நடத்தும் காந்தி ஜெயந்தியும் உலக அஹிம்சை தினமும் நாளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன. காந்தி சேவா சங்கத்தின் உபதலைவரும்,யாழ்ப்பாண விஞ்ஞான சங்க பிரிவு டி யின் தலைவருமான ந.சிவகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக சமூகவியல்துறையின் தலைவர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கனும், கௌரவ விருந்தினர்களாக காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகமும், மெய்யியற்துறைத் தலைவர் கலாநிதி.க.கஜவிந்தனும் கலந்து கொள்வர். (ஐ-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் நீண்ட நாள் சங்கீத ஆசிரியராக கடமையாற்றி ஓய்வுபெற்ற

**கிருஷ்ணசாமி ஏரம்பமூர்த்தி**

(சங்கீத பூஷணம்,சைவப்புலவர், கலாபூஷணம்)

அவர்கள் 29.09.2015 இறைபத மடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்

யா/ சைதுநு விக்னேஸ்வர வித்தியாலயம்.

## 19 ஆவது அகவையில் பாலா



சின்னண்ணாவிற்கு ஒரு மடல்.
ஐப்பசி ஒன்றில் சிறுவர் தினமதில்
ஐஸ்வர்ய பொக்கிஷமாய் வந்துதித்த அண்ணாவே
வெளியுலகை சுற்றிப்பார்க்க விரும்பிய உம்மை
வையகமே சுமக்கிறதே இன்று- ஆனால்
கண்ணீராய் என்பதே என் கவலை
காரணம் அறிவாயா? கவிதையாய் வடிக்கவா?
சோளத்தின் முத்துக்களை என் வாயில் ஊட்டிவிட்டீர்
சோர்வுடன் கையில் பிஸ்கட்டுடன் எங்கண்ணா அகப்பட்டீர்?
கைகோர்த்து களிப்புடன் விளையாடுகையில்
கைநழுவும் என் சட்டையை சரி செய்யும் அண்ணாவே
சட்டையின்றி வெற்றுடம்புடன்
சன்னங்களுக்கு இரையாகினீரா?
அழிந்து போன டைனோசர் இனத்துக்காய் இரங்கியநீர்
அரக்கர் கைகளில் அகப்பட்டு துடித்தீரா அண்ணா
விண்ணுலகு உன்னை விரும்பி அழைத்ததால்
மண்ணுலகில் என்னை தவிக்க விட்டு விட்டாயா?
விடுகதையான உந்தன் கேள்விகளுக்கு
விடை சொல்ல வேண்டும் இன்னோர்பிறவி


அன்புத்தங்கை
அம்மு

(C19128)(10.15.17)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**மாணிக்கம் பூபாலசிங்கம்**



(ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர்- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை -யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சதுர்த்தி(01.10.2015)

இவ்வுலகில் நீங்கள்
இல்லை என்று தெரிந்தும்
தேடுகின்றோம் வாடுகின்றோம்......
தேறவில்லை இன்றுவரை
தெய்வத்தின் பேறுபெற்றஎம் தெய்வமே.....
மூவாண்டுகள் ஆனாலும் முடியாது எம் துயரம்
நின் ஆத்மா சாந்தியடைய
நிமலனை வேண்டுகின்றோம்......
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாரினில் 31.10.1953
பரந்தாளழியில் 03.10.2012

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி- பூபாலசிங்கம் [illegible]
மகள்- பூபாலசிங்கம் கனிதா

"தாயகம்"
ஆவரங்கால்
புத்தூர்

(65929) (12.15 16)

# கால்நடைகளின் இருப்பிடமாக மாறும் பூநகரியில் அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையம்

## அரச, தனியார் பஸ்கள் புறக்கணிப்பு

கிளிநொச்சி,ஒக்.01

பூநகரி சந்தியை அண்டிய பகுதியில் பூநகரி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையம் இ.போ.ச.பஸ்கள் உட்பட பயணிகள் வாகனங்களால் பயன்படுத்தாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இதனால் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையம் கால்நடைகளின் வாசஸ்தலமாக மாறும் அபாயம் உள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். போரினால் அழிவடைந்த பூநகரி நகர்ப் பகுதி சிறிது சிறிதாக அபிவிருத்தியடைந்து வருகிறது. சந்தியை அண்டிய பகுதிகளில் அரச திணைக்கள அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் போன்றவை அமைக்கப்பட்டு நகர்ப் பகுதி பழைய நிலைக்கு திரும்பியுள்ளன.

இந்த நிலையில் பிரதேச பொது மக்களின் வேண்டுகோளின் பயனாக சந்தியை அண்மித்தபகுதியில் பஸ்நிலையம்அமைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏ 32 வீதி வழியாக வரும் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் பஸ் நிலையத்துக்குச் செல்லாமல் சந்தியில் தரித்துச் செல்கின்றன. அதனால் பஸ் நிலையத்தில் காத்திருக்கும் மக்கள் பயணிகள் வாகனங்கள் வராததால் நீண்ட நேரம் காத்திருந்து, பூநகரிச் சந்திக்கு வந்து தமது பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது. பூநகரி வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் வரும் அரச அலுவலர்கள் உட்பட பயணிகள் பஸ் நிலையத்துக்கு அப்பால் உள்ள சந்திப் பகுதியால் தமது பயணத்தை மேற்கொள்வதால் பஸ் நிலையத்துக்கு செல்வதில்லையென இந்த வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள், வாகனச் சாரதிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சனசமூக நிலையங்களின் சொத்து விபரங்களைக் கோரும் பிரதேச சபை

வலி.தென்மேற்கு,ஒக்.01

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அவற்றின் சொத்துக்களை அறிய முன்வந்துள்ள பிரதேச சபை, இது பற்றிய சகல விவரங்களையும் குறிப்பிட்ட தினத்துக்குள் பிரதேச சபைக்கு அனுப்பி வைக்குமாறு சனசமூக நிலையங்களே கோரியுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சுமார் 80 இற்கும் அதிகமான சனசமூக நிலையங்கள் இருந்தபோதும் தற்பொழுது 60 வரையான சனசமூக நிலையங்கள் வரை தொடர்ந்து இயங்கி வருகின்றன.

சனசமூக நிலையங்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வரும் வலி.தென்மேற்கு பிரதேச சபை, சனசமூக நிலையங்களின் சொத்துக்கள் பற்றிய சகல விவரங்களையும் பட்டியலிட்டு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளது. இதையடுத்து விவரங்களை அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் சனசமூக நிலையங்கள் மேற்கொண்டுள்ளன. (ஐ-115)

# நூலுக்கான, ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.01

நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவையினரால் வெளியிடப்படவுள்ள நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சகல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எழுத்தாளர்களிடம் இருந்து கட்டுரைகள், கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கட்டுரைகள் நல்லூர்ப் பிரதேசத்தின் பண்பாடும் மாற்றங்களும், தமிழர் பண்பாடு, உலகத் தமிழர் பண்பாடும் யாழ். பண்பாடும் ஒப்பு நோக்கு, கலை பண்பாட்டின் வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த நிலையும் அதை நிவர்த்தி செய்தலும், யாழ். பண்பாட்டுச் சிறப்புக்களும் இன்று எதிர்கொள்ளும் பின்னடைவும் தீர்வுக்கான வழிகாட்டலும், உலக மேதைகளின் வாழ்க்கைச் சரித்திரம், இன்றைய கால மக்கள் அறியவேண்டிய மாற்றம், பின்பற்ற வேண்டிய விடயம், அறிவுசார் கட்டுரைகள், புதிய கண்டுபிடிப்புக்கள் என்ற தலைப்புக்களில் ஏழு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதப்பட வேண்டும் எனவும் ஆக்கங்களை எதிர்வரும்; 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கும்படியும் நல்லூர் பிரதேச செயலர் சிறி தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வடமாகாண கல்வித்திணைக்களம் உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.01

வடமாகாண பாடசாலைகளின் விசேட கல்விப் பிரிவில் கற்கும் கேட்டல் குறைபாடுடைய மாணவர்களுக்கு செவிப்புலன் கருவியும், பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்க மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறான தேவையுடைய மாணவர்களின் விவரங்களை உடனடியாக மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஈ – மெயில் மூலம் அனுப்பி வைக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அனைத்துக் கல்வி வலயங்களுக்கும் அறிவித்துள்ளார். அத்துடன் தேவையுடைய மாணவர்களின் மருத்துவச் சான்றிதழ்களை மாகாண விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்குமாறும் கேட்டுள்ளார். (ஐ)

# சாவகச்சேரி சந்தையில் கருங்குளவிகள் அட்டகாசம்

சாவக்கச்சேரி,ஒக்.01

சாவகச்சேரி பொதுச் சந்தையில் கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டுள்ள வாழைப்பழ விற்பனை நிலையத்தினுள் குடிகொண்டுள்ள கருங்குழவிகள் சந்தைக்குச் செல்லும் பொதுமக்களைத் துரத்தித் தாக்குகின்றன. இதனால் அந்த நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தகர்கள் அச்சத்தடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பழவகைகள் வாங்கச் செல்லும் பொதுமக்கள் அச்சத்தின் மத்தியில் வேறு பாதையால் சென்று பொருள்களை வாங்குகின்றனர். இதனால் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள வாழைப் பழங்களை அப்புறப்படுத்துமாறு நகரசபையினரைக் கேட்டுள்ளனர். (ஐ)

# சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.01

வடமாகாண சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் கலந்து கொள்வர். அன்றைய தினம் காலை 8 மணிக்கு முதியோர்களைக் கனம் கொள்வோம் எனும் விழிப்புணர்வு நடைபவனி கிளிநொச்சி காக்காகடைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி விழா மண்டபம் வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெறும். நிகழ்வில் முதி யோர்களின் கலை நிகழ்வுகளும் முதியோர் தினத்தையொட்டி முதியோர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும். (ஐ)

# காந்தி பிறந்த தினத்தில் மரநடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.01

மகாத்மா காந்தியின் 146 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கிராஞ்சிக் கிராமத்தில் மர நடுகை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பொதுமக்கள் வேம்பு, தென்னை, பனை, புளி, நாவல், இலுப்பை போன்ற மரங்களுள் ஏதாவது ஒன்றுக்கு மேற்பட்ட மரங்களை நட்டு கிராமத்தை வளமாக்குமாறும், மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும் என்றும் சரஸ்வதி பிருந்தாவனம் அறக்கட்டளை அறங்காவலர் சோ.க.தம்பிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-10)

## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளைக்கு முகாமையாளர் நியமிப்பு

சாவகச்சேரி,ஒக்.01

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளராக அ.கங்காதரன் வங்கியின் தலைமையகத்தினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றிய சாள்ஸ் நியூட்டன் ஜெகநாதன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதையடுத்து காரைநகர் கிளை முகாமையாளராக கடமையாற்றிய கங்காதரன் சாவகச்சேரி கிளையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## போக்குவரத்து விதிமுறையை மீறியவருக்கு அபராதம்

சாவகச்சேரி,ஒக்.01

போக்குவரத்து விதிமுறையை மீறி மோட்டார் சைக்கிளில் அதிக அளவு ஆள்களை ஏற்றிச் சென்ற நபரை சாவகச்சேரி நீதிமன்றம் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மோட்டார் சைக்கிள் சாரதியை நீதிவான் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவ அறக்கட்டளை நிலையம் அங்குரார்ப்பணம்

### அச்சுவேலி பிரதேச இளைஞர் குழு முன்னெடுப்பு

அச்சுவேலிப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவதற்காக உகரம் கல்வி அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. உகரம் கல்வி அறக்கட்டளையின் அங்குரார்ப்பண நிகழ்வு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வளலாய், இடைக்காடு, பத்தமேனி, தம்பாலை – கதிரிப்பாய், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி தெற்கு ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய அச்சுவேலி பிரதேச மாணவர்களின் கல்விவளர்ச்சிக்குஉதவுவதற்குஅமைப்புக்கள் எதுவும் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு தன்னார்வு இளைஞர் குழு ஏழு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ளவர்களையும் உள்ளடக்கிய நிலையில் உகரம் கல்வி அறக்கட்டளையை ஆரம்பித்து அதன் மூலம் கல்வி அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளது. உகரம் கல்வி அறக்கட்டளை அமைப்புக்குழு உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; உகரம் கல்வி அறக்கட்டளையின் வேலைத் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பப் பிரிவு (தரம்1 – தரம் 5) மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த வகையில் ஆரம்பப் பாடசாலை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியானகுழுக்கள்சென்றுமாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு இடையூறாக உள்ள காரணிகள் தொடர்பான தகவல்களை திரட்டி வருகின்றன. குறித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டுசம்பந்தப்பட்ட மாணவர்களுக்கான உதவிகள் பாடசாலை அதிபரின் மேற்பார்வைக்கு உட்பட்ட முறையில் வழங்கப்படும் – எனத் தெரிவித்தார். (ஐ–11)

## மகாதேவா ஆச்சிரமத்துக்கு 28 ஏக்கர் காணி அன்பளிப்பு

கிளிநொச்சி,ஒக்.01

மகாதேவா சைவசிறார் இல்ல ஆச்சிரமத்துக்கு 28 ஏக்கர் காணியை ஒரு குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். சுவிஸில் இருந்து வருகை தந்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நாகரட்ணம் தவராஜா தம்பதியினரும் அவர்களது மூன்று பிள்ளைகளுமாக இணைந்து அந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். கிளிநொச்சி திருவையாறு முதலாம் வாய்க்காலில் உள்ள 25 ஏக்கர் வயல்காணியும், 8ஆம் வாய்க்காலில் உள்ள 3 ஏக்கர் வீட்டுக்காணியுமாக மொத்தம் 28 ஏக்கர் காணியை இவ்வாறு அன்பளிப்பாக உறுதி முடிப்பு செய்து, ஆச்சிரமத் தலைவர் தி.இராசநாயகத்திடம் வழங்கியுள்ளனர். இதன் மூலம் இந்தக் காணிப் பயன்பாட்டின் ஊடாக தற்போது மகாதேவா சைவசிறார் இல்லத்தில் உள்ள 406 சிறார்களும் பயன்பெறும் நிலையேற்படும் என சுவிஸில் இருந்து வருகை தந்த நாகரட்ணம் தவராஜா தம்பதியினர் தெரிவித்தனர். இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் சில அன்பர்களும் மகாதேவா சைவசிறார் இல்லத்தின் வளர்ச்சி அபிவிருத்திக்காக வயல்காணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக ஆச்சிரமத் தலைவர் தி.இராசநாயகம் தெரிவித்தார். (ஐ–50)

### ஓய்வூதியர் தின விழாக் கொண்டாட்டம்

முல்லைத்தீவு மாவட்ட ஓய்வூதியர் தின விழாக் கொண்டாட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளுடன் அதிகாரிகளின் சொற்பொழிவுகளும் இடம்பெற உள்ளதால் ஓய்வூதியர் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

**வேலையாள்கள் தேவை**

**சங்கென் நிறுவனத்தின் யாழ் வேலைத் தளத்திற்கு ரைலர் Tiler (Tile பதிப்பவர்) தேவை.**

தொடர்புகளிற்கு : 071 864 3635
077 312 6610
077 592 9304

## பழமரக்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.01

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு(சொண்ட்) நிறுவனத்தால் பாடசாலைகள் மற்றும் பொதுநிறுவனங்களுக்குத் தேவையான பழ மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 077 2242394 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என் அந்த நிறுவனத்தின் தலைவர் ச.செந்துராசா தெரிவித்துள்ளார். (ஐ–ரி2)

**மலேசியாவில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வேலை வாய்ப்பு**

* சட்டபூர்வமான வேலை அனுமதிப் பத்திரம் (Original work Permit) 3 வருடங்களுக்கானது (அரசாங்க அனுமதிக்கட்டணம் மாத்திரம்)
* சம்பளம் - 1406 மலேசியன் றிங்கிற் (MYR)
* தங்குமிடம் ,சீருடை முற்றிலும் இலவசம்
* ஓரளவு ஆங்கில அறிவு அவசியம். உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:077 395 7291

குபேரன்

**கணக்கு பதிவாளர்கள் தேவை**

நெல்லியடியில் இயங்கும் தனியார் கணக்காய்வு நிலையத்திற்கு கணக்கு பதிவாளர்கள் தேவை.
தகைமை:G.C.E A/L வர்த்தகம், கணக்கியல் சித்தியடைந்தவர்கள்.
ஆண்,பெண் இருபாலாரும்

தொடர்பு கொள்ளவும்:
077 905 8252
021 226 2941

**நன்றி தெரிவிப்பு**

கடந்த 13.09.2015 இல் இடம்பெற்ற தென் மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தின் பொதுச்சபைக் கூட்டத்தில் இடம்பெற்ற சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவின்போது எமது குழுவைச் சேர்ந்த 7 பேரையும் வெற்றி பெறச் செய்த பொதுச்சபை உறுப்பினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபையினர்.
தென்.கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்.

**உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு.......**

யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களே!
"மகா எலியா அக்ரோ புறடக்" ஆகிய எமது நிறுவனத்தால் கடந்த மூன்று ஆண்டுகளாக அதி உயர் விளைவு பெறப்பட்ட அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட றெட்லசோடா, கல்வைற் ஆகிய இன விதை உருளைக்கிழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் வாரம் இங்கு வரவுள்ளது. இது யாழ் மாவட்ட உருளைக்கிழக்கு உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாகவிற்பனைசெய்யப்படவுள்ளது. எனவே தங்களுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கினை மேற்படி சங்கத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும். மேலும் எமது நிறுவனத்தின் வடமாகாண விற்பனை இணைப்பாளர் இ.சௌந்தரராஜன் அவர்களுடன் தொடர்பு கொண்டு தொலை பேசியூடாகவும் பதிவினை மேற்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 077 615 5988 குறிப்பிட்ட அளவு விதை கிழங்கு மட்டும் இறக்குமதி செய்யப்படுவதால் உடன் பதிவை மேற்கொண்டு இலகுவாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**யாழ்ப்பாணம் மாநகர சபை**
**ஆதனவரி அறிவித்தல்-2015**

2015 ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்திற்கான ஆதன வரியினை2015.12.31 வியாழக்கிழமை பிற்பகல்3.00 மணிக்கு முன்னராக எவ்வித தண்டமுமின்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணங்களுக்கு மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் விவரப்படி விறாந்துச் செலவு அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகின் றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள்-15%
ஏனைய காணிகள்-20%

நிலுவை உட்பட 2015 ஆம் ஆண்டுக்கான வரியினைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளை சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 252 (1) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கைப் பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாக செலுத்துவோர் " மாநகரசபை ஆணையாளர் யாழ்ப்பாணம்"என அனுப்பிசெலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்

ஆணையாளர்.

Vocational Training Authority

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## Vacancies for the Bakery Trainer

The **Vocational Training in the North and East of Sri Lanka** (VTN) project is a bilateral cooperation between the Democratic Socialist Republic of Sri Lanka and the Federal Republic of Germany. The project is implemented by Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH and the Kreditanstalt für Wiederaufbau (German development bank - KfW) on behalf of the German Federal Ministry for Economic Cooperation and Development (BMZ). The project is co – funded by the State Secretary for Migration (SEM) of the Government of Switzerland. The Sri Lankan governmental partner is the Ministry of Skills Development and Vocational Training.

GIZ - VTN project supports the Vocational Training Authority (VTA) in order to provide demand driven vocational training in the region and improve training capacities at the NVQ levels 3 in Bakery sector and enable candidates from the region to obtain the required entrance qualification for further training, existing vocational training providers in the Northern Province is promoted.

The applications invitedfrom trainers to train in the bakery sector in the Vocational Training Authority (VTA)training centres in Kilinochchi and Mullaitivu districts.

### Trainer in Bakery

**Educational qualification:**

- Should have passed G.C.E (O/L) examination in six (06) subjects with mathematics and four (04) credit passes including Tamil / Sinhala in not more than two sittings.

**Vocational Qualification:**

- Should have obtained a government recognized vocational qualification of NVQ level 4 or above or a vocational training certificate of not less than 3 year duration from a recognized institution.

**Experience:**

- Minimum one year (01) local or overseas experience in the relevant field will be considered an added qualification.

**Age Limit:** Not less than 18 years and not more than 45 years.

**General Competency:**

- Maintain discipline and work ethics personal grooming
- Ability to deal with challenges
- Positive attitude
- Commitment to the gender equity, equality and social inclusion

Interested candidates should send their CV along with copies of relevant certificates by post to Dr. Siddhika Senarathne, Director – Planning and Research Vocational Training Authority (VTA) 354/2 "Nipunatha Piyasa", Elvitigala Mawatha, Colombo 05, or Email: siddhika@vtasl.gov.lk on or before **10th October 2015.**

(C19127)(10.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு 23 06 1946



இறப்பு 25 09 2015

## இராசையா சண்முகலிங்கம்

(பிரபல வர்த்தகர் - மகாலட்சுமி ஸ்டோர்ஸ், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் - மாங்குளம்)

யாழ். புங்குடுதீவு கிழக்கு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு - 15, இல. 354, அளுத்மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சண்முகலிங்கம் அவர்கள் 25-09-2015 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா (பள்ளிமடு), செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஐயம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பூங்காவனம் (பூங்கா) அவர்களின் அன்புக் கணவரும், சண்முகவேல் (Stromso Sports Pub உரிமையாளர் - நோர்வே) அவர்களின் அன்புத் தந்தையும், கோமா (கவிதா - நோர்வே) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சோமாஸ்கந்தன், பூலோகசிங்கம் (லண்டன்), கோணேசலிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலாம்பிகை (பிரான்ஸ்), கனகராசமணி (லண்டன்), இராஜேஸ்வரி (நோர்வே), காலஞ்சென்ற கதிர்காமு (கனடா), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), சிவபாதம் (கனடா), காலஞ்சென்ற பரிமளாதேவி, மணிவண்ணன் (சுவிஸ்), சுரபி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீகாந்தன் (லண்டன்), சசிகாந்தன் (லண்டன்), ஞானகாந்தன் (பிரான்ஸ்), ஜெயகாந்தன் (இலங்கை), பிறேம்காந்தன் (பிரான்ஸ்), சுபோதினி (ஜெர்மனி), விஜயலட்சுமி (இலங்கை), ஜீவலட்சுமி (ஜெர்மனி), கண்ணன் (இலங்கை), சுதர்சன் (லண்டன்), கௌரிசங்கர் (நோர்வே), பார்த்தசாரதி (நோர்வே), அபிராமி (நோர்வே), சிவகலா (ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், உதயரூபி (லண்டன்), கருணாநிதி (பிரான்ஸ்), புண்ணியமூர்த்தி (இலங்கை), அருட்செல்வன் (ஜெர்மனி), ஞானமலர் (லண்டன்), லதா (இலங்கை), பத்மபிரியா (பிரான்ஸ்), பிருந்தா (பிரான்ஸ்), விரோஜினி (நோர்வே), அமுதா (லண்டன்), குலசேகரம் (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகாதேவா கேதீஸ்வரி தம்பதிகளின் அன்பு சம்பந்தியும், சந்திப் (நோர்வே), சபிதா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில்(30.09.2015)புதன்கிழமை காலை 11.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு, இன்று (01.10.2015) வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00-மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :- S. சண்முகவேல் (மகன்) - 0774233184
R. கோணேசலிங்கம் (சகோதரர்)

(C39211)(10.15)

தோற்றம் 20 . 09 . 1929



மறைவு 27 . 09 . 2015

## திருமதி பாக்கியம் குலசேகரம்பிள்ளை

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் குலசேகரம்பிள்ளை 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசகுமாரி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சந்திரவதனா, காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் வசந்த மலர், ருக்மணிதேவி, போகேந்திராதேவி, ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தம்பிநயினார் மற்றும் கலாவாணி, காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், பரராசசிங்கம் மற்றும் லிங்கதேவன், சரவணபவானந்தன், கெங்காதரன் தமிழ்வாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சியாமளா, சூரியகுமாரி, காலஞ்சென்ற சுயோதினி மற்றும் செல்வாஜினி, சாரங்கா, முகுந்தன், கீர்த்தனா, சுதர்சன்,விக்கினராஜா, சுபாஜினி, ரோகினி, கார்த்திகாயினி,நிலானி, நிஷானி, தினேஸ்,சஹானா,கௌசிகா,கொலன்சியா,சோபியா, ஹரிஷ்மா, அர்ச்சனா, கௌதமன்,ஐங்கரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2015)வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

(85030)
(13.15.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான சூழல்; நால்வருக்கு தலா மூவாயிரம் அபராதம்

சாவகச்சேரி,ஒக்.01

டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்த மீசாலைப் பகுதியைச் சேர்ந்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வீடுகளைப் பூட்டிவிட்டுச் சென்றோரின் வீட்டு வாசல்களிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் காணப்பட்ட குடியிருப்புகள் மற்றும் காணிகளுக்கு வெளியிலும் மஞ்சள் அறிவித்தல்களை ஒட்டிவிட்டு, மூன்று தினங்களுக்குள் குறித்த குடியிருப்பை அல்லது காணியை துப்பரவு செய்து அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டிருந்தனர். மஞ்சள் அறிவித்தலை உதாசீனம் செய்து தொலைபேசி மூலம் அறிவிக்காத இடங்களில் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் மீண்டும் பரிசோதனைகளை மேற்கொண்டபோது துப்புரவு செய்யப்படாமல் காணப்பட்டதால் அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் கடந்த 29 ஆம் திகதி தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் நால்வருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம் மீசாலை வடக்கு, மட்டுவில், சாவகச்சேரி நகரம், மீசாலை ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாட்டில் 183 குடியிருப்புகள் மற்றும் காணிகளுக்கு அறிவித்தல் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அலங்கார ஆபரண உற்பத்திப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஒக்.01

யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையினரால் இரு நாள் அலங்கார ஆபரண உற்பத்திப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறி எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தப் பயிற்சி நெறிக்கான முற்பதிவு களை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் கச்சேரிக்கு முன்பாகவுள்ள யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் காரியாலயத்தில் மேற்கொள்ளுமாறு யாழ். கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதிப் பணிப்பாளர் சி.சிவகங்காதரன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

# மரண அறிவித்தல்

## கந்தையா தவம் (பவுண்ராஜா)

(பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவம் (பவுண்ராஜா) நேற்று (30.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவரர்களான சுப்பிரமணியம் - செல்லக் கண்டு தம்பதியரின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்புக் கணவரும், கமலோஜினி,கமலேந்திரன் (பிரான்ஸ்), விமலேந்திரன் (கனடா), ஜெயந்தினி (ஆசிரியை, யாழ்/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாசங்கர் (எழுதுநர் - யாழ்.பல்கலைக் கழகம்), மகிளினி (பிரான்ஸ்), சுஜித்தா (கனடா), கிருஸ்ணகுமார் (ஆசிரியர் - யாழ்/சென் ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பொன்மணி மற்றும் பொன்ராஜா, தங்கராஜா, மோகனராஜா, இராஜேஸ்வரி, சாந்தினி, வதனி, பாலேந் திரன், பாமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் கமலேஸ்வரி, சந்திரவிம்பம், கனகம்மா, கோவிந்தராஜா, திருச்செல்வம், அருமைத்துரை, சுமதி, புவனேந்திரன், சந்திரகலா, கலாமாலினி, கலாதரன், கலாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரூரன், ஆரபி, ஆரணன், ஆருத்துரன், ஆருக்ஷா, சுபாரகா, சேஜிதன், சுலக்ஷிகா, சஜித், சஜானி, சகானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 12.30 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.34/1, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(65046,11,16,17)

தகவல் :
திருமதி த.கலாவதி (மனைவி)
076 896 9844

## இளைஞர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஒக்.01

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாடகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசார பகுதியினரால் நடத்தப்படவுள்ள குறித்த பயிற்சியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை நல்லூர் பிரதேச செயலக கலாசார பகுதியில் மேற்கொள்ளுமாறு நல்லூர்ப் பிரதேச செயலர் சிறி தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

## சிறுவர்,முதியோர் தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.01

சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட ஆசிரிய ஆலோசகர் திருமதி ம.ஜெயரஞ்சினியும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் தி.சக்தியும் கலந்துகொள்வர். (ஐ-10)

## பாம்பினால் கடியுண்டார் குடும்பஸ்தர்

சாவகச்சேரி,ஒக்.01

படுக்கையில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் பாம்பினால் கடியுண்டார் .

இந்தச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி நள்ளிரவு க்ச்சாய் தெற்கில் இடம் பெற்றது. பாம்பினால் கடியுண்ட அதே இடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு கவிக்குமார் ( வயது 37 ) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)


## மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் நிறுத்தி வைப்பு


சாவகச்சேரி,ஒக்.01

மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்க சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.


சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த 29 ஆம் திகதி தனித் தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் அவர்களது சாரதிய அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்று சர்வதேச சிறுவர் முதியோர் தினம். கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர் சிலரது பதிவுகள்.(21)






## ஜப்பானில் களமிறங்கும் Amazon Fire TV

பல முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுடன் போட்டி போடும் வகையில் இலத்திரனியல் சாதன உற்பத்தியில் காலடி பதித்துள்ள அமேசன் நிறுவனம் Amazon Fire TV எனும் தொலைக்காட்சியை அறிமுகம் செய்யவுள்ளது.

முதன் முறையாக இந்தத் தொலைக்காட்சியானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜப்பானில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தொலைக்காட்சியானது 4K Ultra HD தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளதுடன், குரல் வழிக் கட்டளை மூலம் கட்டுப்படுத்தக்கூடிய தொலை இயக்கி (Remote Controller) யையும் கொண்டுள்ளது. இதே வேளை இந்தத் தொலைக்காட்சியைக் கொள்வனவு செய்பவர்களுக்குப் பல்வேறு தொலைக்காட்சி அலவரிசைகளையும் கண்டுமகிழ்வதற்குப் பயன்படும் TV Stick சாதனத்தை 50 சதவீத விலைக்கழிவில் வழங்கவுள்ளதாக அந்த நிறுவனம் அதிரடி அறிவிப்பினையும் வெளியிட்டுள்ளது.




## அதிவேக சேவையைத் தரும் கூகுள் வொயிஸ் சேர்ச் (Google Voice Search)

உலகின் முன்னணி தேடுபொறி சேவையை வழங்கிவரும் கூகுள் தற்போது அனைத்து வகையான சாதனங்களிலும் குரல்வழி முறையிலான தேடலை அறிமுகம் செய்துள்ளமை பலரும் அறிந்ததே. எனினும் இந்தச்சேவையில் குரல்வழி மூலமாகக் கொடுக்கப்படும் கட்டளைகளைத் துல்லியமாக அறிந்து செயற்படுவதில் கடந்த காலங்களில் பயனர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர். இந்த நிலையில் இவ்வாறான தடங்கல்களை நீக்கி மேலும் வேகம் கூடிய குரல்வழிச் சேவையை அறிமுகம் செய்துள்ளதாக கூகுள் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட சேவையானது பயனரின் பின்னணியில் உண்டாகும் இரைச்சல்களை தவிர்த்து 10 மில்லி செக்கன் நேரத்தினுள் துல்லியமான முறையில் கட்டளையை உள்வாங்கும் திறன்கொண்டதாகக் காணப்படுகின்றது.

## வயர்லெஸ் மின்கலச் சாதனம்

அப்பிள் நிறுவனம் அண்மையில் iPhone 6S மற்றும் 6S Plus ஆகிய ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்திருந்தமை பலரும் அறிந்ததே. அறிமுகமாகி குறுகிய காலத்தில் கைபேசிச் சந்தையில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள இந்தக் கைபேசிகளுக்கான துணைச் சாதனங்களும் தற்போது அறிமுகமாகத் தொடங்கியுள்ளன. இதன் ஒரு அங்கமாக வயர்லெஸ் முறை மூலம் மின்கலத்தை சார்ஜ் செய்யக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தச்சாதனமானது உட் பகுதியில் மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்யக்கூடிய Lithiumdion Polymer மின்கலத்தைக் கொண்டுள்ளது.
இதன் உதவியுடன் iPhone 6S மற்றும் 6S Plus கைபேசிகளை 100 சதவீதம் வரையில் சார்ஜ் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயா?, காதலியா? எவரது உயிர் முக்கியம்

## சீனாவில் கேட்கப்பட்ட சிக்கல் கேள்வி

பீஜிங், ஒக்.1

தீப்பிடித்த கட்டடம் ஒன்றில் இருந்து நீங்கள் ஒருவரை மட்டும் காப்பாற்ற முடியும் என்று கட்டாயப்படுத்தப்பட்டால் நீங்கள் யாரைக் காப்பாற்றுவீர்கள் ? உங்கள் தாயையா ?அல்லது காதலியையா ? இந்தச் சிக்கலான கேள்வி சீனாவின் தேசிய சட்டத் தேர்வின் போது கேட்கப்பட்டுள்ளது. எதிர்கால வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளிடமே இந்த கேள்வி கேட்கப்பட்டுள்ளது.

இந்த தேர்வில் வெற்றி பெறுபவர்களே அங்கு வழக்கறிஞர்களாக பணியாற்ற முடியும். சட்டத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் அத்தனைக்கும் பதில் தரும் சீன சட்டத்துறை, இந்தக் கேள்விக்கும் தனது பதிலை அளித் துள்ளது.

சீன மக்கள் அனைவரும் தங்கள் தாயைக் காப்பாற்ற கடமைப் பட்டவர்கள் என அந்த பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோருக்கான கடமைக்கு பதிலாக காதலுக்கு முன்னுரிமை கொடுப்பது செய்யாத குற்றத்துக்கு சமம் என்று சீனாவின் சட்டத்துறை வெளியிட்ட சரியான விடையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த கேள்வி சீன மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஒருவரின் பெற்றோரை பாதுகாக்க வேண்டிய கடமையை ஆபத்தில் இருக்கும் மற்றவர்களை காப்பாற்றும் செயலோடு ஒப்பிடுவது கேலிக்குரியது எனச் சீன இணைய பயன்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சட்டப்படி மகன் தனது தாயைக் காப்பாற்றவேண்டும் என்று விளக்கிய மற்றொருவர், ஆனால் மற்றவர்களும் ஆபத்தில் இருக்கும்போது அந்த மகன் தனது தாயை மட்டும் காப்பாற்ற வேண்டும் என்று அந்தச் சட்டம் சொல்லவில்லை என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

# டுவீட்டரில் இணைந்தார் எட்வேர்ட் ஸ்னோடன்

மொஸ்கோ, ஒக்.1

அமெரிக்க அரசின் கண்காணிப்புத் திட்டங்கள் குறித்த விவரங்களை கசியவிட்டு சர்ச்சையை ஏற்படுத்திய அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் ஒப்பந்தகாரரான எட்வேர்ட் ஸ்னோடன் நேற்றுமுன்தினம் சமூக வலைத் தளமான டுவீட்டரில்இணைந்துள்ளார். அதில் அவர் இணைந்த சில மணிநேரங்களிலேயே சுமார் 3 இலட்சத்து 45 ஆயிரம் பேர் அவரது டுவிட்டர் கணக்கை பின் தொடரத் தொடங்கினர்.



அவரது முதலாவது டுவிட்டர் பதிவாக 'Can you hear me now?' என்ற கேள்வி அமைந்துள்ளது.

தனது சுயவிவரத்தில், தான் ஏற்கனவே அரசுக்குப் பணியாற்றி இருந்த நிலையில், தற்போது பொது மக்களுக்காக பணியாற்றி வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் உளவுத்துறைத் தகவல்களை வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்திய இவர், 2013 ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறினார். தற்போதும் அமெரிக்கா அவரைத் தேடி வருகிறது.

அவர் தற்போது மொஸ்கோவில் வாழ்ந்து வருகின்றார் என்று அமெரிக்கா கூறுகின்றபோதிலும், அவர் எங்குள்ளார் என்பது தொடர்பில் உண்மைத் தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை. (ற)

# அசாதாரண நிலைமைக்கு அமெரிக்காவே காரணம்

## சாடுகின்றார் ஈரான் ஜனாதிபதி

ஜெனிவா, ஒக்.1



தற்பொழுது மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்கும் மோதலுக்கும் அமெரிக்காவே காரணம் என்று ஈரான் ஜனாதிபதி ஹசன் ரௌஹானி குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கடந்த திங்கட்கிழமை உரையாற்றும்பொழுதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஈராக் மற்றும் ஆப்கனில் அமெரிக்கப் படைகளின் செயற்பாடுகள் மற்றும் இஸ்ரேலுக்கு தொடர்ந்து அமெரிக்கா வழங்கி வரும் ஆதரவு போன்றவையே மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமைகளுக்கு முக்கி யமான காரணமாக உள்ளது. உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட் டுள்ள சிரியா மற்றும் ஏமனில் மீண்டும் ஜனநா யக ரீதியிலான அரசுகளை ஏற்படுத்தத் தேவையான உதவிகளைச் செய்ய ஈரான் தயாராக இருக்கின்றது.- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிங்கப்பூரின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும்

லண்டன், ஒக்.1

சிங்கப்பூரின் புதிய அமைச்சரவை பிரதமர் லீ ஷியங் லூங்கால் கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப்பட்ட நிலையில் புதிய அமைச்சரவை இன்று வியாழக்கிழமை பதவியேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

20 அமைச்சர்களுள் பெரும்பாலானோர் கடந்த மூன்று தேர்தல்களிலும் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவம் உடையவர்கள் என்பதுடன், 55 வயதுக்குக் குறைந்தவர்களுமாவர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் சிங்கப்பூரின் மக்கள் செயல் கட்சி மகத்தான வெற்றி அடைந்தது. அதையடுத்து இந்தப் புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



காட்டுத் தீயை அடுத்து ஏற்பட்டுள்ள கடும் புகை காரணமாக இந்தோனேஷியாவின் ரியாவு மாகாணத் முதல் மேலும் இரு வாரங்களுக்கு அவசரகால நிலை நீடிக்கப்பட்டுள்ளது. வீதிகளின் தெளிவுத்தன்மை 5 குறைவாகக் காணப்படுகிறது. குறைந்தது இன்னும் 14 நாள்களுக்கேனும் அவசரகால நிலையை வேண்டியுள்ளது என்று ரியாவு மாகாணத்தின் பதில் ஆளுநர் தெரிவித்துள்ளார். அதேவேளை, மா இதுவரை சுமார் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் இந்தோனேஷியர்கள் சுவாச நோயால் பாதிக்கப் முகாமைத்துவ நிறுவனம் ஒன்றின் அறிக்கை கூறுகின்றது.

# தென்சூடான் மோதல் கு விசாரிக்க சிறப்பு நீதிம

## ஆபிரிக்க ஒன்றியம் தெரிவிப்பு

லண்டன், ஒக்.1

தென் சூடானில் 2013ஆம் ஆண்டு முதல் நிலவி வந்த கொடூர மோதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு விடுதலை பெற்ற தென்சூடானில்நிலவிவரும்மோதல்களுக்கு தீர்வை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஆபிரிக்க ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த மோதலின் போது அரச



# அகதிகள் படையெடுப்பால் திணறுகிறது ஜேர்

பேர்லின், ஒக்.1

அதிக எண்ணிக்கையான அகதிகள் ஜேர்மன் நோக்கிப் படையெடுப்பதால் அவர்களைச் சமாளிக்க முடியாது ஜேர்மன் அரசு திணறி வருகின்றது.

அவர்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதில் அரசு பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜேர்மனியின் பல பகுதிகளில் அகதிகள் நெருக்கடியான சூழலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.



அகதிகளாக வந்துள்ள மக்களை இதுபோன்ற சூழலில் தங்க வைப்பது அவர்களின் சுகாதார நிலையை நெடுங்காலம் பாதிப்புக்கு உள்ளாக்கும் என சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வு மாகாணத்தில் நேற்றுமுன்தினம்
ரிவுத்தன்மை 500 மீற்றரை விடவும்
ல நிலையை நடைமுறைப்படுத்த
தவேளை, மாசடைந்த வாயுவால்
ால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்
(ற)

# குறித்து
# திமன்றம்

மற்றும் கிளர்ச்சிக் குழுக்கள் ஆகிய இரண்டும் குற்றச் செயல்களில் ஈடு பட்டுள்ளன என்று விசாரணைகளி லிருந்து தெரியவந்துள்ளது.

தெற்கு சூடானில் சமாதான உடன் படிக்கையொன்று கடந்த மாதம் கையெழுத்தான போதிலும், அதனை யும் மீறி தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த 21 மாதங்களாக அரசுக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்குமிடையே இடம்பெற்று வரும் மோதலையடுத்து சுமார் 2.2 மில்லியன் மக்கள் தங்களது சொந்த இருப்பிடங்களைவிட்டு வெளியேறி யுள்ளன. (ற)

# ஜேர்மன் அரசு



கசால் மாகாணத்தில் அமைந் துள்ள ஓர் அகதிகள் முகாமில் பொலிஸாருக்கும் அகதிகளுக்கு மிடையே நடந்த மோதலில் 14 பேர் காயமடைந்துள்ளனர். 1000 பேர் தங்கக் கூடிய இடத்தில் ஆயி ரத்து 500 பேர் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

ஒவ்வொரு முறை உணவுக்காக வும், குளிக்கவும், காலைக்கடன் களைமுடிக்கவும் அகதிகள் பெரும் பாடுபடுவதாக சமூக ஆர் வலர் கள் குற்றம்சாட்டுகின்றனர்.

வங்குகள் பாதுகாப்பு சட்டங்க ளில் குறிப்பிட்டுள்ள அளவு இருப் பிட வசதிகள் கூட அகதிகளுக்கு ஜேர்மனி அரசு வழங்கவில்லை என்றும் அவர்கள் வேதனை தெரி வித் துள்ளனர்.

(ற–ரி4)

எச்

# ஐ.எஸ். தாக்குதல்களுக்கு திட்டமிடுபவர் அமெரிக்கர்

## தீவிரவாதிகள் பிடியிலிருந்து தப்பித்த பெண் தகவல்

வொஷிங்டன், ஒக்.1

ஐ.எஸ். அமைப்பின் முக்கிய பொறுப் பில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு வரே உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐ.எஸ். அமைப் பினரால் அடிமையாகப் பயன்படுத் தபட்டு தப்பித்து வந்துள்ள யாஷ்டி இனப் பெண் ஒருவரே இந்தத் தக வலைத் தெரிவித்துள்ளார்.

19 வயதுடைய நாடா என்ற பெண்ணே இவ்வாறு தப்பித்து வந்துள்ளார்.

"என்னை ஐ.எஸ். தீவிரவாதிகள் அபு அப்துல்லா அல் அம்ரிகி என்பவரிடம் விற்றனர். அவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஐ.எஸ் அமைப்பின் முக் கிய பொறுப்பிலும் அவர் உள்ளார். – என்று அந்தப் பெண் கூறியுள்ளார்.

தாக்குதல்கள் நடத்துவதற்கு திட்டம் தீட்டுபவராக அவர் இருந்து வரு கிறார். தாக்குதல் நடத்துவதற்கான வரைப்படங்களை அவர் தயார் செய்து தருவார்.

இதுவரை ஐ.எஸ் அமைப்பினர் வெளியிட்டுள்ள எந்த புகைப்படங்க ளிலும் அவரது ஒளிப் படம் இடம் பெறவில்லை. எதிரிகளால் பிடிக் கப்பட்டால் தற்கொலை செய்து கொள்வதற்காகவே தனது கழுத்தில் விசம் நிரப்பப்பட்ட குப்பியை மாட்டி வைத்துள்ளார். – என்றும் அந்தப் பெண் கூறியுள்ளார்.

(ற–ரி4)



# கடற்கரையில் திடீர் புதைகுழி மறைந்துபோன வாகனங்கள்

பிரின்ஸ்பேன், ஒக்.1

குயின்ஸ்லாந்தில் உள்ள ரெயின்போ கடற்கரையில் திடீரென புதைகுழி ஒன்று உருவாகியுள்ளது. அதற்குள் சுற்றுலாப் பயணிகளின் உடைமைகள், வாகனங்கள் என்பன மூழ்கிப் போயுள் ளன.


ரெயின்போ கடற்கரை எப்போதும் சுற் றுலாப் பயணிகளால் நிறைந்திருக் கும். கடற்கரை முழுவதும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள், சுற்று லாப் பயணிகள் என சன சந்தடியாகக் காணப்படும்.

இந்தநிலையில் குறித்த கடற்கரையில் திடீரென புதைகுழி ஒன்று உருவாகி யுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் உடைமைகள், வாகனங்கள் அவற்றுள் விழுந்து புதையுண்டுபோயின.

அங்கிருந்த சுற்றுலாப் பயணி ஒருவர் இந்தச் சம்பவம் குறித்துக் கூறுகையில், என் கண்முன்பாகவே பல லட்சம் டொலர் பெறுமதியான எனது வாக னம் அதற்குள் மூழ்கியது. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. – என்றார்.

புதைகுழி ஏற்பட்டதை அடுத்து அங் கிருந்த சுற்றுலாப் பயணிகளைப் பொலிஸார் பாதுகாப்பாக வெளி யேற்றினர்.

அண்மையில் அந்தப் பகுதியில் ஏற் பட்ட நிலநடுக்கம் காரணமாகவே குறித்த புதைகுழி திடீரென ஏற்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்த னர். (ற–ரி4)



# குண்டுஸ் நகரை மீளக் கைப்பற்ற ஆப்கன் படைகள் தீவிர தாக்குதல்

காபூல், ஒக்.1

தலிபான்களால் கைப்பற்றட்ட குண்டுஸ் நகரை மீட்பதற்கு ஆப்கன் அரச படைகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள் ளன. இந்தத் தாக்குதலில் தலி பான்களின் முக்கிய தலைவரும், அவரது மெய்ப்பாதுகாவலரும் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஆப்கன் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளபோதும், தலி பான் அமைப்பினர் அதனை மறுத் துள்ளனர்.

2001ஆம் ஆண்டு முதல் ஆப்கன் அரச படைகளுக்கும், தலிபான் அமைப்பினருக்கும் இடையே மோதல்கள் நடைபெற்று வரும் நிலையில் சில நாள்களுக்கு முன்னர் முக்கிய நகரான குண் டுஸ் தலிபான் அமைப்பினரின் கைகளில் விழுந்தது. இது தலிபான் அமைப்பினருக்கு மிகப் பெரிய வெற்றியாகக் கருதப் படுகின்றது.

இந்தநிலையில் குறித்த நகரை மீண்டும் கைப்பற்றும் நோக்கு டன் ஆப்கன் அரச படைகள் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதுகுறித்து ஆப்கன் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளதா வது:–

இராணுவத்தினர் கடும் தாக்கு தலை நடத்தி வருகின்றனர். அதில் நூற்றுக்கணக்கான தலி பான் அமைப்பினர் கொல்லப் பட்டுள்ளனர். அவர்களது உடல் கள் வீதிகளில் சிதறிக் கிடக் கின்றன. விரைவில் நகரை மீண் டும் கைப்பற்றுவோம்.– என் றார்.

அதேவேளை, ஆப்கன் அரசு தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பால் விடுக்கப் பட்ட காணொலி ஒன்றில் தம் மால் கைப்பற்றப்பட்ட ஆப்கன் இராணுவத்தினரின் வாகனங் களை தலிபான் அமைப்பு காண் பித்துள்ளது.

இந்தநிலையில் தொலைக் காட்சி ஒன்றில் கருத்துத் தெரி வித்த ஆப்கன் ஜனாதிபதி, நக ரில் வசிக்கும் மக்களை தலி பான்கள் சாதகமாகப் பயன் படுத்தி வருகின்றனர். நாம் விரைவில் நகரைப் பிடிப் போம். – என்றார். (ற–ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங் பூங்காவில் கடந்த சனிக்கிழமை வண்ணத்துப் பூச்சிக் கண்காட்சி நடத்தப்பட்டது. அதில் பல வண்ணமயமான வண்ணத்துப் பூச்சிகள் பார்வையாளர்களின் மனதைக் கவர்ந்தன. (ற–ரி4)

# சிறுவர் நலனில் அக்கறை கொள்வோம்.

உடுவிலூர் கலா

சிறுவர்களுக்கென வருகின்ற இந்தத் திருநாளைக் கொண்டாட எமக்குத் தகுதியுண்டா? இல்லை, சிறுவர்களால்தான் முடியுமா? நாளுக்கு நாள் பாலியலுக்காகவும், இதர தேவைகளுக்காகவும் வன்முறைக்குள்ளாகின்றனர் சிறுவர்கள். அதுமட்டுமல்ல போதைப்பொருள் கலாசாரத்துள் பலவந்தமாக உள்வாங்கப்படுகின்றனர். சிறுவர்கள் வருங்காலச் சிற்பிகள், வளம்மிக்க தூண்கள், நாட்டின் முதுகெலும்பு என்றெல்லாம் பேச்சளவில் சொல்கிறோம். எழுத்தளவில் எழுதுகிறோம். இன்றைய சிறுவர்கள் நாளை உயிருடன் இருப்பார்களா? என்பது பெரும் கேள்விக்குறியே. சிறுவர்களது உடல், உளம் என்பன பல தரப்பட்ட வழிகளிலும் பந்தாடப்பட்டு, நொறுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இன்றைய சமுதாயத்தின் நெருக்கடியான பிரச்சினைகள் பல சிறுவர்களை உள்வாங்கியுள்ளதை எவராலும் மறுக்கமுடியாது.



சிறுவர்கள் இன்றைய அரும்புகள், நாளை மலர்வதற்காகத் தம்மை அறிவாலும் அழகாலும் ஆயத்தப்படுத்துபவர்கள். பூவிலும் மெல்லிய மென்மை கொண்டவர்கள். ஒவ்வொரு குடும்பத்தினதும் பெறுமதிமிக்க பொக்கிஷம் இறைவனின் குழந்தைகள் என்று கூடச் சொல்வார்கள். சிறுவர்களது உடல் உள நலத்தேவைகள் அனைத்தும் உடனடியாகச் சிந்திக்கப்பட வேண்டும். அவர்கள் மனமகிழ்வுடன் வாழ வேண்டியவர்கள். பெற்றோரின் அரவணைப்பில் அன்பாக ஆளுமை செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களது குழந்தைப் பருவம், குழந்தைப்பருவமாகவே பார்க்கப்பட வேண்டும். சிறுபராயத்தில் தேவையான அன்பும், எதிர் காலத்துக்குத் தேவையான கல்வியும் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

பெற்றோரின் அசமந்தப் போக்காலும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பராமரிப்பற்ற, பாதுகாப்பற்ற தன்மைகளாலும் இன்றைய சிறுவர்களின் வேதனை சொல்ல முடியாதவை.

இன்று எமது மத்தியில் பரவலாக நடக்கின்ற இழிசெயல், பாலியல் வன்முறை ஆகும். எள்ளுக்காட்டில் மூன்று வயதுச் சிறுமி, காரைநகரில் பதினொரு வயதுச்சிறுமி, வவுனியாவில் பத்துவயதுச் சிறுவன், கம்பஹாவில் ஐந்து வயதுச் சிறுமி, செம்மணியில் பதினாறு வயதுச் சிறுமி, சக்கோட்டையில் பதினெட்டு வயதுச் சிறுமி என இன்னும் எத்தனையோ சிறுமிகள் காமுகர்களின் வன்முறைக்காளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். சிலர் அந்தக் காமுகர்களாலேயே கொலையும் செய்யப்பட்டுள்ளார்கள். உறவுகளே பேரம் பேசும் செயலாக அப்பா, அம்மா, அண்ணா, கிழட்டுத்தாத்தா போன்றோரும் பிக்கு, ஆசிரியர், சாமியார், போன்றோரும்

பாரபட்சமின்றி சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்கின்றனர். குழந்தைகளை எதற்காக இப்படிச் செய்கின்றார்கள்? குழந்தைகளை வன்முறை செய்கிறோம் என்கிற உணர்வே இல்லாமலா செய்கிறார்கள்? இன்று சிறுவர் பாலியல் வன்புணர்வுகளால் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்து மனநோய்க்கு


போதையில் தடுமாறவைத்து மதிப்பின்மையையும், அநாகரிக செயல்களையும் செய்யத் தூண்டுகின்றனர். போதைப்பொருள் உட்கொண்டு பல மாணவர்கள் வாள்வெட்டு, கொலை, களவு போன்றவற்றில் ஈடுபட்டு சிறைக்கைதிகளாக உள்ளனர்.

அதுமட்டுமல்ல, பாடசாலை நீர்த்

வந்தர்களின் வீடுகளில் வேலை செய்யும் சிறுவர்கள் அடிமைகளாக எடு பிடி வேலைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். உலக நாடுகளில் நடக்கின்ற போர்களில் எண்ணுக்கடங்காத சிறுவர்கள் கொல்லப்படுகிறார்கள். சிரியாப் போரில் 2014 இல் 1,680 சிறுவர்கள் பாலியல் வன் முறைகளுக்கும், 197 சிறு

ளனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது. எமது நாட்டில் ஒன்பது மாதத்தில் பத்துச் சிறுமிகள் கொலை செய்யப்பட்டும், 795சிறுமிகள், பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டும், 84 சம்பவங்கள் வன்முறைகளாகவும் இடம்பெற்றுள்ளன. பெற்றோரின் மறுமணத்தாலும் பல சிறுவர்கள் அநாதைகளாகியுள்ளனர். பெற்றோர் தமது சுய இன்பத்துக்காக பிள்ளைகளை அப்புறப்படுத்திவிட்டு தங்களது வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சில பாடசாலைகளில், ஆசிரியர்களால் மாணவர்கள் உடல், உள பாதிப்புக்கு ஆளாகித் தமது கல்விக்கே முழுக்குப் போடுகின்றனர். இந்த வகையில் அண்மையில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவி அதிபரின் பிடிவாதத்தால் கிணற்றுள் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள். இதைவிட வீதி விபத்துக்களில் சிறுவர்களின் உயிரிழப்புக்களும் முக்கிய இடம் பெறுகின்றன. பாடசாலைச் சீருடையுடனும் முதுகில் புத்தகப்பையுடனும் வரும் மாணவர்களை பெரும்பாலான நடத்துநர்கள் மிருகத்தனமாக வழிநடத்துவதைக் காணமுடிகிறது. அவர்களது கல்விக்கான நாளாந்த போக்குவரத்தில் பஸ் நடத்துநர்களின் கடுமையான சொற்கள் மோசமானவை. மற்றும் சீருடையுடன் வரும் மாணவர்களை ஏற்றாது தெருவிலே விட்டுச்செல்லும் அரச பஸ் சேவையினர் சிறுவரின் கல்வியைப் புறக்கணிக்கின்றனர். நேரத்தைச் சூறையாடுகின்றனர்.

இவ்வாறாகச் சிறுவர்கள் பலவழிகளிலும் இன்று வன்முறைக்காளாகின்றனர். மேற்குறிப்பிட்ட ஒவ்வொன்றுமே மிகநுணுக்கமாக ஆராய்ந்து முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்



**“ சிறுவர்களது உடல் உள நலத்தேவைகள் அனைத்தும் உடனடியாக சிந்திக்கப்பட வேண்டும். அவர்கள் மனமகிழ்வுடன் வாழவேண்டியவர்கள். பெற்றோரின் அரவணைப்பில் அன்பாக ஆளுமை செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களது குழந்தைப் பருவம், குழந்தைப்பருவமாகவே பார்க்கப்பட வேண்டும்.**

ஆளாகி வேதனையோடு வாழும் பெற் றோர் பலர் உள்ளனர்.

ஆடம்பர மோகத்தால் பணம் தேடுவதற்காக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சமூக விரோதிகள் சிறுவர்களான மாணவர்களுக்குப் பாக்காக, இனிப்பாக, குளிர்பானமாக போதைப்பொருள்களை விற்பனை செய்கின்றனர். அது [illegible] மல்ல, கஞ்சாவை மாணவர்களுக்கு விற்பனை செய்து அவர்களை

தாங்கியில் நஞ்சைக் கலந்து மாணவரை மயக்கமடையச் செய்கின்றனர். நடந்து முடிந்த போரில் பெற்றோரை இழந்து அநாதைகளாக உண்ண உணவின்றியே ஏராளமான சிறுவர்கள் உள்ளனர். அங்கவீனர்களாகவும் உள்ளனர். குண்டு [illegible] ராலும் கூட சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். செல்

வர்கள் வன்கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதோடு, 8,807 சிறுவர்கள் கொலையும் செய்யப்பட்டுள்ளனர். 2015இல் 11, 964 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதிகமான சிறுமிகள் காணாமற் போயுள்ளார்கள். ஹங்கேரி, சைபீரியா போன்ற நாடுகளில் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலுக்கும், மிளகு விசிறலுக்கும் சிறுவர்கள் ஆளாகியுள்

டியவையாகும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பதை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இணையத்தளத் தேடலில் ஆபாசப் பாதைக்குப் பயணம் செய்துவிட்டனர் சிறுவர்கள். எனவே நாம் பொறுப்புள்ளவர்களாக சிறுவர் நலனில் அக்கறை கொண்டு அனைத்து வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டு வரும் நாளே உண்மையான சிறுவர் தினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவதற்கு இந்த நாளில் திடசங்கற்பம் பூணுவோம்

**இ.இரவீந்திரன்,**
செயலாளர்,
கல்வி கலாசார, விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

இன்று சர்வதேச சிறுவர் தினம். இந்தத் தினத்தில் எம்தேசச் சிறார்களுக்கு வாழ்த்துக்களைக் கூறும் விருப்போடு இப்பந்தியை வரைய விரும்பி நான் தயாராகும் போது எனது மனதில் சேயா செதவ்மியின் அந்த கள்ளம் கபடமற்ற தெய்வீகக் களை நிறைந்த பிஞ்சு முகம், உச்சிக் குடுமி, எதையோ கூற விரும்பும் கண்கள் என்பன வலியோடு வந்து நிற்கின்றன.

பலவீனமானவர்களாக இருப்பதன் காரணமாக நாளாந்தம் பலியாகும் சேயாக்கள்..... , வித்தியாக்கள்...., கிரிஷாந்திகள்... ஆகியோரது நினைவுகள் தரும் வலிகளை ஒரு பெருமூச்சோடு ஒதுக்கி வைத்து விட்டு, இன்று எமது தேசத்தில் உலாவரும் அனைத்துச் சிறுவர்களுக்கும், இந்த நாளில் எனது மனம் நிறைந்த வாழ்த்தைத் தந்து நிற்கின்றேன்.

இயற்கைப் பாதுகாப்பு, மற்றும் அரவணைப்போடு உங்கள் இலக்கை அடைந்து பெரியோர்களாகி இப்புவியை வளப்படுத்த வாழ்கவளமுடன்.

இன்று உலகெங்கும் சிறுவர்களை மதிக்கும் வகையில், சிறுவர் உரிமைகளைக் கௌரவிக்கும் வகையில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தச் சிறுவர் தினக் கொண்டாட்டங்கள், இன்று சிறுவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்புக்கள் எந்த அளவுக்கு நியாயமானது என்பது பற்றிய ஒரு சந்தேகம் என்னுள் எழுகிறது.

சிறுவர்களையும் மனிதர்களாக மதித்து, மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளிலும் சற்று விசேடத்துவமான முறையில் அவர்களுக்கான உரிமைகளை அடையாளப்படுத்தி, அவர்களது நல்வாழ்வு, பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும், அது வெறுமனே வார்த்தைகளிலும் சட்டப்புத்தகங்களின் கறுப்பு எழுத்துக்களிலுமே அடங்கிப் போய்விட்ட ஒன்றாகவே இன்றும் உணர வேண்டியுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான உரிமைச் சாசனங்களது வரிகள் வளர்ந்தவர்களைப் போலவே சிறுவர்களும் சகல உரிமைகளையும் கொண்டவர்கள் என்று வலியுறுத்துகின்ற போதிலும், உண்மையில் சிறுவர்கள் தமது நலன்களை அனுபவிப்பதில், தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் பலம் குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். இது காரணமாக, சிறுவர்கள் தமது உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்புக்களை உரிய வகையில் வழங்க வேண்டியவர்களாக வளர்த்தவர்களே இருக்கின்றனர். எனவே இன்றைய இந்தக் கௌரவம் மிக்க நாளில் சிறுவர்கள் தொடர்பில், அவர்களுக்கான உரிமைகளைப் பேணுவது தொடர்பில், வளர்ந்தவர்களோடு நான் எனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகிலே மிக அதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டும், சேர்க்கப்பட்டும் உள்ள ஒரு பிரகடனம் உள்ளது என்றால், அது ஐக்கியநாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் பிரகடனங்களே. இந்தப் பிரகடனங்கள், உலகச் சிறுவர்கள் சகல விதமான உரிமைகளையும் பெற்று அவற்றை அவர்கள் அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களை அளிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. வேறு பல சர்வதேசப் பிரகடனங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த பல உலக நாடுகள் கூட இந்த சிறுவர் உரிமை சமவாய பிரகடனத்தை அங்கீகரித்து ஏற்றுள்ளமை சிறப்பானதாகும்.

**விசேட தேவைக்குரிய மாணவர்கள்**

மீத்திறனுள்ள மாணவர்கள் மற்றும் கற்றல் இடர்ப்பாடு, மாற்றுத்திறனுடைய சிறுவர்கள் தொடர்பிலும் அவர்களை மையப்படுத்திய விசேட கவனிப்பு மற்றும் அவர்களது மேம்பாட்டுக்கான வளங்களும் வாய்ப்புக்களும் எமது பாடசாலைகளில் மிகக்குறைந்த அளவுகளிலேயே உள்ளன. பொதுவாக மாகாண ரீதியில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் கூட இந்த வகைக்குள் அடக்கப்படக்கூடிய மாணவர்கள் தொடர்பான சரியான எண்ணிக்கையைக் கண்டறிவதும், அவர்களுக்குப் பொருத்தமான செயற்றிட்டங்களைத் தீட்டுவதும் தொடர்பில் ஒரு தெளிவான வரையறுக்கப்பட்ட பொறுப்பளிப்பை இனம் காண முடியாதுள்ளது. இது தொடர்பில் கல்வித்துறையும், சுகாதார சேவைகள் துறையும் இணைந்து செயற்பட வேண்டிய ஓர் அவசிய நிலை காணப்படுகின்றது. கற்றல் இயலாமை, மொழிக்குறைபாடு, மெதுவான உளவளர்ச்சி, உக்கிர மனவெழுச்சி, பல்லின இயலாமை, உளவியல் குறைபாடு மற்றும் வேறு சுகாதாரக்குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடி கற்றலில் இடர்ப்பாட்டை எதிர்கொள்ளும் பிள்ளைகள் தொடர்பில் அவர்களைக் கையாளப் பொருத்தமான மருத்துவ நிபுணர்களின் பங்களிப்பும் வழி காட்டலும் கல்வித்துறைக்கு மிக அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது. அத்துடன் அவர்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வளங்கள் உரிய காலத்தில் உரிய வகையில் கிடைப்பதை உறுதி செய்வதும் மிகப்பிரதானமான செயற்பாடாகவுள்ளது. இன்றுள்ள இயங்கு நிலையில், இவற்றை உரிய வகையில் நிறைவேற்றிக் கொள்வதில், ஓர் இடைவெளி உணரப்படுகின்றது. இதுவும் சீராக்கப்பட வேண்டியுள்ளது. இங்கு வேதனையுடன் குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் கற்றல் இடர்ப்பாட்டை எதிர்கொண்டு, விசேட உதவி தேவைப்படும் சிறுவர்கள் தொடர்பில், சிறுவர்களுக்காக இயங்கும் எந்த ஒரு அமைப்பிடமும் உறுதிப்படுத்தப்பட்ட, காலத்துக்கு காலம் சீராக்கம் செய்யப்பட்ட சரியான புள்ளி விவரங்கள் இல்லை என்பதாகும்.

**முன்பள்ளிச்சிறார்கள்**

ஆரம்பபிள்ளைப் பருவத்தினரது பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் வாய்ப்புக்கள் தொடர்பிலும் இன்று நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினரது கல்வி மற்றும் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் தேசிய ரீதியில் அல்லது மாகாண ரீதியில் சிறப்பான கொள்கை மற்றும் செயற்றிட்டங்கள் வரையப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. துரதிஷ்டவசமாக இன்றும் கூட ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களில் அதிகமானவை தனிப்பட்ட உரிமைக்கு உரியனவாகவே உள்ளன என இலங்கையில் சிறுவர்கள் தொடர்பான பரிந்துரைகளும் அவதானிப்புக்களும் என்ற அறிக்கையில் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளதும், பொறுப்புணர்வுடன் நாம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இது இந்தப் பருவத்துப் பிள்ளைகளிடையே சமமற்ற வளநுகர்வுக்கு வகை செய்கின்றன. இவை சீராக்கப்பட வேண்டிய பிரதானமான ஒரு விடயமாகும்.



**இலவசக்கல்வியும், இலங்கைச் சிறார்களும்**

இலங்கைத் தீவெங்கும் இலவசக் கல்வி தொடர்பிலான சட்டவாக்க சான்றாதாரங்கள் இருந்த போதிலும் கிராமப்புறச் சிறுவர்களுக்கும், வறிய குடும்பங்களது பிள்ளைகளுக்கும் கல்வியில் தொடர்ந்தும் மறைமுகமான பாரபட்சம் நிலவும் ஒரு நிலைமையே யதார்த்தமாக உள்ளது. இந்த நிலையை எமது சமூகத்தில் காணக்கூடிய தாகவே உள்ளது. இது கூட ஒரு வகையில் அதிக அளவான சிறுவர்களது உரிமை மீறல்களாகவே அமைகின்றன. இவை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். அதற்காக கிராமியப் பாடசாலைகள் வளமூட்டப்பட்டு, தரமுயர்த்தப்படல் அவசியமானதாகும். இதற்கேற்ற நடவடிக்கைகளை மாகாண சபைகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கும் அப்பால், பிள்ளைகள் கல்வி தொடர்பிலான தமது உரிமைகளை அனுபவிக்கும் போது, மாகாணங்கள், மாவட்டங்கள், பிரதேசங்களுக்கு இடையிலான சமத்துவமற்ற நிலைமைகளுக்கும் முகம் கொடுத்து வருவதனையும் காண முடிகிறது. குறிப்பாக ஆசிரியர் வளப்பங்கீடு, பாடசாலை பௌதிக வளப்பங்கீடு, என்பவற்றிலும் காணப்படும் சமத்துவமற்ற நிலைமைகள் சீராக்கப்படுவது, சிறுவர்களது உரிமைகளைப் பேணுவதற்குரிய பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக அமைகிறது.

**ஊடகங்களும் சிறுவர்களும்**

சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தல்கள் தொடர்பில் உணர்வுபூர்வமான தகவல்களை வெளியிடுதல் என்பது, சிறுவர் மீதான பாதுகாப்புக்கு உதவும் என சில ஊடகங்களும், அமைப்புக்களும், பொறுப்பான சில அதிகாரிகளும் கருதுவதுண்டு. ஒரு விதத்தில் இது நியாயமானதாகவும் தோன்றலாம். ஆனால், இத்தகைய உணர்வுபூர்வமான தகவல்களோ, அறிக்கைகளோ, சிறுவர் உரிமை மீறலுக்கு காரண மான அடிப்படை விடயங்களை, குறிப்பாக சமூக, பொருளாதார காரணிகளை பெரும்பாலும் ஆராய்வதில்லை. ஆரோக்கியமற்ற குடும்ப நிலை, அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத குடும்ப பொருளாதாரம், ஒற்றைப் பெற்றோரைக் கொண்ட குடும்பம், பெற்றோரே இல்லாது உறவினர் அரவணைப்பில் வாழும் சிறார்கள், பாதுகாப்பான வீடுகளற்ற வாழ்வு, சொந்த இடங்களில் இன்னமும் குடியேற முடியாது முகாம்களில் வாழும் சிறார்கள், தன் நலம் பற்றிய புரிதல் இன்மையோடு வாழ்வதற்காகப் போராடும் சிறார்கள் பற்றிய குடும்ப, சமூக பொருளாதார காரணிகள் பற்றிய புரிதல் இன்றி, நுனிப்புல் மேய்ந்து, உணர்வுகளைத் தூண்டும் செய்திகளை விற்கும் சில ஊடகங்கள் கூட உண்மையில் சிறுவர் உரிமைகளை சிதைக்கவே காரணமாகின்றன.

இந்த நிலைமை மாற்றப்படவோ அல்லது குறைக்கப்படவோ வேண்டுமாயின், சிறுவர்களுடன் தொடர்புபட்டு இயங்கும் அமைப்புக்களது பணியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு சிறுவர் உரிமைகள் பற்றிய பயிற்சிகளை உணர்வுபூர்வமாக வழங்கி விழிப்புணர்வூட்டுவது மிகவும் அவசியமாகும். அது மட்டுமன்றி இத்தகையவர்கள் சிறுவர்களுக்கான சமூக, பொருளாதார, கலாசார நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையில், தகவல்களையும், தரவுகளையும் சிறுவர்களை மையப்படுத்தி, பரவலாக்கக் கூடியவாறு செயற்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவதும் அவசியம். உதாரணமாக இவர்கள், சிறுவர்களை மட்டுமே இலக்காகக் கொண்டு அவர்களுக்கே ஏற்றதான வெளியீடுகளைப் படைப்பதற்கு வகை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் வட புலத்துச் சிறார்கள் மத்தியில், தென்பகுதிச் சிறார்களது மொழி, கலாசார பண்பாட்டு மேன்மைகளை எடுத்துச் சொல்வதோடு, தென்பகுதிச் சிறார்களுக்கு வடபுலத்துச் சிறார்களுடைய மொழி, கலாசார பண்பாட்டு மேன்மைகளையும் தேவைகளையும் நீதியான வகையில் எடுத்துச் சொல்லவும் துணிவு பெற வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஊடாக சிறுவர்கள் தமது உரிமைகளை தடையின்றி அனுபவிக்க ஊடகங்கள் உண்மையான பங்களிப்புச் செய்ததாக இருக்கும்.

**சிறுவர்களுக்கான கல்வி உரிமையை உறுதிப்படுத்தல்**

இலங்கை போன்ற அனேக ஆசிய நாடுகளிலுள்ள பெரும்பாலான சிறுவர்கள் சுரண்டலுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் ஆளாகி வருவதாக சிறுவர் பாதுகாப்பு அமையம் அடிக்கடி அறிக்கையிடுகிறது. இதற்கு அடிப்படைக் காரணமாக, வறுமை மற்றும் கலாசார ரீதியிலான சில காரணிகளும் அமைகின்றன என அது சுட்டிக் காட்டுகிறது. குடும்ப வறுமை காரணமாக சிறுவர்கள் வேலைக்குச் செல்லல், குடும்ப வன்முறைக்கு ஆளாதல், உட்பட போதைப் பாவனைக்கு அடிமையாதல் போன்ற காரணங்களினால், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இழந்து வீதியோரத்துக்கு வந்து விடும் நிலைமைகள் அவதானிக்கப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் இதனைக் குறைப்பதற்கு அல்லது இல்லாது செய்வதற்கு ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் ஆண், பெண் மாணவர்களுக்கென தனித்தனி விடுதிப் பாடசாலைகளை உருவாக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை மெல்ல மெல்ல வலுப் பெற்று, இன்று கல்வித்துறை சார்ந்த பலரிடமும் சமூகம் முன்வைக்கும் பிரதான விடயங்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. சிறுவர்களது உரிமை பற்றி கரிசனை கொள்ளும் ஒவ்வொருவருமே இக்கோரிக்கைகள் பற்றி முன்னிலைப்படுத்தி ஆராய வேண்டியுள்ளது.

**1939ஆம் ஆண்டில் கல்விக் கட்டளைச்சட்டம்**

எமது நாட்டில் பிள்ளைகள்– மாணவர்கள் செய்யும் குற்றங்களுக்கு வளர்ந்தவர்கள் வழங்கும் சரீரத் தண்டனைகளைத் தடை செய்யும் வகையில் கல்வி அமைச்சு 2005ம் ஆண்டில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. சிறுவர் உரிமை தொடர்பில் அக்கறை கொண்ட அனைவருக்கும் அது மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும், 1939ஆம் ஆண்டின் கல்விக்கட்டளைச் சட்டம் இன்னமும் இரத்துச் செய்யப்படாதிருப்பது ஒருபுறம் கவலையளிப்பதாக உள்ளது. மாணவர்கள் மீதான சரீரத்தண்டனைகள் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் உளப்பாதிப்புக்கள், மற்றும் நெருக்கீடுகள் பற்றி கல்வி அதிகாரிகள் வழிகாட்டலில் சிறுவர்கள், அவர்தம் குடும்ப உறுப்பினர்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களது பங்குபற்றல்களுடன் கல்விச்சமூகம் உட்பட விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை பரவலாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் சரீரத்தண்டனைகளுக்கு மாற்றீடான வழி வகைகளுக்கூடாக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் முறைகளைப் பயன்படுத்த ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

முடிவாக ........

**அன்பானவர்களே,**

2015ம் ஆண்டுக்கான இன்றைய சிறுவர் தினத்தில் இருந்து எமது தேசத்துச் செல்வங்களது சுபீட்சமான வாழ்வுக்காக, உயர்வான அவர்களது மேம்பாட்டுக்காக, எமது தேசத்தின் எதிர்கால மேன்மைக்காக இத்தேசத்து சகல பிள்ளைகளையும் எமது பிள்ளைகள்– எனது பிள்ளைகள் என நினைத்து நேசிப்போமா? இன்று இந்தப் பிள்ளை களுக்காக ஏதேனுமொரு நல்ல விடயத்தை ஆரம்பிக்க முடியுமெனில், அது எங்களுடைய எதிர்காலத்தில், எங்கள் வாழ்வில் எப்பொழுதாவது ஒரு ஆசீர்வாதமாக நிச்சயமாக திரும்பவும் எங்களை வந்து சேரும். ஏனெனில் குழந்தைகள் இறைவனது தூதுவர்கள்.

வாழ்க, வளமுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முதியோர், சிறுவர் பாதுகாப்பு; அனைவரது பொறுப்பும் கடமையும்

இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி: அனைத்துலக முதியோர், சிறுவர் நாளாகும். ஆண்டு தோறும் இந்த நாளை பன்னாட்டு அரசுகளும், சுயாதீன அமைப்புக்களும், தொண்டு நிறுவனங்களும் முதன்மை இடம் வழங்கி பல்வகை சேர்ந்த நலத்திட்டங்களையும் சிறப்பு நிகழ்வுகளையும் நடத்துகின்றன.

அந்த வரிசையில், வடமாகாணத்தின் பல பிரதேசங்களிலும் முதியோர் , சிறுவர் நலத்திட்டங்களும் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகளும் ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட உள்ளன.

ஆரோக்கியமான முதுமைக்கு அணி சேர்ப்போம்; எனும் தொனிப்பொருளில் முதியோர் வார விழா, கைதடி அரச முதியோர் இல்லத்தில் தொடர்ந்து நடைபெற உள்ளது. காலை நிகழ்வுகள், மாலை நிகழ்வுகள் என்று மூத்தோரை மகிழ்விக்கும் அம்சங்கள், அவர்கள் பங்களிக்கும் ஆற்றுகைகள் அளிக்கை செய்யப்பட ஏற்பாடாகி உள்ளது.

அவர்களுடன் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், சமுதாய நலநோக்கு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கனதியான நிகழ்வுகளை நடத்த உள்ளனர்.

அதேவேளை, யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் முதியோர்களுடன் சிறுவர்களும் கௌரவிக்கப்படும் நிகழ்வு, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் முதியோர், சிறுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும், அவர்தம் ஆற்றுகைகளும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

சிறுவர்கள், நாட்டின், பிரதேசத்தின் எதிர்காலப் பிரசைகள். முதியோர்கள் தத்தமது குடும்பத்தினருக்கு வாழ்வும் வளமும் வழங்கி, அவர்களை மட்டுமன்றி, தமது சமூகத்தையும் பிரதேசங்களையும் மேலோங்கச் செய்வதற்காகத் தங்களை உருக்கி, உழைத்து மிகப்பெரும் தியாகங்களை ஆற்றியவர்கள்.

மேற்குறிப்பிட்ட இருசாராரும் நாட்டின் பெரும் சொத்துக்கள். முதியவர்கள் சமூகத்துக்கும், சொந்தப் பிரதேசத்துக்கும் ஆற்றிய சேவைகள், அவர்தம் குடும்பங்களுக்கு மட்டுமன்றி, பிறருக்கும் பெரும் பயன்களை விளைவித்து சமூகங்களை மேலோங்கச் செய்தன.

அவர்கள் வயதால் தளர்ந்தாலும், மனதால் உரம் ஊட்டப்பட்டவர்கள். அவர்களின் பிந்திய மூப்பு நிலையை குறைவாகக் கொள்ளாமல், சமூகத்தின் துடிப்புள்ள மக்களாக மனதில் வைத்து, அவர்களுக்குத் தேவைப்படும் சேவைகளைச் செய்வது, இளையோர் பணியும், தட்டிக் கழிக்கக்கூடாத பொறுப்புமாகும்.

அவர்களிடம் அன்பு காட்டி, அவர்களுக்கு உரிய தேவைகளை, சேவைகளாகக் கொண்டு உதவ, இளையோர் தயக்கம் இன்றி முழு மனதுடன் தங்களைத் தயார்ப்படுத்த, இன்றைய நாளில் சங்கற்பம் செய்ய வேண்டும். தமக்கும் முதுமை வந்து சேரும் என்பதை ஒரு கணமேனும் மறுக்கலாகாது.

மறுபுறத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் பிந்திய கணிப்பின் பிரகாரம், உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள். பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே. 2012 ஆம் ஆண்டில் நடத்திய கணிப்பின் பிரகாரம் கிடைத்த புள்ளிவிவரம் இது.


அனைத்துலக மட்டத்தில், பன்னிரண்டு மில்லியன் சிறுவர்கள் நிர்க்கதி நிலையில் காலத்தை ஓட்டுகிறார்கள். அவர்களின் வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருக்கிறது.

எமது நாட்டில், சிறுவர்கள், சிறுமிகள் பாலியல் மனிதப் பேய்களால் துன்புறுத்தப்படுவது, வடக்கிலும், தெற்கிலும் அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. அதற்கு அடியெடுத்துக் கொடுத்தது புங்குடுதீவு மாணவி மீதான வன்புணர்வும் கொலையுமே, எனும் அளவுக்கு, எமது மண்ணின் கலாசாரமும் உறவுநிலைப் பிறழ்வும் காலால் மிதிபடும் நிலைக்கு உயர்கிறது!!

முதியோர்களைப் பாதுகாப்பதும், சிறுவர்கம் எதிர்காலத்தை வளம்மிக்கதாக ஆக்குவதும், ஒவ்வொரு பிரசைகளினதும், சமூகத்தினதும் பென்னம்பெரிய பொறுப்பு. அதனை உணர்ந்து உள்வாங்குவதற்கு ஒவ்வொருவரும் மனங் கொள்ளட்டும்.

# சிறுவர் துஷ்பிரயோகமும் சிறுவர் பாதுகாப்பும்

கந்தப்பு பரமேஸ்வரன்
(ஆசிரியர்,
கண்ணகை அம்மன்
வித்தியாலயம், கிளிநொச்சி)



**“ குழந்தை பிறக்கும்போது சுதந்திரமாகப் பிறக்கின்றது. பின்னர் அந்தப் பிள்ளை பல்வேறு இன்னல்கள், பிரச்சினைகள், அடிமைத்தனங்களுக்குட்பட்டு வாழ்ந்து வருவதை நாம் கண்முன்னே காண்கிறோம்.**

எந்த ஒரு மனிதனும் தனக்குரிய உள்ளார்ந்த சமகௌரவத்துடனும் மதிப்புடனும் பெறுமதியுடனும் வாழ்வதற்கு அவன் அனுபவிக்க வேண்டியுள்ள தூயசிந்தனையுடனான தார்மீகமே உரிமையாகும். இந்த உரிமை ஆண், பெண், சிறுவர்கள் எல்லோருக்கும் உரிய வெகுமதியான சொத்தாகும் என அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. சிறுவர்கள் என்போர் 18 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாரையும் உள்ளடக்கியவர்கள். இவர்கள் தமது எதிர்கால நலன்களுக்காக நிகழ்காலத்தில் தனித்துவமாகவும், சுயமாகவும் முடிவெடுப்பதற்கு வலுவற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய சிறார்களைப் பாதுகாப்பாகவும், அன்பான அரவணைப்பின் மூலமும் வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீகக் கடமை எம்முன்னே காத்துக்கிடக்கின்றது.

குழந்தை பிறக்கும்போது சுதந்திரமாகப் பிறக்கின்றது. பின்னர் அந்தப் பிள்ளை பல்வேறு இன்னல்கள், பிரச்சினைகள், அடிமைத்தனங்களுக்குட்பட்டு வாழ்ந்து வருவதை நாம் கண்முன்னே காண்கிறோம். இதன்மூலம் இந்தப் பிள்ளைகளது உரிமைகள் முழுமையாக மறுக்கப்படுவதையும் நிராகரிக்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் அனைத்து மனிதர்களது உதட்டிலும் உச்சரிக்கப்படுவது சிறுவர் துஷ்பிரயோகம் என்பதே. இது பல்வேறு இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில், பலவடிவங்களில் தினமும் அரங்கேறிய வண்ணம் இருக்கின்றது. இத்தகைய துஷ்பிரயோகமானது காலத்துக்கு காலம் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைவதாகக் காணமுடியவில்லை. இத்தகைய சிறுவர் துன்பியலானது எமது நாட்டிலும் அதிகரித்துச் செல்வதை அண்மைக்கால சிறுவர் துஷ்பிரயோகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்தச் சிறுவர் துஷ்பிரயோகங்களாக பின்வருபவை நோக்கப்படுகின்றன.

பாலியல் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், குடும்ப வன்முறைகள், உடல் ரீதியான துஷ்பிரயோகம் , பிள்ளைகளை அடிமைப்படுத்தி வைத்திருத்தல், பொருளாதார நலனுக்காக பயன்படுத்தல், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பயமுறுத்தல், தனிமைப்படுத்தல் என்பனவாகும்.

இத்தகைய துஷ்பிரயோகங்கள் எமது நாட்டில் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களாகப் பல காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல், வறுமை, அசாதாரண சூழ்நிலைகள், சட்டரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை என்பன சிறுவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு தடையாக இருந்து வருகின்றன. இதனைச் சந்தர்ப்பமாகக் களமமைத்துக்கொள்ளும் தீயசக்திகள் தத்தமது தேவைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்திக் குளிர் காய்கின்றன. இதனை [illegible] இன்று அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இளைஞர்கள், பாடசாலை ஆசிரியர்கள், குடும்பத்தின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என சிறுவர்களுடன் உறவு ரீதியாக நெருங்கியவர்களே அவர்கள் வாழ்வின் தீய சக்திகளாக இருப்பது மனவேதனையைத் தோற்றுவிக்கின்றது.

**சிறுவர் பாதுகாப்பு**

இன்று உலகில் அனைத்து நாடுகளிலும் பேசப்படுகின்ற விடயமாக சிறுவர் பாதுகாப்பு விளங்குகின்றது. பொதுவாக சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான வரலாற்றை நோக்கும்போது எல்லா நாடுகளும் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையால் 1991ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் வசதிகளின் கிடைப்பனவு தொடர்பான விடயங்களைப் பேணும் வகையில் ஒவ்வொரு நாடுகளும் தத்தமது நாட்டின் சிறார்களின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்புள்ள வகையில் நடந்து கொள்ளவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையிலும் இதை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 1998 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப்பட்டு இலங்கையிலுள்ள 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சட்ட ரீதியான அங்கீகாரம் பெற்ற அமைப்பாக அது செயற்பட்டு வருகின்றது. இந்தச் சபையின் கீழ் சட்டரீதியான மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இயங்கி வருகின்றது. இந்தக் குழுவில் அந்தந்த மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிபர் தலைவராகவும், உறுப்பினர்களாக மதத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மகப்பேற்று நிபுணர், குழந்தை மருத்துவ அதிகாரி, சட்ட வைத்திய அதிகாரி, சட்ட ஆலோசகர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், உளமருத்துவ அதிகாரி, சிறுவர் பாதுகாப்புச் சபைப் பிரதிநிதி , ஊழியர் பிரதிநிதி ஆணையாளர் என சிறுவர் சார்பான நலன்களில் அக்கறை கொண்ட சகலதுறைகளைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள் இயங்கி வருகின்றனர். இந்தக் குழுவின் முக்கிய செயற்பாடு, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விடயங்களைக் கண்காணித்து அறிக்கையிடலாகும். இந்தச் செயற்பாட்டை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் பாடசாலை மட்டத்திலான சிறுவர் பாதுகாப்புக் குழு, பிரதேச ரீதியான சிறுவர் பாதுகாப்புக்குழு, கிராம மட்டத்திலான அபிவிருத்திச் செயற்திட்டத்தினூடான சிறுவர் பாதுகாப்புக்குழு எனப் பல கிளை அமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகின்ற இந்தப் புனித நாளில் நாம் எல்லோரும் சிறுவர்களின் நலன்களிலும் பாதுகாப்பிலும் அதிபர், ஆசிரியர்கள், குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள், நண்பர்கள், இளைஞர்கள், பாதுகாவலர்கள் என அனைவரும் பிள்ளைகளது உரிமைகளில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவர்களது தேவைகள், விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுதல், பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல், அவர்களுக்கு வேண்டிய ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொண்டு அவர்களை எமது நாட்டின் எதிர்காலத் தலைவர்களாகவும், நல்ல பிரசைகளாகவும் உரிமைகளுடன் வாழ்வதற்குரித்துடையவர்களாக உறுதி செய்வதன் மூலம் சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்திக் கொள்வதுடன் இன்று சிதறிக்கிடக்கின்ற எம் சின்னஞ்சிறிய உள்ளங்களை ஒன்றிணைத்து தீய செயற்பாடுகளிலிருந்து காப்பாற்றி நாட்டின் வளர்ச்சிக்கும் கௌரவமான சமுதாய முன்னேற்றத்துக்கும் அவர்களைக் கொண்டு வருவதன் மூலமே சிறுவர் உரிமைகள் வலுவான நிலையில் இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# நவீன உலகின் பிரமாக்கள் சிறுவர்களே

மாங்காய்ப் பிஞ்சுகள் பழுத்து உதிரும் போதே நொந்துபோகும் மனிதவம்சம், வஞ்சமேயறியாத பிஞ்சுக்குழந்தைகள் துடி துடித்து உதிர்ந்து குதறப்படும் போது, செய்வதறியாது இறைவனையே திட்டித் தீர்க்கின்றது. அநியாயமும், அக்கிரமமும், அடாவடித்தனமும், அடக்குமுறையும், ஆணவமும் தலை தூக்கித் தாண்டவம் புரியும்போது இறைவனும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு உனக்கழகா என்று உரத்துப் பலர் கேட்பது நியாயமேயாகும். ஒன்றும் அறி யாப் பிஞ்சுகளைக் கசக்கிப் பிழிந்து உதிர வைத்து உயிரைப் பறிப்பதென்பது உலகத்தின் அனலைச் சுவாலையாக்கி உள்ளது. பிஞ்சுகள் காயாகிக் கனியாகி கௌரவமாகப் பயன்படுவதற்குச் சட்டங்கள் வாயிலாக, உரிமைகள் வாயிலாக சமூகங்கள் வாயிலாக, குறிப்பாகப் பெற்றோர் வாயிலாக வழிசெய்யப்பட்டேயாக வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் இது பற்றி ஆராயாமல் தவிர்க்கப்படும்போது பிஞ்சுகளின் அலறல் ஒரு போதும் சும்மா விட்டுவைக்காது. போதையின் பாதையைக் கட்டுப்படுத்த எவருமே அக்கறை செலுத்தாவிட்டால் ஒவ்வொரு வீடும் வருந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாமற் போய்விடும். ஆன்மிகமும், அரசியலும், அரசும் குழந்தைகள், பிள்ளைகள், சிறுவர்கள், இளைஞர்கள், குமருகள் விடயத்தில் அதீத அக்கறை காட்டாவிட்டால், உலகமே தோற்றுப் போய் விடும். சூட்டோடு சூடாக ஐக்கிய நாடுகள் சபைவரை உதிரும் பிஞ்சுகள் பற்றி அறிக்கைகளாக இல்லாமல் ஒவ்வொரு நாட்டிலும் அதுபற்றிய அதிரும் நடவடிக்கைகளினால் குழந்தைகள் வெல்லப்படுவார்களாயின், பாதுகாக்கப்படுவார்களாயின் அதுவே பெரும் பேறாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினால், சிறுவர் உரிமைகள் தொடர்பாகப் போதிய கவனம் செலுத்தப்பட்ட போதும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துன்புறுத்தல்கள் நிகழ்ந்த வண்ணமேயுள்ளன. இயற்கை கூடத் தண்டித்த வண்ணமே உள்ளது. இலங்கை தொடக்கம் அயிலன் குர்தி வரை சிறுவர்களின் கண்ணீர் ஆறாகிப் பெருகிய வண்ணமே உள்ளது.

இது தொடர்பாக அவர்களது உரிமைகள் பற்றிய தேவையை உலகம் அடிக்கடி ஞாபக மூட்டுகிறது. சிறுவர் தினம் இதற்கு மிகவும் பொருத்தமானதாகும்.

**சமவாயம்**

18 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்களாவர். இவர்கள் பேதமின்றி உரிமைகள் அனைத்தும் அனுபவிப்பதற்குத் தகுதியுடையவராவர். ஐ.நா. சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் உலக நாடுகள் அனைத்தும் உறுப்புரிமையைப் பெற்றிருக்கின்றன. இந்தச் சமவாயப் பட்டயத்தில் நாற்பத்துஇரண்டு உரிமைகளுக்கான அங்கீகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொரு பிரசைக்கும் உணர்த்தப்பட வேண்டிய பொறுப்பை ஒவ்வொரு ஊடக சாதனங்களும் வழங்குவது பேருதவியாக அமையும்.

1. 18 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்களாக மதிக்கப்படல்.
2. பாரபட்சம் காட்டாமை.
3. சிறுவர்களின் உயர்நலனில் அக்கறை.
4. உரிமைகளைச் சரிவரச் செயலுருப் படுத்தலில் முனைப்புடனிருத்தல்.
5. பெற்றோரின்வழிகாட்டலுக்கு மதிப்பளித்தல்.
6. வாழ்வதற்கும், முன்னேறுவதற்கும் உரிமை உண்டு என்பதை யாவரும் உணர்தல்.
7. பெயருக்கான பதிவையும், தேசிய அங்கீகாரப் பெறுமானத்தையும் ஏற்படுத்துதல்.
8. ஆளடையாளத்தைப் பேணுதல்.
9. பெற்றோருடனான உறவைப் பலப்படுத்தல்.
10. பெற்றோருடன் பிள்ளைகள் மீண்டும் சேர்ந்து வாழும் அருகதை. (வெவ்வேறு நாடுகளில் பிரிந்து வாழும் சந்தர்ப்பங் களில்)
11. சிறுவர்கள் பிறிதொரு நாட்டுக்கு கடத்தப்படுவதைத் தடுக்கும் உரிமை.
12. சிறுவர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்தல்.
13. சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடும் உரிமை.
14. மதவழிபாட்டுச் சுதந்திரம்.
15. கூடும் சுதந்திரம், கருத்துப் பகிரும் வாய்ப்பு.
16. அந்தரங்கத்தைப் பேணும் உரிமை.
17. பொருத்தமான தகவல்களை பெறும் உரிமை.
18. பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்களுக்கான பொறுப்புக்களை உதாசீனம் செய்யாது வரவேற்றல்.
19. இம்சைகள் மற்றும் புறக்கணிப்பிலிருந்து பாது காப்புப் பெறும் உரிமை.
20. அநாதரவிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
21. தத்தெடுப்புக்குரியவர்களாக இருந்தாலும் சகல உரிமைகளும் வழங்குதல்.
22. இடம்பெயர்ந்த பிள்ளைகளின் பாதுகாப்புக்கு சம்பந்தப்பட்ட நாடுகளின் பங்களிப்பு.
23. மாற்றுத்திறனாளிகளுக்கும் சமவுரிமை, சமபாதுகாப்பு , சமவேலைவாய்ப்பு.
24. சுகாதார நலன் பேணும் சேவைகளைப் பெறும் வாய்ப்பு.
25. தொடர்ச்சியாகக் கண்காணித்தல், கரிசனை காட்டுதல்.
26. சமூகப் பாதுகாப்பு அனுகூலங்களைப் பெறும் வாய்ப்பு.
27. வாழ்க்கை நிலையைத் தரம் வாய்ந்ததாக அமைத்துக்கொள்ளும் உரிமை.
28. இலவசக் கல்விக்கான வாய்ப்பு.
29. சிறந்த பிரசையாவதற்கான பொறுப்பு.
30. சிறுபான்மையினருக்கான சமவாய்ப்பு.
31. பொழுதுபோக்கு அம்சங்களுடன் பங்காற்றும் வாய்ப்பு.
32. அச்சுறுத்தல்களிலிருந்தும், சுரண்டல்களிலிருந்தும் பாதுகாப்பு.
33. போதைகளிலிருந்து விலகும் உரிமை.
34. பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்தும், தூண்டுதல்களிலிருந்தும் பாதுகாக்கும் உரிமை.
35. சிறுவர் விற்பனை, பரிவர்த்தனை, கடத்தல் சம்பந்தப்பட்ட எவற்றிலும் அகப்படாதிருக்கும் உரிமை.
36. மேலே சொல்லப்பட்டவற்றுக்கு அப்பாலும் ஏற்படும் வதைகள், சுரண்டல்கள், பலாத்கார தீண்டல்களிலுருந்தும் தூரவிலகும் உரிமை.
37. சட்டவிரோதமான கைது, தண்டனைகளிலிருந்து நீங்கும் உரிமை.
38. ஆயுத கலாசாரம், போராட்டங்களிலிருந்தும் தூரவிலகி மறுக்கும் உரிமை.
39. புனர்வாழ்வு பெறுவதற்கான உரிமை.
40. நீதி கிடைப்பதற்கான முழுமையான ஆதரவு பெற, சிறுவர் நியாயாதிக்க நிர்வாக முறைகளைப் பேணும் உரிமை.
41. தேசிய மட்ட உயர் தராதரத்தில் வைத்துச் சிறுவர்களை மதித்தல்.
42. சகல வயதுவந்தவர்களும் உட்பட சிறுவர்கள் அனைவரும் தத்தம் உரிமைகளையும் அதேவேளை பாதிப்புக்களையும் அறிந்து தொடர்பு கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையோடும், 1992 இலக்க தொலைபேசி எண்ணோடும் தொடர்பு கொண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் பூரண உரிமை உண்டு. இதற்காகவே சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் விழிப்போடு செயற்பட ஆவன செய்யப்படுகிறது.



உலகையே அதிர வைத்த சிறுவர்களின் சாவுகள் உணர்வுள்ள மனிதர்களை உலுக்கி விட்டன. கம்பகா மாவட்டத்தில் – சேயா செதவ்மி (வயது – 5), பிரான்ஸ்ஸில் – பேஸ்டைன் (வயது – 3),வவுனியாவில் – திவ்யா (வயது – 17), புங்குடுதீவில் – வித்தியா (வயது – 17), காலி – அக்மீமனவில் – சிறுமி (வயது – 8), கிளிநொச்சியில் – சிறுமி (வயது – 5) இவையனைத்தும் சிறுவர் உரிமைகளை மீறிய சம்பவங்களாகும். ஒன்பது மாதங் களில் பத்துச் சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அல்லாம லும் சிறுவர் பெண்கள் என எழு நூற்று தொண்ணூற்று ஐந்து பேர் பாலியல் வன்புணர்வுக்கு ஆளா கியுள்ளனர். 2014 ஆம் ஆண்டில் 27 சிறார்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சிறுவர்கள் கடுமையாக நடத்தப்பட்டமை தொடர்பாக 197 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் ஆயிரத்து அறு நூற்று எண்பது (1680) பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. மற்றும் இளைய தலைமுறையினரையும் வயது வந்தவர்களையும் இலக்கு வைத்து இருபது மில்லியன் போதை மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டன. பால் சார்ந்த ஆபாசப் படங்கள் தாராளமாகப் பகிரப்படுகின்றன. தொலைபேசிகள் மூலமாக ஒன்றியிருந்த உறவுகள் விரிசலடைகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் முரண்பாடுகள் வளர்க்கப்படுகின்றன. குடும்பங்கள் வெளிப்பார்வைக்கு வடிவாகத் தெரிகின்றன. ஆனால் உள்ளுக்குள் எரிமலை வெடிக்கு மளவுக்கு தாய் தந்தை பிள்ளைகள் அயலவர்கள் என்ற உறவு சேதாரம் ஆகியுள்ளது.

ஒரு புகழ்பெற்ற கூட்டுக்குடும்பம் வெளியிலே அச்சாவாக இருக்கிறது. அந்தக் குடும்ப நிர்வாகி சொன்ன வார்த்தைகள் இதோ – "உங்களை எவரும் இழுத்துப் பிடிக்கவில்லை. போறவர்கள் போகலாம்" அந்தக் கூட்டுக் குடும்ப நிர்வாகியின் வார்த்தையால் அதிர்ந்தது வீடு.

கடுமையான தண்டனைகளை இயற்றுவதன் வாயிலாக சிறுவர்களின் உரிமைகளைச் செவ்வனே பாதுகாக்க முடியும்.

அல்லாமலும் சமூகமானது விழித்தெழுவதற்கு ஊதியத்தோடு கூடிய சிறுவர் பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மற்றும் உடை, நடை பாவனையை கூர்மைப்படுத்துதல் ஆகவே ஆகாது.

சிறுவர் உரிமைகள் தொடர்பாகத் தெரிந்துகொள்வதனால் பெறக்கூடிய பயன்கள்:–

பூரண அறிவு, விழிப்புணர்வு, தற்பாதுகாப்பு, முற்பாதுகாப்பு, சட்டநடவடிக்கை. தண்டனைகளை அறிந்து கொள்ளல், ஊடக அறிவு, பொதுசன அபிப்பிராயம், தொண்டு நிறுவனங் களோடு தொடர்பான உதவி, சமூக ஈடுபாடு, தனித மனித சமூகக் கடமை யுணர்வு, பரோபகார சிந்தனை, மனிதாபி மானப் பகிர்வு, எதிர்கால சந்ததிக்கான பாதுகாப்பு, உரிமையை வெல்லுதல், நல்ல பிரசைகளை உருவாக்கி உதவி புரிதல், பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சகல உரிமைகளோடும் வாழும் கௌரவமளித்தல், சீர்மியக் கருத்துக் களைப் போதிக்கும் வாய்ப்பு, தர்மகாரிய சிந்தனைகள் வலுப் பெறுதல், உலகத்தோடு ஒன்றிணைதல் போன்ற இன்னோரன்ன பயன்களை அறிந்து கொள்வதன் மூலம் ஒரு மனிதன் பூரண பிரசையாகும் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளுதல் – சாத்தியமாகும்.



**ஒன்றும் அறியாப் பிஞ்சுகளை கசக்கிப் பிழிந்து உதிர வைத்து உயிரைப் பறிப்பதென்பது உலகத்தின் அனலைச் சுவாலையாக்கி உள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூப்பு என்பது ஆப்பு அல்ல

த.கிருபாகரன்
(அத்தியட்சகர்)
- அரச முதியோர் இல்லம்
கைதடி



மூத்த பிரசைகளின் வாழ்வைப் பின்நோக்கித் திரும்பிப் பார்ப்பது இன்று வேண்டப்படும் ஒரு விடயமாக அமைந்துள்ளது. சனத் தொகையில் 20 வீதமாகவுள்ள மூத்த பிரசைகள், இன்று பெரிய அளவில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். பூதாகரமாய்ப் போயுள்ள பிரச்சினைகளின் நிலைத்த தன்மை, நிரந்தர வைப்பிலிடப்பட்ட தன்மையை எட்டியுள்ளது. அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை இன்று காட்சிப் பொருளாக்கப் பலர் முனைகிறார்கள். முதியோர் இல்லங்கள் முதியவர்களின் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வாக அமைந்தாலும் இவை நிரந்தரமானவை அல்ல. மூத்த பிரசைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கான பயணத்தில் அணிவகுத்துக் கொள்வதன் அவசியம் உணரப்பட்டிருக்கின்றதா? உணர்த்தப்பட்டிருக்கின்றதா? என்ற வினாக்களின் நெருடல் முதியவர் ஒருவரை அரச முதியோர் இல்லத்தில் பேச வைக்கின்றது.

'தம்பி, இன்றைக்கு ஐப்பசி ஒன்று' அவரது குரல் தடித்து சுரமேறிக் கொள்கிறது. கண்களின் இமைகளுக்குள் கண்ணீர் ஊற்றாகிக் கொள்கின்றது. வார்த்தைகளைக் கோர்வையாக்கிக் கொள்கின்றார்.

'எங்களை இண்டைக்கு மட்டும் நினைத்துப் பார்க்கிறார்கள். வருடத்துக்கு ஒருமுறை இப்படி எங்களுக்குக் கௌரவம் தரும் நிலையைப் பாருங்கோ. முன்பெல்லாம் கூட்டுக் குடும்பமாக வாழும்போது, எங்களுக்கு இருந்த கௌரவமும் பாதுகாப்பும், முக்கியத்துவமும் எங்கேயோ போட்டுது. எங்களுடைய கதையைக் கேட்க ஆள்கள் இல்லாமல் போச்சுது..........................

குடும்பத்தின் ஆணிவேராக இருந்த முதியவர்கள் என்ற நிலை இல்லாமல் போச்சுது.' அவரது எண்ணங்களின் கனதி மிகுதியால் எனது இருதயம் சூடேறிக்கொள்கின்றது.

"கோட்டிலேயும், றோட்டிலேயும் குடும்பச் சண்டைகள் சூடு பறக்குது. கேட்டால் வீட்டுக்கு வீடு வாசல்படி என்று சமாதானம் சொல்கிறார்கள். கணவன் கணவனின் உறவுகளையும் மனைவி மனைவியின் உறவுகளையும் குறைப்பதுக்கு அல்லது கூட்டுவதுக்கு எத்தனிக்கும்போது மூன்றாம் நபர் குடும்பத்தில் மூக்கை நுழைக்கின்றார். இதுதான் குடும்பச் சீர்குலைவின் வரவை உறுதிப்படுத்தும் முதல் சம்பவமாக அமைகிறது. முன்னர் தாலி கட்டேக்க அபசகுனம் கேட்கக் கூடாது என்பதற்காக கெட்டி மேளம் பலமாக ஒலிக்கும். இன்றைக்கு வீடியோக்காரரின், கொஞ்சம் பொறுங்கோ அப்படியே தாலியைப் பிடியுங்கோ என்ற கட்டளைகள் வந்ததாலோ என்னவோ கன குடும்பங்கள் விவாகரத்தில் நிக்குதுகள்" என்ற அவரது வார்த்தைகளில் சமூக அக்கறை அமர்ந்து கொள்கின்றது.

என்ன இன்னும் கேப்பியளோ? அவரது கேள்வியில்ஆதங்கம் தொக்கிக் கொள்கிறது. மூத்த பிரசைகளின் அனுபவப்பட்டறிவு என்பது சமூகத்தின் விழுமியங்களை விழுதுகளாக்கிக் கொள்கின்றது. சிறுவர்களும் முதியவர்களும் ஒன்று என்பார்கள். ஓர் அரசனைப்போல் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். பிள்ளைக்கு உணவூட்டுவதற்கு எத்தனை பேர் ஈடுபடுகிறார்கள். அதுபோல் படுத்த படுக்கையான முதியவர்களைப் பராமரிப்பதற்கும் தனிநபரால் முடியாது. அரசனைக்போன்ற கௌரவம் முதியவர்களுக்கும் கிடைக்கின்றதா? அவர்களின் பராமரிப்பிலும் வினைத்திறன் தெரிகின்றதா? இவை பற்றி விடையைத் தேடுவதற்கு புலனாய்வு செய்யப்பட வேண்டும். வயசான காலத்தில் எனக்கு எல்லாம் அடங்கிப்போச்சு வாய்மட்டும் குறையேல்ல............ கூறிக்கொண்டு வாய்விட்டுச் சிரித்தவாறு விடைபெற்றுக் கொண்டார். அந்த முதியவர்!

சமூகத்தில் வைத்துப் பிள்ளைகளால் அல்லது உறவுகளால் முதியவர்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

"சுமையில்லாமல் முதுமையடைதலே சுகமானது."

"நேரிடையான எண்ணங்களால் முதுமையைப் புதுமையாக்குவோம்".

"ஆரோக்கியமான முதுமைக்கு அணி செய்வோம்"

என்ற வாசகங்களைத் தாங்கிய பதாதைகள் முதியோர் இல்லத்தில் கம்பீரமாக காற்றில் அசைந்து கொண்டிருந்தன. கைதடி அரச முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்கள் அந்தப் பதாதைகளின் கீழ் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். முதியோர் பராமரிப்பின் தேடல்களில் அவர்களது எண்ணங்கள் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தன.

சமூகத்தில் மூத்த பிரசைகள் இன்று பணத்தை வைத்துக்கொண்டு ஒரு நேர உணவைக்கூட வாங்கி உண்ண முடியாமல் இருக்கின்றார்கள். அந்த உணவை நம்பிக்கையுடனும் அன்புடனும் பரிமாறிக்கொள்வதற்கு இன்று மனிதர்கள் இல்லாது போய்விட்டார்கள். முதுமையில் கொடுமை தனிமை" என்பார்கள். தனிமையைத் தாராளமாகச் சமூக்ததில் அமர்த்தி விட்டு அனைவரும் காணாமல் போனோர் பட்டியலில் இணைந்து விட்டார்களா? முதியவர்களின் பேச்சுக்களை மூச்சுக்களாக இந்த எண்ணமும் எழாமல் இல்லை. உறவுகள் இருந்தும் இல்லாவிட்டாலும் மறந்தும் தன்னம்பிக்கையை இழக்கக்கூடாது. ஒவ்வொரு உயிரினத்தையும் படைத்த இறைவன் அவர்களின் ஆத்மாக்களுக்குள்ளேயே வாழ்ந்து விடுகின்றான். முதியவர் ஒருவரின் வார்த்தைகள் என்னுள் விழிப்புணர்வு ஊர்வலமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

அரசின் முதியோர் பகல் நிலையங்கள் கிராமம் தோறும் உருவாகி சமூகமயமாக்கலுடன் உயிரூட்டப்படும் போது இந்த நிலை மாறுமா? ஒத்த வயதினர் பகலில் ஒன்றுகூடித் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு சமூக மேம்பாட்டுக்கும் களம் அமைத்து முதுமையின் புதுமையான சுமைகளை அடுத்த சந்ததியினருக்கு பாடமாக்கிய, முன்னோக்கிய, நேரிடையான தீர்வு என்ற முனைப்பான தன்மையை அந்தச் சூழல்நிறைத்துக் கொண்டது. கனதியான எண்ணங்களால் அதிர்ந்து கொண்ட சூழலை வீதியால் சென்று கொண்டிருந்த வாகனங்களின் இரைச்சல் விழுங்கித் தீர்த்துக் கொள்கின்றது.

மனநிலை பாதிக்கப்பட்ட முதியவர்களை வீட்டில் வைத்திருப்பதில் பெரிய இடைவெளிகள் இருக்கின்றன. வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு மாயமாக மறைவது தெருக்களில் அலையவிட்டுவிட்டு தெரியாதது போல் நடிப்பது, வீட்டில் வைத்து சரியாக மருந்துகளை வழங்காது விடுவது போன்ற சமூக மேலீடுகள் மனநலக் காப்பகத்தின் தேவையை உணர்த்தி நிற்கின்றது.

மூத்த பிரசைகளின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு மையங்கள் தேவை வழிகாட்டும் ஏற்பாடுகள் தேவை. முதியோர் சேவையாளர்கள் தேவை தனிமைக்குச் சுதந்திரம் வழங்குகின்ற கனவான்கள் தேவை. கலந்துரையாடலின் சாராம்சம் கச்சிதமாக முன்னெழுந்து முகவுரையாகிக் கொள்கின்றது. மூத்தோரின் அங்கலாய்ப்புக்கள் உயிர் பெறப் போகின்றனவா? சாகப்போகின்றனவா? எங்களின் கரங்களில் பெரியதொரு சமூகப் பொறுப்பு தரப்படுகின்றது. இதைச் செய்வதற்கு சிந்தனையில் இறக்கைகள் கட்டப்பட்டு விடப்படுகின்றன. முதியவர்களின் சிந்தனைச் சிதறல்கள் எனது எண்ணங்களை வண்ணங்களாக மாற்றிக்கொண்டன. மனதுள் புதிய சிந்தனைகளை நிறைத்துக்கொண்டு நிமிர்ந்து கொள்கின்றேன்.

எனது பெற்றோர்கள் சிறுவயதில் இறந்தமையால் அவர்களுக்குரிய கடமைகளை என்னால் செய்ய முடியவில்லை. முதியோர் இல்லத்தில் அத்தகைய சேவைகளை எனது பெற்றோர்களைப் போன்ற இவர்களுக்கு ஒரு மாதம் செய்ய அனுமதி கிடைக்குமா? இங்கு வருகை தந்திருந்த முதியவர் ஒருவரின் வேண்டுதல் என்னுள் ஊர்ந்து கொள்கின்றது. தனது முதுமையிலும் புதுமையான சிந்தனைகளைச் சுமந்து நின்ற அந்த முதியவர் என்னுள் உயர்ந்து நின்றார்.

ஒரு மனிதன் தொடர்ந்து கோபமாக இருக்க முடியுமா? முடியாது. ஆனால் ஒரு மனிதன் தொடர்ந்து மகிழ்வாக இருக்க முடியும். இதற்கு நேரான எண்ணங்களால் இதயத்தை நிரப்பிக் கொள்வது அவசியமாகின்றது. இப்போது முதியோர் இல்லத்தில் அசரீதியாக ஒலித்துக் கொண்ட வார்த்தைகள் வளிமண்டலத்தை நிறைத்துக் கொண்டது போன்ற மேலீட்டை ஏற்படுத்திக் கொள்கின்றது. இளைஞர்கள் மத்தியில் முதுமை பற்றிய கௌரவம் முனைப்படையும்போது மூத்த பிரசைகளின் பிரச்சினைகள் முற்றுப்புள்ளியாகிவிடும். எனவே மனிதனுக்கு மூப்பு, ஆப்பு அல்ல என்ற அசத்தலான நம்பிக்கையில் என் பேனா முனையும் ஓய்வெடுத்துக் கொள்கின்றது.


■

# சிறுவர் உரிமைகள்

யஸுஷனா கந்தசாமி
சுன்னாகம்

இன்றைய நவீன தொழில்நுட்ப வாழ்க்கையில் சமூகத்தின் முதுகெலும்புகளாகச் சிறுவர்கள் விளங்குகின்றனர். இயற்கையாகப் பிறந்த பிள்ளை இந்த உலகில் வாழ்வதற்கும் நிலைத்து நிற்பதற்கும் உரிமைகள் இன்றியமையாததாகும். கிரேக்க தத்துவவியலாளரான அரிஸ்ரோட்டில் என்பவரின் கருத்தானது, 'மனிதன் வாழ்ந்தால் போதாது நன்றாக வாழ வேண்டும் நலன்கள் பாதிக்கப்பட்டால் மனிதன் நன்றாக வாழ இயலாது. தனது உரிமையைப் பேணிப் பொதுநலனையும் பாதுகாப்பதற்கு ஒருவருக்கு உள்ள சக்தியே உரிமைகள் எனப்படும்' என்று அமைகின்றது. அதாவது சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சிறார்களுக்காக உலகமெங்கும் கொண்டாடப்படும் நாள் சிறுவர் தினம் ஆகும். இந்த நாள் உலக நாடுகள் அனைத்திலும் ஒக்ரோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது.

சிறுவர்கள் தங்களுக்கு உரித்தான வரையறுக்கப்பட்ட சட்ட ரீதியான உரிமைகளைப் பெற்று வாழ்வதே சிறுவர் உரிமை ஆகும். சர்வதேச அளவில் 1924ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது சிறுவர் உரிமைகள் தொடர்பான முதலாவது பிரகடனம் ஆகும். 1948இல் ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகள் தொடர்பான பொதுவான கொள்கையை அங்கீகரித்தது. இந்தக் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டாலும் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாததால் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் சிறுவர் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. 20 நாடுகள் உறுதிப்படுத்திய இந்தச் சட்ட வரைபானது 1990 ஆம் ஆண்டு இல் நடைமுறைக்கு வந்தது. இதில் 159 நாடுகள் கைச்சாத்திட்டன. 1991 ஆம் ஆண்டு இலங்கையும் ஏற்றுக்கொண்டது.



இந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் என அழைக்கப்படும் சட்டமூலத்திலே 54 உறுப்புரிமைகள் காணப்படுகின்றன. இதில் 4 தலைப்புக்கள் முக்கியம் பெறுகின்றன. வாழும் உரிமை, அபிவிருத்தி உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்கும் உரிமை என்பனவே அவை ஆகும். சிறுவர் உரிமைகள் தொடர்பாக சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசால் ஏற்கப்பட்டது. இந்தக் கோட்பாட்டில் சிறுவர்களுக்கு உடல், உள, மத, சமூக ரீதியில் முழுமையான விருத்தி அடையவும், பிறர் நலனில் சிறுவர்களைப் பயன்படுத்துதல், பாரபட்சம் காட்டுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தல், 3ஆம் அத்தியாயத்தில் சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. இன்று சர்வதேச ரீதியில் சிறுவர் உரிமை தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் என்பன தொண்டாற்றி வருகின்றன.

எனவே இன்றைய உலகில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், அடிமையாக்குதல், பாலியல் வன்முறைகள், கல்வி கற்கத் தடை என்பன அதிக்மாக இடம்பெற்று வருகின்றன. எனவே சிறுவர் உரிமைகளையும் சிறுவர்களையும் பாதுகாத்து சிறந்ததொரு கல்வியை வழங்கி வளமான ஆரோக்கியமான சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிமயமான எதிர்காலத்துக்கு

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத் தனம். இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன். பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது. அடிமைகள் எல்லோருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையே ஆகும். ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் ஆகிய இவர்களே உங்களது தெய்வங்களாக விளங்கட்டும்.பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

## தினமும் உணவில் ரசத்தைச் சேர்ப்போம்

உணவு வகைகளில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் ரசம், ஜீரண சக்தியை எளிதாக்குகிறது. ரசங்களில் பல வகைகள் இருந்தாலும், பூண்டு, பெருங்காயம், மிளகு– சீரகம் உட்பட பல்வேறு பொருள்கள் சேர்வது ரசத்தில் தான். ஜீரணத்தை எளிதாக்கும் ரசம், பல விற்றமின் குறைபாடுகளையும், தாது உப்புக் குறைபாடுகளையும் போக்கி விடுகிறது. அதுமட்டுமின்றி பசியின்மை, வயிற்றுப் பொருமல், சோர்வு, வாய்வு, ருசியின்மை, பித்தம் முதலியன சரியாகும். உணவே மருந்தாகவும், மருந்தே உணவாகவும் பின்பற்றுவது என்பது ரசத்தைப் பொறுத்த வரை 100 சதவிகிதம் பொருந்தும். ரசத்தில் போடப்படும் சீரகம், வயிற்றுப் பொருமல், தொண்டைக் குழாயில் உள்ள சளி, ஆஸ்த்மா முதலியவற்றைக் குணப்படுத்துகிறது. ரசத்தில் சேரும் பெருங்காயம் வயிறு சம்பந்தமான கோளாறுகள் அனைத்தையும் குணப்படுத்துகிறது. வலிப்பு நோய்வராமல் தடுக்கிறது. மூளைக்கும் உடலுக்கும் அமைதியைக் கொடுக்கிறது. கொத்துமல்லிக்கீரை ரசத்தில் சேர்வதால், காய்ச்சல் தணிந்து சிறுநீர் நன்கு வெளியேறுகிறது. வயிற்றுக்கு உறுதி தருவதுடன் குடல் உறுப்புகள் சிறப்பாகச் செயல்படவும், செரிமானக் கோளாறுகளைத் தடுக்கவும், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு முதலியவை இருந்தால் அவற்றைக் குணப்படுத்தவும், ரசத்தில் சேரும் கறிவேப்பிலைஉதவுகிறது.

## உடம்புக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் யாவை? ஏன் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளன?

இந்த உடம்பானது நாங்கள் அணியும் ஒரு ஆடை. அதனை எவ்விதம் அணிந்து கொள்வது, முறையாக எவ்வாறு உபயோகித்து நல்ல பயனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிந்திருந்தால் தான், நாம் அதனிடமிருந்து பெறக் கூடிய உச்ச நன்மைகளை அடையலாம்.

உடம்புக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் அதன் பல வகைப்பட்ட தொழிற்பாடுகளை விளக்குகின்றன. அத்துடன் நாம் அவற்றின் உச்சப் பயனை அடைய அவற்றை எவ்வாறு பயன் படுத்தலாம் என் பதையும் எடுத்துக்காட்டுகின்றது.



### சாயி சிந்தனை

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 40 | 60 | 30–40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 60 | 70 | 60 | 70 | 40–60 | 50 | 80 | 35 |
| கரட் | 60 | 120 | 80–120 | 80 | 60–120 | 120 | 100 | 80 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 30–40 | 60 | 50 | 35–40 |
| பயிற்றை | 60 | 70 | 60 | 60 | 80–100 | 120 | 100 | 50 |
| பாகல் | 100 | 80 | 160 | 100 | 100–140 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 50–80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 100 | 90–100 | 120 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 50–100 | 120 | 60–80 | 100 | 100 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30–40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 120 | 70 | 100 | 100 | 60–100 | 100 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 | 40–80 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 140 | 160 | 140 | 130–160 | 100 | 200 | 120 |
| புடோல் | 40 | 70 | 40 | 40 | 40 | 60 | 60 | 40 |
| கோவா | 70 | 70 | 70 | 70 | 50–60 | 80 | 100 | 50 |
| வெண்டி | 60 | 40 | 60 | 50 | 40–70 | 60 | 50 | 35 |
| போஞ்சி | 160 | 120 | 160 | 160 | 140–160 | 160 | 160 | 140–150 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 | 80 | 50–60 | 80 | 80 | 60–70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40–60 | 40–50 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 100 | 100–120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 120 | 160 | 120 | 140–180 | 300 | 160 | 220 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 20–30 | 20 | 15 | 08–10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 80 | 70–80 | 80 | 120 | 70– 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 100 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 120 | 80 | 70–140 | 80 | 120 | 70 |

## நாளை

புரட்டாதி–15
வெள்ளிக்கிழமை
02.10.2015

*திதி: பஞ்சமி*
*மு.இ.10.46 வரை*
*நட்சத்திரம்:கார்த்திகை*
*பி.ப.02.39 வரை*
*சுபநேரம்:*
*06.02–07.32 வரை*
*இராகுகாலம்:*
*10.32–12.02 வரை*

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 350 | 400 | 300 | 400 | 200 | 400 |
| கணவாய் | 550 | 500 | 300 | 700 | 700 | – |
| பாரை | 500 | 600 | 500 | 600 | – | 430 |
| சுறா | 500 | 600 | – | 700 | 700 | – |
| சீலா | 300 | 400 | 300 | 450 | 400 | 350 |
| விளை | 700 | 450 | – | 500 | 600 | 400 |
| மூரல் | 300 | 400 | – | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 350 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | 300 | 450 | – | 350 |
| திரளி | 250 | 300 | 100 | 400 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 80 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 300 | 100 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 400 | 300 | 150 |
| பாலை | 400 | 300 | – | 500 | – | – |
| வாளை | 100 | 200 | – | 400 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | – | 300 | – | 250 |

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 1 | | |
| | | | | | | | 6 | 4 |
| 5 | | | | 2 | 4 | | | 3 |
| | 6 | | 8 | | 1 | 2 | | |
| | | 9 | 5 | | 7 | | | |
| | | 1 | | | | | | 8 |
| 3 | 5 | | | 9 | | | | |
| | | 7 | | | | | | |
| | 4 | | 1 | | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 7 | 2 | 8 | 3 | 5 | 1 | 9 |
| 2 | 3 | 9 | 1 | 5 | 4 | 8 | 6 | 7 |
| 8 | 1 | 5 | 6 | 9 | 7 | 2 | 4 | 3 |
| 4 | 7 | 1 | 9 | 3 | 8 | 6 | 2 | 5 |
| 3 | 8 | 6 | 5 | 1 | 2 | 9 | 7 | 4 |
| 9 | 5 | 2 | 4 | 7 | 6 | 3 | 8 | 1 |
| 7 | 9 | 4 | 8 | 6 | 5 | 1 | 3 | 2 |
| 1 | 2 | 8 | 3 | 4 | 9 | 7 | 5 | 6 |
| 5 | 6 | 3 | 7 | 2 | 1 | 4 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வர்ணம் தீட்டலாம் வாங்க






## பாம்பும் விவசாயியும்

அது ஒரு அழகிய குளிர்காலம். ஒரு நாள் பாம்பு ஒன்று பனியில் விறைத்து உயிர் போய்விடுமோ என்ற நிலையில் சுருண்டு கிடந்தது. அந்த நேரத்தில் அந்த வழியே வந்த விவசாயி ஒருவன் அந்தப் பாம்பைப் பார்த் தான். இரக்க குணமுள்ள அந்த விவசாயி அந்தப் பாம்புக்கு உதவிட நினைத்தான்.

அந்தப் பாம்பை எடுத்து தனது மார்போடு அணைத்து அதனைச் சூடேற்றினான். விவசாயியின் உடல் சூடு பட்டதும், பாம்பு மெல்ல மெல்ல உணர்வு பெற்றது. அதற்கு நன்றாக உணர்வு வந்ததும், அது தன்னைக் காப்பாற்றிய விவசாயியைப் பலமாகக் கடித்து விட்டது. பாம்பின் நஞ்சு ஏறி உயிர் போகும் நிலையில் இருந்த அந்த விவசாயி தனது செய்கைக்காக வருந்தினான். பாம்பைப் பார்த்து 'ஏ' நன்றி கெட்ட நாகமே! உன்னைக் காப்பாற்றிய என்னையே கடித்து விட்டாயே!! உனது குணம் தெரிந்தும் நான் உனக்கு உதவி செய்தேன் அல்லவா? அதற்கு இது சரியான தண்டனை தான் என்று கூறி விட்டு இறந்தான்.

நீதி: தீயவர்களுக்குச் செய்யும் உதவி தீமையாகவே முடியும்.



## ஆமையார்

ஆமையார் ஆமையார்
அசைந்து அசைந்து நடக்கிறார்
மூட்டை தூக்கும் ஆமையார்
ஓட்டுள் பதுங்கும் ஆமையார்
குள்ள மாமி வீட்டுக்கு
மெல்ல மெல்லப் போகிறார்
மாமி வீடு போகவே
மாதம் ஆறு ஆகுமே

## பொது அறிவுத் தகவல்கள்

- குடலின் மொத்த நீளம் : 9 மீற்றர்.
- உடலில் வேர்க்காத பகுதி : உதடுகள்
- உடலில் குளிர்ச்சியான இடம் : மூக்கின் நுனி.
- மூளையின் நிறை : சராசரி ஒன்றரை கிலோ.
- ஒரு நாளில் 1200 முதல் 1500 மி.லி. வரை உமிழ் நீர் சுரப்பாகிறது.
- குரல் தெளிவாக இருக்க, முக எலும்புகள் கனம் குறைய உமிழ்நீர் உதவுகிறது.
- குருதிக் கசிவு ஒன்று முதல் மூன்று நிமிடங்கள் தொடர்ந்திருக்கும்.
- குருதி உறைவதற்கான நேரம் நான்கு முதல் எட்டு நிமிடங்கள்.
- உடலின் தோல் மூன்று அடுக்கால் ஆனது. தோலின் மேலடுக்கு எபிடெர்மிஸ், இதில் குருதி ஓட்டம் இல்லை. தோலின் இரண்டாவது அடுக்கு டெர்மிஸ் பகுதி என்றும், அடிப்புற அடுக்கு அடித்தோல் என்றும் அழைக்கப் படுகிறது.
- மார்பைப் பாதுகாக்கும் எலும்பின் பெயர்:ரிப்ஸ்.

# அதிர்ஷ்டகரமான வாழ்க்கை

நேற்றைய உதயன் பத்திரிகையில் நவ ரத்தினங்களுள் ஒன்றான 'கோமேதகம்' பற்றிப் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியாக 'வைடூரியம்' பற்றிப் பார்ப்போம். பிறவியிலேயே சிலருக்கு அதிர்ஷ்ட அமைப்புக்கள் அமைந்திருக்கும். சிலர் தங்கள் உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும், சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல் வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். அந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன் மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்க நவரத்தினங்களுள் ஒன்று 'வைடூரியம்'.



**வைடூரியம்**

வைடூரியம் லேசான பச்சையும், பழுப்பு நிறமும் கொண்டதாகும். இந்த இரண்டு நிறங்களும் ஒரே கல்லில் காணப்படுவதோடு நடுவே வெண்மை நிறத்தில் கோடு போன்ற அமைப்பும் காணப்படுகிறது. இதை மேலும் கீழும் அசைத்தால் பூனைக் கண் போலத் தெரியும். இதனாலேயே வைடூரியத்துக்கு catiseye என்ற ஆங்கிலப் பெயர் வந்தது. மஞ்சள் நிறப் பிரகாசமும் வெண்ணிறக் கற்றையும் உடையதே மிக உயர்ந்த வகை வைடூரியமாகும்.

வைடூரியமானது மிகவும் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகும். வைடூரியம் மிகவும் வேகமாகச் செயற்படக்கூடிய ஆற்றல் கொண்டது என்பதால், இதனைப் பரிசோதனைக்குப் பின்னரே அணிய வேண்டும். பெரில்லியம் அலுமினேட் எனப்படும் வேதிப்பொருளாலான வைடூரியம், கிரிஸோபெரில் வகையைச் சார்ந்ததாகும். விலையும் அதிகமாகும். வைடூரியக் கல்லின் குறுக்கே ஒரு நூல் பட்டையாகவும், தெளிவில்லாமலும், கல்லின் நிறம் வெளிர் பச்சையாகவும் இருந்தால் விலை அதற்கேற்ப குறைய வாய்ப்புண்டு.

இதில் குறிப்பிடத்தக்கது குவார்ட்ஸ் வகை வைடூரியங்கள் ஆகும். ஆனால் இதன் பெயரில்தான் வைடூரியம் உள்ளதேதவிர, சுத்தமான வைடூரியம் இல்லை. எடை குறைந்த குவார்ட்ஸ் வகை வைடூரியங்கள் மண்நிறம் கலந்து பச்சையாக இருக்கும். இதில் பழுப்பு நிறம் உடைய நூல் போன்ற அமைப்புக் கொண்ட கற்களை டைகர்ஸ் ஐ (Tiger Eye) என்றும், கறுப்பு நிறமாக இருந்தால் புல்ஸ் ஐ (Bull's Eye) என்றும் அழைக்கின்றனர். சுத்தமான வைடூரியத்தில் அதனுள் தெரியும் நூல் போன்ற அமைப்பு வெளிச்சத்தில் மின்னல் போலத் தெரிவதால் எவரையும் மயக்கிவிடும். மற்ற வைடூரியங்களில் இது போன்ற கவர்ச்சியான அமைப்பு இருக்காது.

வைடூரியங்களில் நமது நாட்டில் கேரளாவில் கிடைப்பதே விலை உயர்ந்ததாகும். இது தவிர, ஒரிஸாவில் கிடைப்பது சற்று விலை குறைந்ததாக உள்ளது. பிரேஸில், இலங்கை, அமெரிக்கா முதலிய இடங்களிலும் வைடூரியம் கிடைக்கின்றது.



வைடூரியக் கல்லை அணிவதால் செல்வம், செல்வாக்கு உயரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். இழந்த செல்வத்தை மீட்டுத் தரும். இரத்த அழுத்த நோயைக் கட்டுப்படுத்தும். ஆன்மிக, தெய்வீக காரியங்களில் ஈடுபாட்டை அதிகரிக்கும். தற்கொலை எண்ணங்கள் வராது. மன நிலை புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

வைடூரியக் கல்லைத் தங்கத்தில் பதித்து ஆள் காட்டி விரல் அல்லது மோதிர விரலில் அணிந்த கொள்வது நல்லது. வைடூரியத் கல்லை கால சர்ப்பயோகம் உடையவர்களும், கேது திசை நடப்பில் உள்ளோரும், 7,16,25 ஆகிய எண்களில் பிறந்தோரும் அணிவது உத்தமம். அச்சுவினி, மகம், மூலம் போன்ற நட்சத்திரக்காரர்களும் அணியலாம்.

புள்ளிகள், பள்ளங்கள், மங்கலான நிறங்கள் உடைய வைடூரியங்கள் தீமையான பலன்களைத் தரவல்லன. எனவே வைடூரியத்தை நன்கு பரிசோதித்து அணிவது உத்தமம்.

வைடூரியத்துக்கு மாற்றுக் கல்லாக ஒப்பல் என்ற கல்லை அணியலாம். ஒப்பல் கற்கள் ஏழு எண்காரர்களுக்கு மிகவும் உகந்ததாகும். இது பல வண்ணங்களில் கிடைத்தாலும் வெண்மை நிறம் கொண்ட கல்லே சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**போர்க்குற்ற**

உரிமைகள் சபையின் 30 ஆவது அமர்வில் நேற்று இலங்கை தொடர்பிலான விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்து, பின்னர் ஆரம்பமான தீர்மானம் குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நல்லிணக்கம்,பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பான மனித உரிமைகள் சபையின் விரிவான விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களுக்குத் தெரியும். ஜனவரி 2015 இல் இலங்கை, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக, மனித உரிமைகள் சபையில் இந்த அறிக்கை சமர்ப்பிப்பது 30ஆவது அமர்வு வரை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டது. இந்தச் சூழலில் அறிக்கை மிக வித்தியாசமாக இருக்கிறது

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளை இலங்கையில் முந்தைய அரசு நிராகரித்ததோடு, ஒத்துழைக்கவும் மறுத்தது.அத்துடன், மனித உரிமைகள் சபையின் விசாரணைக்கு தகவல் வழங்க முற்படுவோர், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு எதிராக மிரட்டல் மற்றும் துன்புறுத்தல்களைக் கையிலெடுத்தனர்.

எனினும் புதிய அரசு பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை செயல்முறை சாத்தியமாக்குவதற்கு எனக்கும், எனது அலுவலகத்துக்கும் மேலும் ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பை வழங்கியது. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் உண்மை, நீதி, இழப்புகள், மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் பற்றிய விசேட அறிக்கையாளர் இலங்கைக்கு பயணம் செய்ய அழைக்கப்பட்டனர். மேலும் எதிர்வரும் நவம்பர் மாதம் காணாமற்போனோர் செயற்குழுவின் இலங்கைக்கான விடயம் கட்டாயமாக நடத்தவேண்டும். ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையில் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கண்ணீர் மல்கிய அரசியல் சூழல் குறித்தது. புதிய அரசு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் பிற முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.அத்துடன் 2013 ஜனவரியில் சர்ச்சைக்குரிய முறையில் பதவியிழந்த பிரதம நீதியரசர் பதவியேற்றார்.

இலங்கையில் 2015ஆம் ஆண்டுக்குப் பின் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமளிக் கப்பட்டுள்ளது. எனினும் வடக்கு-கிழக்கில் இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு மற்றும் குறுக்கீடுகள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன. இந்தக் கட்டமைப்புகள் மற்றும் நிறுவன கலாசாரங்கள் அடாவடித்தனங்களும் கடந்த அடக்குமுறைச் சூழலை நிரூபிக்கின்றன.இதில் அடிப்படை பாதுகாப்புத் துறைச் சீர்திருத்தம் தேவை.

இலங்கைப் போர் முடிந்து ஆறு ஆண்டுகள் ஆகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் உரிய நீதி கிடைக்கவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரங்கள் குறித்து இன்னும் நிலையான தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இங்கு தனியார் நிலத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளமை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. எனினும் அண்மைக் காலங்களில் சில நிலங்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்தது. வடக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 60,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், பாலியல் துன்புறுத்தல், சுரண்டல், வன்முறை உள்ளிட்டவைகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதானவர்கள் குறித்த விவவரத்தை இலங்கை அரசு இன்னும் தெளிவுபடுத்தவில்லை. இரகசியத் தடுப்பு மற்றும் மறைவான இடங்களில் தடுத்து வைத்திருப்பது தொடர்பில் தொடர்ந்து அறிக்கைகள் வருகின்றன.இவை தொடர்பில் அவசர விசாரணைகள் தேவைப்படுகிறது. உள்ளூர் தகவல்களின் பிரகாரம் 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 19 கைதுகள் இடம்பெற்றுள்ளன.இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும்.அத்துடன் 12 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் மற்றும் 14 பேர் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர் என நம்பகமான ஆதாரங்கள் மூலம் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்கிக்கொள்ள அரசு அளித்த உறுதிமொழி வரவேற்கத்தக்கது.

கடந்த ஆறு மாதங்களில் மத அழுத்தங்கள், வன்முறை இல்லாதபோதிலும், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மீதான தாக்குதல் குறித்து அப்போதைய அரசு விசாரணை நடத்தவில்லை. பௌத்த அமைப்பான பொதுபல சேனா கடந்த 2014 ஜூனில் அளுத்கமவில் முஸ் லீம்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவில்லை.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று,30 ஆண்டு காலப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு அனுதாபத்தைத் தெரிவித்தது. மற்றும் தேசிய இணக்கப்பாடு, நீதி, சமத்துவம் முன்னெடுக்க உறுதியளித்தது. அனைத்து மக்களுக்காகவும் மூன்று மொழிகளில் ஒரு சிறப்பு சமாதானப் பிரகடனம் வெளியிட்டது வரவேற்கதக்கது.

தற்போதைய அரசு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஒரு புதிய அலுவலகம் நிறுவப்பட்டமை ஊடாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நிலத்தை விடுவித்தல் கைதிகளின் விடுதலை மற்றும் இழப்பீடுகள் போன்ற முக்கிய பிரச்சினைகளில் முன்னேற்றம் காணலாம்.

மனித உரிமைகள் சபையில் எங்கள் அறிக்கையில் கூறப்பட்டது போன்று விசாரணைகள் நடந்தால், கடந்த சம்பவங்களின் உண்மைகளைத் தெளிவுபடுத்திப் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முடியும். கடந்த அரசு நியமித்த காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அதன் நம்பகத்தன்மையை மற்றும் திறன் பற்றி எழுப்பப்பட்ட பரந்த கவலைகள் இருந்தாலும் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் தனது பணியைத் தொடர்ந்து வருகிறது.

நாம் இந்த ஆணைக்குழு கலைக்கப்பட்ட வேண்டும். அத்துடன் காணாமற்போனோர் குடும்பங்களின் ஆலோசனையுடன் நிறுவப்படும் ஒரு நம்பகமான மற்றும் சுயாதீன நிறுவனத்திற்கு அதன் வழக்குகள் நிலுவையிலுள்ள வழக்குகள் மாற்றப்படுமென நம்புகிறேன்.

ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால், இலங்கை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தச் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியமானது.இலங்கையில் புதிய ஆட்சியில் கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது. புதிய அரசு அமைந்த பின்னர் தாக்குதல் குறித்த விசாரணையில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மிருசுவில் பகுதியில் முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவரால் எட்டுத் தமிழர்கள் கொலை செய்யப்பட்ட குற்றம் கடந்த ஜூன் மாதம் உறுதி செய்யப்பட்டது. இந்தப் போர்க் குற்ற மீறல் ஒரு அரிதான வழக்கு வெற்றிகரமாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு பிறகு என்றா லும், குற்றம் சாட்டப்பட்டுள்ளது.கடந்த 2006 நவம்பரில் கொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தொடர்பில் கடந்த மார்ச் மாதம், மூன்று கடற்படை சிப்பாய்களும், ஒரு முன்னாள் பொலிஸ் அதிகாரியும் கைது செய்யப்பட்டனர். ஊடகவியலாளர் மற்றும் கேலிச் சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பிலான பல இராணுவ அதிகாரிகளைக் கடந்த ஒகஸ்டில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆனால் 2006 ஜனவரியில் திருகோணமலைக் கடற்கரையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டமை அதே வருடம் ஓகஸ்டில் மூதூரில் 17 மனிதாபிமான பணியாளர்கள் படு கொலை செய்யப்பட்டமை போன்ற மேலும் பல வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கியுள்ளன

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் சிறப்புக் குழு அமைக்கப்பட்டு இந்த விரிவான விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டவை இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மார்ட்டி அதிசாரி, சில்வியா கார்ட்ரைட், அஸ்மா ஜஹாங்கீர் ஆகிய மூன்று புகழ்பெற்ற நிபுணர்களிடம் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.அவர்கள் இந்தச் செயற்பாட்டில் ஆதரவு மற்றும் ஆலோசனை பங்கை வழங்கியுள்ளனர்.

இந்த விசாரணையின் நோக்கம் இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் கண்டறிவது. இதன்போது சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லை, விசாரணை தடைகள் மற்றும் தொடர்பு இல்லாமை உட்பட மகத்தான சவால்களை எதிர்கொண்டு , கிடைத்த தகவல் அடிப்படையில் மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணை மூலம் இந்தக் காலப்பகுதியில் அனைத்து தரப்பினரும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை தீவிரமாக மீறியுள்ளதாக நியாயமான அடிப்படையில் உறுதி என்று கண்டறியப்பட்டது. அத்துடன் ஒரு நீதிமன்றம் நிறுவப்பட்டு விசாரணை நடந்தால் உண்மையில், குற்றச் சாட்டுக்கள் பல மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் அல்லது போர்க் குற்றங்கள் என உறுதிப்படுத்தப்படும்.

இந்தக் கண்டுபிடிப்புகளுக்குத் துணையான 250 பக்கங்கள் கொண்ட விசாரணை அறிக்கையில் விவரமாக தெரிவிக்கப்பட்டுள்ளதை நான் இன்று சமர்ப்பிக்கின்றேன்.இலங்கைப் பாது காப்புப் படைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணை இராணுவக் குழுக்களும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் செய்துள்ளமைக்கான குற்றங்கள் நியாயமான அடிப்படையில் கண்டறியப்பட்டது. இவற்றில் தமிழ் அரசியல்வாதிகள், மனிதாபிமானப் பணியாளர்கள் மற் றும் பத்திரிகையாளர்கள் குறிப்பாக இலக்கு வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூடச் சட்டத்திற்குப் புறம்பாக, எதிர்ப்புத் தமிழ் அரசியல் பிரமுகர்கள், பொது அதிகாரிகள், கல்வியியலாளர்கள் மற்றும் புலிகளுக்கு மாறாக தகவல் வழங்கியோர் என சந்தேகிக்கப்படுபவர்களைக் கொலை செய்துள்ளனர். பொறுப்பற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் அல்லது கிளைமோர் தாக்குதல்களைப் புலிகள் முன்னெடுத்தனர். இதனால் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் காயமடைந்துள்ளனர். அத்துடன் 2009 மே 18 ஆம் திகதி படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் போராளிகள் சட்டத்துக்கு புறம்பாக கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் அரச பாதுகாப்புப் படைகளின் தான்தோன்றித்தனமான கைதுகள் மற்றும் தடுப்பு அடிக்கடி நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. காணாமற்போனவர்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள், வெள்ளை வான் கடத்தல்கள் போன்றவை இராணுவம் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்ட துணை இராணுவ அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போரின் கடைசி மாதங்களில் பொதுமக்கள் மற்றும் பொதுமக்களின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பும் பொதுமக்களைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட போர் தவிர்ப்பு வலயங்கள் மீது, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் முக்கிய கொள்கைகளுக்கு முரணாகத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என்று நியாயமான அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்த அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளதன் பிரகாரம் அரசு அறிவித்திருந்த 'பாதுகாப்பு வலயத்தினுள்' அடர்த்தியாக மக்கள் உள்ள வைத்தியசாலைகள் மீது அரச படைகள் ஷெல் தாக்குதல் மேற்கொண்டுள்ளன.

இராணுவ மற்றும் சமூகத்தின் சில அரசியல் கட்சிகள் மற்றும் பிரிவுகள் எதிர்ப்புக்கு மத்தியிலும், இந்த மீறல்கள் குறித்து விசாரணை மற்றும் பொறுப்புடைமை உறுதி செய்ய, இந்தச் சபை முன் இலங்கை அரசின் வாக்குறுதிகளை, வரவேற்கிறேன்.

முதலாவதாக, இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் ஒரு நம்பகமான அமைப்பு இல்லை. எனினும் நீண்ட நிலுவையிலுள்ள வழக்குகளை விசாரணை செய்யும் சட்டம் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது, ஆனால் அது இன்னும் செயற்படவில்லை. மேலும் விசாரணை மற்றும் புதிய அமைப்பு சுதந்திரம் மற்றும் சமரசத்திற்கு என்று பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சட்டங்களை வலுப்படுத்த அரசு, அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இரண்டாவதாக, இந்த அளவிலான போர்க் குற்றங்களை விசாரணை செய்ய உள்நாட்டுச் சட்ட கட்டமைப்பு போதுமானதல்ல. இலங்கை மோதல் தொடர்பான வழக்குகள் முன்னெடுத்த போது, இது போன்ற கொலை வழக்குகளில் குற்றவியல் சட்டத்தின் ஊடாகக் குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை.

மூன்றாவதாக, பாதுகாப்புத் துறை மற்றும் நீதி அமைப்பு , பல தசாப்தங்களாக சிதைக்கப்பட்டு விட்டன. சட்டமா அதிபர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற முக்கிய நிறுவனங்கள் சுயாதீனம் மற்றும் நேர்மையை கொண்டிருக்கவில்லை, மேலும் பாதுகாப்புப் படையினர், பொலிஸ் மற்றும் புலனாய்வு சேவைகள் தண்டனை விலக்குப் பெறும் நிலை போரின் பின் எந்த கணிசமான சீர்திருத்தமும் பெறவில்லை. எனவே மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், குறிப்பாக போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் மற்றும் புல னாய்வாளர்கள் ஒருங்கிணைத்து, ஒரு தற்காலிக கலப்பு சிறப்பு நீதிமன்றம் நிறுவ வேண்டும் என்று நான் பரிந்துரைத்துள்ளேன்.

அனைத்து இலங்கையர்களுக்கும், குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள், சுதந்திரத்தையும் பாகுபாடின்மையையும் நம்பிக்கையையும் கொடுக்க இந்தப் பொறிமுறை அவசியம்.

குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், உண்மையான தகவல் மற்றும் பங்கேற்பு ஆலோசனை என்ற செயல்முறை மூலம் வடிவமைக்கப்பட்ட நீதி நடவடிக்கைகளை வழங்க மனித உரிகைள் சபை அதன் உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது.

இலங்கையில் பொறுப்புடைமை மற்றும் நல்லிணக்கம் முன்னேற்றம் ஏற்பட மனித உரிமைகள் சபை ஊக்குவிக்கும் - முக்கிய பங்கு வகிக்கும். - என்றார்.

(து-வ)


31ஆம் நாள் நினைவஞ்சலியும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



சண்முகவடிவேலு
பொன்னம்பலம்

தோற்றம்
10.10.1948

மறைவு
01.09.2015

கடந்த 01.09.2015 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.10.2015) வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (02.10.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் தியாகி அறக்கொடை நிலைய (TCT) மண்டபத்திலும் இடம்பெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

50, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அமைந்திருக்கும் உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கான பணியாளர் தேவை.

1. சமையலாளர்
2. சமையல் உதவியாளர்
3. றொட்டி வேலை, கொத்துவேலைப்பணியாளர்
4. உணவு பரிமாறுபவர் (Waitar)

**T.P: 077 649 1027, 077 9400 963**

(C/19138)(10.17)

**வேலைவாய்ப்பு**

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி Golden Group கம்பனியில் நான்கு வகையான பதவிகள் அடிப்படை சம்பளம் + கொமிசன் பதவி உயர்வுகள்.

தங்குமிடம்/ உணவு இலவசம்.
வயது எல்லை (18+40) இருபாலாரும்
குறிப்பு: நேர்முக தேர்வு நேரில்
02/10. - 03/10/2015 நடைபெறும்.

முகவரி: No.08, 6th Cross Street, Jaffna.
தொடர்புகளுக்கு : 077 62 19 536
077 99 87 699

(C/165050)(10.17)

**ஆங்கிலம் ஒரு விற்பனைப் பொருளல்ல!**

13 வருடங்களில் கற்கமுடியாத ஆங்கிலத்தை, 3 மாதங்களில் எவ்வாறு கற்றுக்கொள்ளமுடியுமெனக் கேட்கும் "இயலாமைகளுக்கு...."
உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் 2 தொடக்கம் 4 வயதிற்குள் தத்தம் மொழியைக் கற்றுக்கொள்கிறது என்பதைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

தவறான வழியில் இலக்கண ரீதியாக கற்றமையாலேயே இன்றுவரை ஆங்கிலம் பெரும்பாலானோருக்கு எட்டாக்கனியாகவுள்ளது.

எமது நேரடியான உரையாடற் பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதை, எமது நிறுவனத்திற்குவந்து எவருமே நேரடியாக பார்வையிடமுடியும்!

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

புதிய சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 03.10.2015

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

பயிற்சிகள் யாவும் திரு.ஜொம்சன் ஆசிரியரினால் நேரடியாக வழங்கப்படும்.

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

ABI
children's DAY

World Children's Day
1st of October

சர்வதேச சிறுவர் தினம்
ஒக்ரோபர் - 01
2015

சிறுவர்கள் அனைவருக்கும்
சர்வதேச
சிறுவர்கள் தின வாழ்த்துக்கள்

சிறுவர்களுக்கான ஆடைத்தெரிவுகள்
அனைத்துக்கும்
20% தொடக்கம் 25% வரை விலைக்கழிவு
வழங்கப்படும்

01st & 02nd ஒக்ரோபர் மட்டும்

# நாமே பொது எதிர்க்கட்சி

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிகள் உள்ளிட்ட 9 கட்சிகள் அறிவிப்பு

நாட்டின் எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புசெயற்பட்டுவருகின்ற நிலையில், எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்குத் தொடர்ந்தும் உரிமை கோரிவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் உள்ளிட்ட 9 கட்சிகள்,அரசின் எதிர்க்கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என்றும், தாமே பொது எதிர்க்கட்சியாக செயற்படுகின்றோம் என்றும்நேற்றுத்தெரிவித்தன.

நாரஹென்பிட்டியிலுள்ள அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடத் திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பந்துல குணவர்தன, குமார வெல்கம, பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவர் உதய கம்மன் பில மற்றும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், தேச விடுதலைக்கான தேசிய முன்னணியின் தலைவர் பொடிஅப்புஹாமி ஆகிய 9 கட்சிகளைச் சேர்ந்தோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, பொது எதிர்க் கட் சிகள் என்ற அடிப்படையில் தாம் செயற்படுவதாக மேற்படிக் கட்சிகள் தெரிவித்தன.

இதையடுத்து, பொது எதிர்க்கட்சி எனின், எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியோ இந்தப் பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கவில்லை. அப்படியாயின் இது எவ்வாறு பொது எதிர்க் கட்சியாகும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் எதிர்க்கட்சியாகவே செயற்படுகின்றது. நாம்தான் பொது எதிர்க்கட்சியாக செயற் படுகின்றோம்– என்றார்.

இதேவேளை, பொது எதிர்க்கட்சியின் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு அங்கம் வகிக்கின்றது என்ற கேள் விக்குப் பதிலளித்த சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன, நாட்டுக்கு எதிரான விடயங் களில் தமது நிலைப்பாட்டை தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தும் உரிமையை கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனஎமக்குவழங்கியுள்ளார். அதற்கமையவே நாம் செயற்படுகின்றோம் – என்றார். (த–சி)

விசேட இறுதி கருத்தரங்குகள்

வடமாகாண சாரத் தேரிவுக்கு
வெள்ளி காலை 9.30 தொடக்கம் 3.30 மணிவரை

கல்வி டிப்புளோமா தேரிவுக்கு
வெள்ளி 2.30 - 6.30 மணிவரை

புகையிரத திணைக்கள அதிபர் தேரிவுக்கு
வெள்ளி, சனி, ஞாயிறு 9.30 - 3.30 மணிவரை

அதிபர் சேவை தரம் - 3
சனி, ஞாயிறு 9.00 - 4.00 மணிவரை

T.P - 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்.

# அதிகாலை 3.30 மணிக்கு ரணிலை எழுப்பிய மகிந்த

## சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயக தேர்தலை நடத்தினார் ஆணையாளர்

கொழும்பு, ஒக்.1

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியையடுத்து மஹிந்த ராஜபக்ச ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த என்னை அதிகாலை 3.30 மணிக்கு எழுப்பினார். இதனால் நான் சங்கடத்துக்குள்ளாளேன்.ஜனாதிபதித் தேர்தலின்போது, தேர்தல் ஆணையாளர் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்திமுடித்தார்.

–இவ்வாறு நகைச்சுவையாக கருத்து வெளியிட்டுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தேர்தல் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம் பந்தன் , முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச , பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, முக்கிய பல அரசியல் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண் டிருந்தனர்.

மாகாண முதலமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

வரவேற்புரையை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரியநிகழ்த்தினார்.அதன்பின்னர் நாடாளுமன்றஉறுப்பினர்தினேஷ்குணவர்த்தன உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவரின் உரை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் வாழ்த்துச்செய்தியை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க விழா மண்டபத்தில் வாசித்தார். நிகழ்வின் இறுதியில் பிரதமரின் உரை இடம்பெற்றது.

இதன்போது நகைச்சுவைத் தொனியிலும் சில கருத்துகளை பிரதமர் வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை மஹிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டார். அவர் அதிகாலை 3.30 மணிக்கு என்னை எழுப் பினார். இதனால் எனக்குத்தான் பெரும் கஷ்டம் ஏற்பட்டது. எது எப்படியிருந்தபோதிலும் தேர்தல்கள் ஆணையாளர் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தி முடித்துள்ளார் – என்றார்.

(த–சி)

**விற்பனைக்குண்டு**

சீமெந்து, கருங்கற்கள், கருங்கல்டஸ்ட், கண்டாவளைமண், சீமெந்துகற்கள், என்பன மொத்தமாக குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: ஷன் ஹாட்வெயார் இருபாலைச் சந்தி

**வாகன சாரதிகள் தேவை**

ஹாட்வெயா ரான்போட் நிறுவனத்துக்கு நடுத்தர கனரக வாகனச் சாரதிகள் தேவை.

ETF,EPF உட்பட மேலதிக படிகள் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 441 4083

யாழ். புத்தகசாலை

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அனைத்து நூல்களுக்கும் 15% விசேட விலைக் கழிவு (1000 ரூபாவுக்கு மேல் கொள்வனவுக்கு)

10.10.2015 வரை மட்டுமே

தொடர்புகளுக்கு:
யாழ். புத்தகசாலை
# 305, 307, 309
மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 454 5552, 0778349507

# அரச ஊடக நிதி மோசடி; சுசிலிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஒக்.1

கடந்தஜனாதிபதித்தேர்தலின்போது அரச ஊடகமொன்றில் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகளுக்காக 115 மில்லி யன் ரூபா பணம் செலுத் தப்பட வில்லை எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பெரும் நிதி மோசடி மற்றும் ஊழல் விசா ரணைகளுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில், அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

கடந்தஜனாதிபதித்தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியஅமைச்சர்சுசில்பிரேம ஜயந்தவைமேற்கூறப்பட்டசம்பவம் தொடர்பில்வாக்குமூலம்பதிவுசெய்வதற்காக குறித்த ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது. இதற்கமைய நேற்றுக்காலை 10 மணியளவில் அமைச்சர் சுசில் ஆணைக்குழுவில் முன்னிலை யானார்.

இந்த விடயம் தொடர்பில் முன்னதாக முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவின் மிரிஹான இல்லத்திற்குச் சென்று நிதிமோசடி மற் றும் ஊழல் விசாரணைகளுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்தது. பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் கட்சியினாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும், இது குறித்து கட்சியின் செயலாளரிடமே வினவவேண்டும் எனவும் மகிந்த இதன்போது ஆணைக்குழுவிடம் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, கடந்த அரசின் ஊடகத்துறை அமைச் சராகவிருந்த கெஹலிய ரம்புக்வெலவிடமும் வாக்குமூலம் பதிவுசெய்திருந்த நிலையிலேயே, விசாரணைகளின் அடுத்தகட்டமாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நேற்று ஆணைக் குழுவுக்கு அழைத்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் சிலரிடம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன எனப் பெரியளவிலான நிதி மோசடி மற்றும் ஊழல் விசாரணைகளுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுதெரிவித்துள்ளது.(த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தீர்மானம் நாட்டை பிளவுபடுத்தாது

*அமைச்சர் ஹர்ஜை டி சில்வா சொல்கிறார்*

கொழும்பு, ஒக்.1

இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமெரிக்காவின் தீர்மான வரைவு நாட்டைப் பிளவுபடுத்தும் ஒன்றல்ல எனக் கூறியுள்ள வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஜை டி சில்வா, இதன்மூலம் நாட்டின் சுயாதீன செயற்பாடுகள் பலமடையும் என்றும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அரசு நாட்டைப் பாதுகாக்கும் வகையில் வெளிநாட்டுக் கொள்கைகளை முன்னெடுக்கவில்லை என்று தெரிவித்த அவர், இந்த அரசு அமெரிக்கத் தீர்மானம் தொடர்பில் சரியான முடிவை எடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றத்துடன் இலங்கையின் பாதுகாப்பு பலமடைந்துள்ளது என்று தெரிவித்த அவர், இலங்கைக்கு எதிரான சர்வ தேச விசாரணை அறிக்கை பிற் போடப்பட்டு நாட்டுக்கு எதிரான அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த மார்ச் மாதம் அறிக்கை வெளிவந்திருந்தால் இராணுவம் தண்டிக்கப்பட்டுப் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கும் என்று கூறிய அவர், புதிய அரசு இராணுவத்தினரையும் நாட்டையும் காப்பாற்றியுள்ளது என்றும் கூறினார்.

இப்போதைய அமெரிக்கத் தீர்மான வரைவு சர்வதேச தலையீட்டைக் கோருவது எனவும் பிரிவினைக்கு அடித்தளமிட்டுள்ளது எனவும் எதிர்த் தரப்பினர் கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-சி)

## சாவுத் தண்டனை நிறைவேற்றத்துக்கு சிறைகள் ஆயத்தம்

***நவம்பரில் இரு அலுக்கோசுகளும் நியமனம்***

கொழும்பு, ஒக்.1

சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அரசு தீர்மானம் எடுக்கும் எந்தவேளையிலும் அதை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருப்பதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.ஏ. ரோஹண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அலுக்கோசுப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் நவம்பர் மாதம் அளவில் இரு அலுக்கோசுகளை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விண்ணப்பங்களை அரச பரிபாலன அமைச்சு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு ஆகியவை ஒன்றிணைந்து பரிசீலித்தபின் இரு அலுக்கோசுகளும் தேர்ந்தெடுக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (த)

## சொகுசு வாகனத்தில் கஞ்சா கடத்திச் சென்ற ராணுவ மேஜரும் சாரதியும் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக்.1

சொகுசு வாகனமொன்றில் 35 கிலோ கஞ்சாவைக் கடத்திச்சென்ற சமயம் கைதுசெய்யப்பட்ட இராணுவ மேஜர் ஒருவரையும் அவரது வாகன சாரதியையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹொரணை நீதிவான் திருமதி லோச்சனி வீரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து பதவி விலக்கப்பட்ட மேஜரும் அவரது சாரதியும் நீண்ட நாள்களாகவே தனமல்வில பிரதேசத்திலிருந்து ஹொரணை மற்றும் பண்டாரகம பிரதேசங்களுக்கு கஞ்சாவைக் கடத்தி வந்துள்ளதாகவும் இவர்கள் கைது செய்யப்பட்ட சமயம் அவர்களது வாகனத்தில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த தலா ஒரு கிலோ எடைகொண்ட 35 பொதிகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

அதிவேகப் பாதையில் பயணித்த இந்த வாகனம் நிறுத்தப்பட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது முதலாவது சந்தேக நபரான மேஜர் தனது இராணுவ அடையாள அட்டையைக் காட்டிப் பொலிஸாரைச் சமாளிக்க முயன்றிருக்கிறார். எனினும் அந்த வாகனத்தில் கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த உறுதியான தகவலால் வாகனம் சோதிக்கப்பட்டபோது பின்புற டிக்கியிலும் பின் இருக்கையின் கீழும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பிடிபட்டது.

இதில் சம்பந்தப்பட்ட வாகனம் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. (த-சி)

## போதைப்பொருள் வைத்திருந்த தம்பதியருக்கு சாவுத் தண்டனை

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியருக்கு சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் பிரித்தி மத்மன் சுரசேனாவினாலேயே நேற்று முன் தினம் இந் தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இனோகா யாமலி மற்றும் ஜேக்கப் ரிச்சர்ட் விக்டர் என்ற பொரளை பிரதேசத்தைச்சேர்ந்த தம்பதியருக்கே சாவுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நியாயமான காரணங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டநிலையிலேயே நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றம் சாவுத் தண்டனை வழங்கியுள்ளது. (த)

## மரண அறிவித்தல்கள்

**சந்தியோகு அடைக்கலமுத்து (பூபதி பேக்கரி உரிமையாளர்)**




உயரப்புலம், ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியோகு அடைக்கலமுத்து 29.09.2015 செவ்வாய்க் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
077 742 7777
00442087889792

தகவல்: அசன் குடும்பத்தினர். (மகன்)

## கோபாலபிள்ளை சிவாகரன்



அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய கோபாலபிள்ளை சிவாகரன் கடந்த (28.09.2015) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளை - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கோபாலகிருஷ்ணன் காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சோபித்வாணியின் (ஜேர்மன்) அன்புக் கணவரும், சௌமியா (ஜேர்மன்), லதுசன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன், திலகவதி, இந்திராணி (டென்மார்க்), மோகனேஸ்வரி, திருக்குமரன், கமலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அழகேசன், சிறிராகவன் (டென்மார்க்), சுமதி, சுபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனகநாயகத்தின் சகலனும், கௌதமன், கௌதமி, கோமிகா (டென்மார்க்), கேஷிகா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமாவும், காருணியா, அனுரேகா, அட்சரபானு, அனுசன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2015) வியாழக்கிழமை Haupt str.16 75228, Lspringen, German இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி.
0773455260 (65057,11,17)

தகவல் : தாய், சகோதரர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



எமது பங்குத் தந்தை **அருட்பணி A.J.A. ஜெயரஞ்சன்** அவர்களின் பேர்த்தியார் **திருமதி சிசிலியா (கனகம்) பொன்னுத்துரை** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். (60609,11,17)

கச்சாய் தூய பேதுருவானவர் ஆலய பங்கு மக்கள்.

## மரண அறிவித்தல்

**பொன்னையா நாகேந்திரம்**



இணுவில் லேன், மானிப்பாயைச் சேர்ந்த பொன்னையா நாகேந்திரம் நேற்று (30.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கண்ணம்மாவின் அன்புக் கணவரும், லலிதா, சிவனேஸ்வரி (கனடா), வேலழகி (டென்மார்க்), ஸ்ரீவள்ளி (இந்தியா), கண்ணன், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகாந்தன், ஜெயக்குமார், லோகநாதன், பொன்வேல் ஆகியோரின் மாமனாரும், லோஜனா, கனிஸ்ரன், கிறீஸ், கிறீஸ்ரினா, நிசான் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.10.2015) வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் லேன், மானிப்பாய். (65057,11,17)

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சுப்பையா நடராசா**

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொரளை கனத்தை வீதி, பழக்கடை முன்னாள் உரிமையாளருமாகிய சுப்பையா நடராசா நேற்று 30-09-2015 பெரியதம்பிரான் கழலடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலா தேவியின் அன்புக்கணவரும் பூமாதேவி(சுழிபுரம்), பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவர்களான வேதவனம், கமலா தேவி, வரதராசா, பத்மநாதன், தில்லையம்பலம் (மாலா மளிகை, பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகசபைப்பிள்ளை, விசுவநாதன் மற்றும் பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவர்களான ஜெகதீசன் , குணமாலா, கலைச்செல்வி, சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருச்செல்வம் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சந்திரகுமார்(மோகன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயந்தினி(பிரான்ஸ்), ஸ்ரீரமா (பிரான்ஸ்), கேதினி (பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்த் சரண், சகானா கேஷாந், மகிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (65039)(10.17)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கத்தை

விஸ்தரித்தல் ஆகியன தொடர்பில் புதிய செயற்பாட்டுத்திட்டமொன்றை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம். அமைதி காக்கும் பணிகளில் இலங்கையின் பங்களிப்பு மேலும் காத்திரமானதாக அமையும். பல்வகைமை, நல்லிணக்கம், நிலையான அபிவிருத்தி என்பனவே மானுட அபிவிருத்தியின் அடிப்படையாகும்.

அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நிலையான அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரண்டு பிரதான நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றோம்.

கடந்த காலம் தொடர்பில் நேர்மையாக நடந்து கொள்ளுதல் மற்றும் நவீன இலங்கையை கட்டியெழுப்புதல் ஆகிய இரண்டு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். மிக நீண்ட காலமாக ஐ. நா. அமைப்பில் இலங்கை அங்கத்துவம் வகிக்கின்றது. ஐ.நா அமர்வுகளில் பங்கேற்று உரையாற்றக் கிடைத்ததனை பெருமிதமாகவும், கௌரவமாகவும் கருதுகின்றேன். ஐ. நா அமைப்பின் பிரகடனங்கள் கொள்கைகள் மற்றும் சர்வதேச பிரகடனங்களை முழு அளவில் ஏற்றுக்கொள்ளும்நாடுகளின்வரிசையில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதே ஐ.நா. அமைப்பின் பிரதான பணியாக அமைந்துள்ளது. மனித உரிமைப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கு இலங்கை உரிய முக்கியத்துவம் அளிக்கும்.

புதிய அரசு ஜனநாயகத்தை நிலைநாட்டவும் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யவும் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. உண்மையை கண்டறிதல் நீதியை நிலைநாட்டுதல் ஆகியன மூலமாக கடந்த கால பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைப் போர் காரணமாக சமூகத்திற்கும் நாட்டுக்கும் மிகப்பெரிய அழிவுகள் ஏற்பட்டது. அனைத்து விதமான போர்கள் மற்றும் பயங்கரவாதம் என்பன மனிதாபிமானத்துக்கு இழிவானது. எவ்வாறான அடிப்படைக் காரணிகள் இருந்தாலும் மனிதாபிமானத்திற்கு எதிரான கொடூரங்கள் கண்டிக்கப்படவேண்டியவை.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதில் இலங்கை வெற்றியீட்டியுள்ளது. உலகின் மிகவும் கொடூரமான பயங்கரவாத இயக்கம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இலங்கை வெற்றி பெற்றுள்ளபோதிலும், ஆசியாவிலிருந்து ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா வரையான நாடுகள் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதில் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன. போரின் பின்னரான அனுபவங்கள் மிகவும் முக்கியமானது.

பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளத் தயார் . பௌத்த கொள்கைகளுக்கு அமைய கற்றுக் கொண்டவற்றின் ஊடாக மூன்று வகையிலான மனித மோதல்கள் காணப்படுகின்றன.

முதலாவது மோதல் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலானது , நவீன மனிதன் தனது நலனுக்காக அதிகளவில் இயற்கையை அழித்து வருகிறான். இரண்டாவது மோதல் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலானது. தனிப்பட்ட நபர்கள், சமூகங்கள், நாடுகளுக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றது.சட்டம் ஒழுங்கினால் உரிய முறையில் மனித உரிமைகள் பேணப்படாத சந்தர்ப்பத்திலேயே மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் மோதல் இடம்பெறுகிறது.

மூன்றாவது போராட்டம் மனிதனுக்கு உள்ளேயே உருவாகும் மோதலாகும். மேற்குறிப்பிட்ட இரண்டு மோதல்களும் ஏற்படுவதற்கான பிரதான ஏதுவாக மூன்றாவதனைக் குறிப்பிட முடியும். அதாவது மனிதன் மனிதத்தை இழக்கும் காரணத்தினால் எல்லா வகையிலான மோதல்களும் இடம்பெற்று வருகிறது.

இலங்கை தெற்காசிய வலயத்தில் பழமையான ஜனநாயக உரிமைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளில் முன்னிலையில் இருக்கின்றது. சுதந்திரம் அடைந்ததில் இருந்தே, இலங்கைக்கு நெருக்கடிகள் இருந்த போதிலும் கூட மனித வள மேம்பாட்டு குறியீடுகள் உயர்ந்த அளவில் காணப்படுகின்றது.

நிலையான வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருப்பது இளைஞர்களே. 21ஆம் நூற்றாண்டில் இளைஞர்கள், அறிவை அடிப்படையாகக் கொண்ட உலகை வெல்வதற்கு முடியுமான திறமைகளுடன் கூடிய தொழில் படையினராக மாற்றுவது எங்கள் முதற் குறிக்கோளாக உள்ளது . தேசிய தலைவர்களாகிய அனைவரும், சுய ஒழுக்கத்துடன் கூடிய சமத்துவமான அணுகுமுறைகள் ஊடாக நிலையான அபிவிருத்திகளை அடைந்துகொள்வதற்கான உரிய உடனடித் திட்டங்களை எதிர்காலத்தில் கையாள வேண்டும் -என்றார். (த-வ)

## அமெ. தீர்மான

சபையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் நிறைவேற்றப்படும் தீர்மானம், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய பிரதான விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டது. நீதித்துறைச் செயல்முறையில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்கள் இடம்பெறுவது, கூடுதல் நம்பகத்தன்மையை அளிக்கும்.

உள்ளக நீதிப் பொறிமுறை தொடர்பான சந்தேகம் குறித்து மக்களைக் குற்றம் சுமத்த முடியாது. கடந்த கால அனுபவங்கள் அந்தளவு மோசமானவையாக இருந்தன.

ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வு காணப்படவேண்டிய தேவை மற்றும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது, 34 ஆவது அமர்வுகளில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் தீர்மான வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் வரவேற்கத்தக்கவை.

ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதனால், இது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட சிறந்த தீர்மானமாக அமையும். ஒருமித்த கருத்துடன் நிறைவேற்றப்படும் சூழலில் இந்த தீர்மானத்தை நேர்மையாக நடைமுறைப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது.

நாட்டினதும், ஒட்டுமொத்த மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு, நேர்மையாக இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். அடுத்த ஆண்டுக்குள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அந்த தீர்வு, நியாயமானதாகவும், சாத்தியமானதாகவும், நிலையானதாகவும் அமைய வேண்டும்.

எமது மக்கள், தாம் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று பெருமைப்படத்தக்கதாகவும், இந்த நாடு தம்முடையது என்று உணரத்தக்கதாகவும் அந்த தீர்வு அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-வ)

## சந்திரிகா

மன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறான அதிர்ச்சிகரத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

உதயன் என்றழைக்கப்படும் வேலாயுதன் வரதராஜாவுக்கு 290 வருடச் சிறைத் தண்டனையும், சந்திரா ஐயர் ரகுபதி சர்மா என்பவருக்கு 300 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்திரா ஐயர் ரகுபதி சர்மாவின் மனைவியான வசந்தி ரகுபதி சர்மாவை இவ் வழக்கிலிருந்து நிரபராதி என உயர்நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க தீர்ப்பளித்தார்.

1999 டிசம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இறுதிப் பிரசாரம் நடைபெற்ற கொழும்பு, நகர சபைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்ததுடன், 115இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவின் வலது கண்ணும் பெரும் பாதிப்புக்கு உள்ளானது.

இந்தத் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினரான சக்திவேல் இலங்கேஸ்வரனுக்கு 270 வருடகால கடூழிய சிறைத்தண்டனை வழங்கிக் கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் 27 ஆம் திகதி மேல்நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

15 வருடங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகளுக்கு எதிராகக் கடந்த 13 வருடங்களாக வழக்கு விசாரணை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தனது கணவரின் விடுதலைக்காக ஜனாதிபதியிடம் கருணை மனு கோரிக்கை விடுக்கவுள்ளதாக சந்திரா ஐயர் ரகுபதி சர்மாவின் மனைவியான வசந்தி ரகுபதி சர்மா தெரிவித்தார்.

வழக்கு மீதான தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சந்திரா ஐயர் ரகுபதி சர்மாவின் மனைவியான வசந்தி ரகுபதி சர்மா, தனது கணவரின் விடுதலையைக் கோரி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கருணை மனு கோரிக்கை விடுப்பதாகக் கூறினார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தங்களுக்கு விடுதலை கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த போதிலும், தற்போது அந்த நம்பிக்கை சிதைந்து போய்விட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் செய்வதறியாது அநாதையாக தாம் இருப்பதாக வசந்தி ரகுபதி சர்மா மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான குண்டுத் தாக்குதல் வழக்கில் அறிவிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாகப் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி மகிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

இரகசியப் பொலிஸார் அல்லது மேல் அதிகாரிகளின் தவறுகள் காரணமாகவே சம்பவத்தில் தொடர்பில்லாத வசந்தி ரகுபதி சர்மா 15 வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கு காரணம் என்று சட்டத்தரணி மகிந்த ஜயவர்தன குறிப்பிட்டார்.

தனது கணவரைக் கைது செய்த தினத்திலிருந்து வசந்தி ரகுபதி சர்மா மனரீதியில் பாதிக்கப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழீழவிடுதலைப்புலிஉறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின்நிலையும்இதுபோன்றதாகவே இருப்பதாக சட்டத்தரணி கூறினார். (த-வ)

## நல்லாட்சியை

யில்ஏற்பட்டுவரும் மாற்றங்களைத்தாம் மதிப்பதாகவும். அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போருக்குப் பின்னர், நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், வறுமை ஒழிப்புக்கு அமெரிக்கா உதவவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். அதற்கு, ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்க அரசு இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்கும் என்று தெரிவித்தார். (த-வ)

## 20 முன்னாள்

30 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. அத்துடன் புனர் வாழ்வு காலத்தில் கணி னிப் பயிற்சியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதி, புனர்வாழ்வு ஆணையாளர், புனர்வாழ்வு திணைக்களத்தின் அதிகாரிகள், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு.அகிலேந்திரன், வவுனியா மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆனந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த)

## வலுவிழந்துள்ளது

ஜெனிவாவில் இன்று வியாழக்கிழமை ஏற்றுக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற தீர்மானத்தின் நகல்வடிவில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்கு தொடுநர்களுக்கான பங்களிப்பு மற்றும் அதிகாரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாததைச் சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமை அமைப்புகள் இது மிகப் பெரிய பின்னடைவாகும் எனக் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான பொறுப்புக்கூறலுக்கான நம்பகத்தன்மை மிக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் அதேவேளை, இலங்கை அரசை அதற்கு இணங்கச் செய்ய வேண்டிய தேவையிருப்பதை இந்த நடவடிக்கை புலப்படுத்தியுள்ளது.

வலுவான நீதி நடைமுறை காணப்படும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதியின் அரசில் அங்கம் வகித்த மூத்த அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் விடுதலைப்புலிகள் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனினும் இலங்கை அரசின் இணக்கப்பாட்டுடனான அமெரிக்காவின் தீர்மானத்தின் நகல்வடிவம் ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் விசேட நீதிமன்ற கோரிக்கையைக் கருத்திலெடுக்கவில்லை. கிழக்குத் திமோர் உட்பட பல நாடுகளில் நீதிவழங்கும் வழிமுறையாக இவ்வாறான விசேட கலப்பு நீதிமன்றங்கள் உருவெடுத்துள்ளன.

எனினும் நகல்வடிவத்தில் இலங்கையின் நீதி நடைமுறையில் பொதுநலவாய நீதிபதிகள், ஏனைய வெளிநாட்டு நீதிபதிகள் போன்றவர்கள் பங்களிப்பு செய்வது குறித்து தெளிவற்ற விதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கடந்த திங்கட்கிழமை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியின் ஆதரவைப் பெற்றுக் கொண்டது. அவர் இலங்கை ஜனாதிபதியை ஐ. நா பொதுச்சபைக் கூட்டத் தொடரின் இடையே சந்தித்தவேளை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனான உள்நாட்டுப்பொறிமுறைக்கு தனது ஆதரவை வெளியிட்டார்.

எனினும் நடைமுறையில் இது எவ்வாறு செயற்படும் என்பது குறித்த விவரங்கள் இன்னமும் தீர்மானிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. நம்பகத்தன்மையை உறுதி செய்ய சர்வதேசப் பங்களிப்பு அவசியம். ஆனால் இது குறித்து ஆலோசனை செயற்பாடுகளுக்குப் பின்னரே தீர்மானிப்போம் என இலங்கை இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முழுமையான சர்வதேச விசாரணைகள் இடம்பெறுவதைத் தடுக்கும் முயற்சியில் இந்தியாவே முன்னின்றதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி மேற்குலக இராஜதந்திரியொருவர் தெரிவித்தார் என ரொய்ட்டர் கூறுகிறது.

வரைவில் சர்வதேசம் எனக் காணப்பட்டதை வெளிநாடு என மாற்றுவதற்கான தீவிர முயற்சிகளை இந்தியா மேற் கொண்டது. காஸ்மீர் விடயத்தில் தானும் இதேபோன்றதொரு நிலையை எதிர்கொள்ளலாம் என இந்தியா கருதியதே அதற்கு காரணம் என அந்த இராஜதந்திரி குறிப்பிட்டார்.

எனினும் புதுடில்லி வட்டாரங்கள் இதனை முற்றாக நிராகரித்ததுடன், தனது இறைமையை பாதுகாப்பது குறித்த இலங்கையின் கரிசனையை கருத்தில் கொண்டே தீர்மானம் வடிவமைக்கப்பட்டதாக தெரிவித்தன.

இதேவேளை, குறிப்பிட்ட தீர்மானம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப் படுகின்றது என்பதிலேயே அனைத்தும் தங்கியுள்ளது. தீர்மானத்தின் வாசகங்கள் தெளிவற்றதாக காணப்படுகின்றது என சர்வதேச நெருக்கடிக் குழுவின் ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசு சுயாதீன சர்வதேச வழக்கு தொடுநர்களையும், பெரும்பான்மையான வெளிநாட்டு நீதிபதிகளையும் நியமிப்பதை எதிர்த்துவருவாகச் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜோன் பிசர் தெரிவித்துள்ளார். (த-வ)

## இரண்டு பஸ்கள்

அறிவியல் நகரில் இருந்து ஆடை தொழிற்சாலை யில் பணியாற்றும் யுவதிகளை ஏற்றிய பஸ்ஸும், மல்லாவியில் இருந்துநட்டங்கண்டலுக்குச் செல்லும் பயணிகள் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதினா லேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 35 பேர் படுகாயம் அடைந்து மல்லாவி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 20க்கும் மேற்பட்டோர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கும் , யாழ் போதான வைத்தியசாலைக்கும் அம்புலன்ஸ்களில் அனுப்பிவைக்கப் பட்டனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிந்து விட்டு வீடு திரும்பிய யுவதிகளை ஏற்றிச் சென்ற பஸ் அதிகளவு சேதமடைந்ததுடன் இரு சாரதிகளும் படுகாயமடைந்துள்ளனர். மேலதிக விசாரனையை மல்லாவிப் பொலிஸர் மேற்கொண்டுள்ளனர்.

(த-422-115-21-101)

## தீர்மானத்தை

வழிமொழிவதாக இலங்கைத் தரப்பு அமெரிக்காவுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படாது எனக் கூறப்பட்டது. (த)

## தீர்மானத்தை வரவேற்கிறார்

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இந்த புதிய செயற்பாடுகள், உண்மையைக் கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்கவும், நீண்டகால இனப்பிரச்சினை மற்றும் சமத்துவமின்மைக்கு அரசியல் தீர்வினைக் காண்பதற்கும் ஓர் ஆரம்பமாக அமையும் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம், உள்ளக நீதிமன்ற பொறிமுறை மூலம் பரந்த நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது.

இலங்கை மீதான பிரேரணை விசாரணைகளை முன்னோக்கி நகர்த்துவதுடன், அதுதொடர்பில் கண்காணிப்பதற்கும், சர்வதேசத் தலையீட்டை ஏற்படுத்துவதற்கும் முன்னோடியாக அமைந்துள்ளது-என்றுள்ளது. (த-வ,5)

## தடுப்பில்

றுக் காலை யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகளினுடைய பிள்ளைகள், அரசியல் கைதிகளாக்கப்பட்டுள்ள தங்களது தந்தையர் களை விடுவிக்குமாறு கோரி இந்தக் கவனவீர்ப்பில் ஈடு பட்டனர்.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன் னால் நேற்றுக் காலை ஆரம்பமான குறித்த பேரணி வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் வரை சென்றது.

பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கி னேஸ் வர னுடன், தங்களது பிரச்சி னைகளை முன்வைத்த அர சியல் கைதிகளின் பிள்ளை கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரி மனு ஒன்றையும் அவரிடம் கையளித்தனர்.

குறித்த மனுவில் மாமா நீங்க எப்ப எங்கட அப்பாவை விடுவீங்க? தேர்தலுக்கு முன் ரணில் மாமா சொன்னவர் தேர்தல் முடிய எங்கட அப்பாவை விடுவன் எண்டு. ஆனால் அப்பா இன்றும் வரேல்ல. அம்மாட்ட கேட்டா அவா சொல்லுறா அடுத்த தேர்தலுக்கு தான் அப்பா வருவார் எண்டு. அடுத்த தேர்தல் எப்ப வரும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இப் பேரணியில் அரசியல் கைதிகளினுடைய பிள்ளைகள், உறவினர்கள், மன்னார் பிரஜைகள் குழுவினர், ஆகியோர் கலந்து கொண்டனர். (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீதித்துறையின் திறன்விருத்திக்கு அமெ. உதவி

## 26 லட்சம் டொலர்களை வழங்குகிறது

கொழும்பு, ஒக்.1

இலங்கையின் குற்றவியல் நீதித்துறையினரின் திறன்களை மேம்படுத்த அமெரிக்கா–இலங்கை இணைந்த செயற்றிட்டத்துக்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா 26 லட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குகின்றது.

இதற்கமைய இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அதுல் கெசாப் மற்றும் இலங்கை வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆகியோர் ஒப்பந்தத்தில் நேற்று முன் தினம் கைச்சாத்திட்டனர்.



இலங்கையின் நீதித்துறையினரின் திறன்களை விருத்தி செய்வதன் ஊடாகக் குற்றவியல் மற்றும் சிக்கலான குற்றங்களை விசாரணை செய்வதனை மேம்படுத்த முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இதன்மூலம் இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும் நீதி கிடைப்பது உறுதி செய்யப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு ஜனநாயகத்துக்கும் சமத்துவம் மற்றும் நியாயமான நீதி அவசியம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் சர்வதேச தர நியமங்களுக்கேற்ப, இலங்கையின் நீதித்துறை ஆற்றலை வலுப்படுத்தவும், அமெரிக்கா தனது அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும் வெளிப்படைத்தன்மையுடன் பகிர்ந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிகமாக, ஊழல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் நிதி, திட்டமிடப்பட்ட குற்றங்கள் போன்ற சிக்கலான குற்றச்செயல்களை கையாள்வதற்கான இலங்கையின் இயலுமையை கட்டியெழுப்புவதற்கான தனியான நிகழ்ச்சிகளும் இதில் உள்ளடங்கியிருக்கும் என்றும் கெசாப் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த மே மாதம் இலங்கைக்கு பயணம் செய்த அமெரிக்க இராஜங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கையின் நீதித்துறையை வலுப்படுத்த அமெரிக்கா உதவி வழங்கும் எனக் குறிப் பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த–வ–5–4)

# இந்தியா- இலங்கை இடையே பாலம்

### அமைச்சரவை விரைவில் கூடி ஆராயும்



கொழும்பு, ஒக்.1

தமிழ்நாட்டையும், இலங்கைத் தீவையும் தரைவழிப் பாலம் மற்றும் கடலடிச் சுரங்கம் மூலம் இணைக்கும் இந்தியாவின் திட்டம் தொடர்பாக,இலங்கை அமைச்சரவை விரைவில் ஆராயவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, சீனாவின் சின்ஹுவா, செய்தி நிறுவனத்துக்கு தகவல் வெளியிடுகையில், இந்த திட்டம் தொடர்பாக, பிரதமர் ரணில்விக்கிரமசிங்கஅண்மையில் புதுடில்லிக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இந்திய அரசு கலந்துரையாடியிருந்தது.

இது குறித்து விரைவில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தையும், தலைமன்னாரையும் இணைக்கும், தரைவழி மற்றும் புகையிரதப் பாலத்தை அமைக்கும் திட்டத்தை இந்தியா முன்மொழிந்துள்ளது.

இந்த 23 கி.மீ பாலத்தை அமைக்கும், சுமார் 5 பில்லியன் ரூபா திட்டம் தொடர்பான சமூக பொருளாதார சாத்திய ஆய்வை மேற் கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆர்வம் காட்டுவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. (த–வ)

# சுகாதார வசதிகளற்ற உணவகங்கள் மூடல்

யாழ்ப்பாணம், ஒக். 1

அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த இரண்டு உணவகங்களை மூடுமாறு யாழ் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள உணவகங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் ஐந்து உணவக உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இவர்களில் கருவாட்டை உரிய முறையில் பேணாத உணவக உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும், அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி இயங்கி வந்த இரண்டு உணவகங்களுக்கு தலா 14 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் உணவகத்தை மூடுமாறும், வேறு இரண்டு உணவகங்களுக்குச் சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுக்கு தலா 7ஆயிரத்து 500 ரூபா அபராதமும் நீதிமன்றி[illegible] விதிக்கப்பட்டது. (த–103)

# சுயாதீன ஆணைக்குழுக்களில் சகல இனத்தவரும் வேண்டும்

### நல்லாட்சிக்கான முன்னணி கோரிக்கை

கொழும்பு, ஒக்.1

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு சகல இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்களை நியமிக்குமாறு சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது நல்லாட்சிக்கான முன்னணி.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சபையின் கீழ் பல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சபாநாயகருக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–சுதந்திர இலங்கையில் நாம் வெற்றி பெற்ற ஒரு தேசமாக வருவதற் குரிய சகல வாய்ப்புக்களையும் இழந்து தோல்வியுற்றிருக்கின்ற நிலையில் எமது எதிர்காலம் குறித்து புதிய நம்பிக்கைகளும் எதிர் பார்ப்புகளும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

100 நாள் அரசின்போது மேற்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தப் பிரேரணை அரசின் பல நிறுவனங்களையும் ஜனநாயக மயப்படுத்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது –என்றுள்ளது. (த)

# மலையக பகுதிகளில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, ஒக். 1

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மற்றும் தொடர் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு, இடி– மின்னல் தாக்கம், வெள்ள நீர் என்பவற்றினால் மக்கள் தமது உயிர் மற்றும் உடைமைகளை இழந்துள்ளனர்.

இந்நிலையில், அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் நாட்டில் தொடர்ந்து மழை பெய்யுமானால், குறிப்பாக மலையகத்தில் தொடர் மழைபெய்யுமானால், நுவரெலியா, பதுளை மற்றும் களுத்துறை [illegible] மாவட்டங்களில் மண்சரிவு [illegible]படும் அபாயம் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறி வித்துள்ளது.

இதனால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன், இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

# அமெரிக்கப் பிரேரணை திருத்தப்படவேண்டும்

### தமிழ் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துக் கடிதம்

கொழும்பு, ஒக். 1

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையில் திருப்தியில்லை எனவும், இலங்கையில் உண்மையான நீதியையும் – பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தும் விதத்தில், குறித்த பிரேரணை திருத்தப்படவேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் தூதரகங்களின் தலைவர்களுக்குத் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில்சமூக அமைப்புக்கள் இணைந்து கூட்டாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய 4 அரசியல் கட்சிகளும் பல்வேறு தரப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் 40 சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து இந்தக் கடிதத்தைக் கையளித்துள்ளதாக, சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான நடவடிக்கைக் குழு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிச்செயன்முறை ஒன்றின் ஊடாகவே, உண்மையான [illegible]புக் கூறலும் நீதியும் [illegible] படும் என்பது இலங்கையின் இன முரண்பாட்டு போரில் பாதிப்புக்குள்ளானோர்களின் பெரும்பான்மையினராகிய தமிழர்களின் தீர்க்கமான நம்பிக்கை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இருந்த போதிலும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையில் பரிந்துரைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஐ.நா.வின் ஈடுபாட்டுடன் அமைக்கப்படும், நம்பகத்தன்மையான கலப்பு நீதிமன்றம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, அந்தப் பொறிமுறையின் சர்வதேச அங்கத்தின் தலைமையினால் நிர்வகிக்கப்படும் ஒரு நீதி விசாரணைப் பொறிமுறையினூடாக நீதியையும் உண்மையான பொறுப்புக் கூறலையும் அடைவதற்கான முயற்சிகளையும் நாங்கள் சாதகமான முறையில் கருத்தில் கொள்ளத் தயாராக இருந்தோம்.

**உள்ளக விசாரணை நம்பகத்தன்மையானதல்ல**

எனினும் அவ்விதமான நம்பத்தகுந்த கலப்பு நீதிமன்ற செயன்முறை ஒன்றை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள், சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச பிரேரணையின் செயற்பாட்டு பந்தியின் 4 ஆம் மற்றும் 6 ஆம் பந்திகளில் போதுமான அளவு [illegible] அந்தப் பந்திகளின் வெளிப்பாடானது, உள்ளகப் பொறிமுறை நம்பகத் தன்மையானது எனும் தோற்றப்பாட்டைக் உருவாக்கும் நோக்கில் மட்டும், பொதுநலவாய – வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்களை நியமிக்க கோருகிறது என்று நாம் கருதுகிறோம்.

இலங்கையின் உள்ளகப் பொறிமுறையானது கட்டமைக்கப்பட்ட மிகவும் அடிப்படையான குறைபாடுகளை உடையது என்பதை மனித உரிமை ஆணையாளரது அறிக்கை உரிய காரணங்களுடன் தெளிவாக விளக்கியிருக்கிறது. இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை அரசே வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பதானது, எந்த வகையிலும், உள்ளக விசாரணையின் கட்டமைப்புசார் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாது. இலங்கை அரச கட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் அவர்களால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு பொறிமுறையும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளாது.

**புலம்பெயர் சாட்சியாளர்களை புறமொதுக்குகின்றது**

சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையின் ஆரம்ப வரைவில் குறிப்பிடப்பட்டிருந்த வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கலை நீக்குவது குறித்த பரிந்துரை மற்றும் மனித உரிமை ஆணையாளரது பங்களிப்பு சம்பந்தமான பந்திகள், தற்போதைய திருத்தப்பட்ட உத்தேச வரைவில் நீக்கப்பட்டுள்ளமை குறித்து, நாங் கள் ஆழ்ந்த கவலை அடைகிறோம்.

அத்தோடு,தற்போதைய வரைவின் செயற்பாட்டுப்பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டிருக்கும், இலங்கை தழுவிய பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடல் என்பது, சித்திரவதைகளுக்கு அஞ்சி வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தைப் பெற்றுக் கொள்ளலை புறமொதுக்குகிறது. புலம்பெயர்ந்த மக்களின் வாக்கு மூலங்களே, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணையின் முக்கிய அம்சமாக விளங்கியிருந்தது.

இலங்கையுடன் இணைந்து ஒரு தீர்மானத்தை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, உத்தேச வரைவில் இருந்த சில முக்கியமான பகுதிகள் நீக்கப்பட்டிருப்பது குறித்து நாங்கள் ஆழ்ந்த மனவருத்தம் அடைகிறோம். ஆகையால் மேற்சொன்ன விடயங்களைக் கருத்தில் கொண்டு இலங்கையில் உண்மையான நீதியையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தும் விதத்தில், சமர்ப்பிக்கப்படும் பிரேரணையில் திருத்தங்களை செய்யுமாறு வேண்டுகிறோம் – என்றுள்ளது.

(த–[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஒக். 1

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று வியாழக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# நடப்பு வருட முரளிக் கிண்ணம்; அணிகளும் பிரிவுகளும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

நடப்பு வருடத்தின் முரளி வெற்றிக்கிண்ணத்துக்கான ரி-20 தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை ஆறு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

ஆண்கள் அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 'ஏ' பிரிவில், யாழ்ப்பாண (இணைந்த) அணி, கொழும்பு டிஎஸ். சேனநாயக்க கல்லூரி அணி, குருநாகல் மலிகதேவ கல்லூரி அணி, மொனராகலை (இணைந்த) அணி ஆகிய அணிகளும் 'பி' பிரிவில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, மேல் மாகாண (இணைந்த) அணி, தெவரவெல கல்லூரி அணி, மட்டக்களப்பு மாவட்ட (இணைந்த) அணி ஆகிய அணிகளும் 'சி' பிரிவில், கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட (இணைந்த) அணி, வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி, சர்வதேச (இணைந்த) பாடசாலை அணி ஆகிய அணிகளும் 'டி' பிரிவில், காலி றிச்மன்ட் கல்லூரி அணி, பி.டி.எஸ். குலரெத்தினாக் கல்லூரி அணி, மன்னார், வவுனியா மாவட்ட (இணைந்த) அணி, கண்டி தர்மராஜ கல்லூரி அணி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

பெண்கள் அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 'ஏ' பிரிவில், சீனிகம பெண்கள் அணி, மாத்தளை மகளிர் அணி, நித்தமுவ மகளிர் அணி, வடக்கு-கிழக்கு (இணைந்த) மகளிர் அணி ஆகிய அணிகளும்- 'பி' பிரிவில் பொலனறுவை மகளிர் அணி, சக்தி மகளிர் அணி, பதுளை மகளிர் அணி,மகளிர்பாடசாலை(இணைந்த) அணி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

ஆண்கள் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும், 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் 'சி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும் 'டி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.பெண்கள்பிரிவில்அனைத்து ஆட்டங்களும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயமைதானத்தில்இடம்பெறவுள்ளன. (ம-23)

# மாகாண வலைப்பந்தாட்டம் சம்பியனானது சரஸ்வதி

### முதல் மூன்று இடங்களும் வலிகாமத்திடமே



மாங்குளம், ஒக். 1

அடுத்த வருடம் 15வயதுக்கு உட்பட்ட அணிகளில் இடம்பிடித்து சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் விதமாக வீரர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட பெண்கள் பிரிவு வலைப் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி. தொடரின் முதல் மூன்று இடங் களையும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியில் சரஸ்வதியின் ஆதிக்கம் மிகையாக மேலோங்கியிருந்தது. 7:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை.

முடிவில் 13:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதி சம்பியனானது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிஅணி. (ம-422)

# இறுதிக்குச் சென்றது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஒக். 1

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 7ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்டுவரும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றில் யங்ஸ்ரார் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து நியூபைட் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபைட் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துசாந் 33 ஓட்டங்களையும், விமேலேஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 19.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரா[illegible] 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நியூபைட் அணி சார்பில் மதுசன் 4 இலக்குகளையும் பிரசாந் 2 இலக்குகளையும் ராயு ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)



## துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 1

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழகம் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

11 வீரர்கள் பங்குபற்றும் எட்டுப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 3ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை ஏற்பாட்டுக் குழுவினரிடம் மேற்கொள்ளமுடியும். (ம-23)

# தயாரானது யாழ். மத்தி; அடுத்த வருடத்துக்கான போராட்டத்துக்காக

மாங்குளம், ஒக். 1

அடுத்த வருடம் 15வயதுக்கு உட்பட்ட அணிகளில் இடம்பிடித்து, சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் விதமாக வீரர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் ஏழாலை சிறிமுருகன் அணியை வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ்.மத்திய கல்லூரி அணி.



அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் சிறிமுருகனின் ஆதிக்கமே நிலைபெறும் வகையில் அமைந்தது.

4ஆவது நிமிடத்திலேயே அந்த அணியின் வீரர் பிரவீன் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க அந்தக் கோலே முதல் பாதியின் இறுதிக் கோலுமானது.

இரண்டாம் பாதியுடன் இணைந்து மத்தியின் ஆட்டமும் ஆரம்பமானது. மத்தியின்வீரன்பாஸ்கரனால்3ஆவது, 4ஆவது, 5ஆவது நிமிடங்களில் ஹற்றிக் கோல் பதிவாக மத்தியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. 3:1 என்ற கோல் நிலைமையே இரண்டாம் பாதியின் முடிவுக்கட்டம் வரை நீடித்தது.

இறுதி நிமிடத்தில் சிறிமுருகனால் மற்றுமொரு கோல் பதிவானது. மொத்தத்தில் ஆட்டத்தின் முதல் கோலையும் இறுதிக் கோலையும் சிறிமுருகன் அணி அடித்தாலும் 3:2 என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சியாளர் சிம்மொன்ஸை நீக்கியது தீவுகளின் சபை



மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளரான சிம்மொன்ஸை அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பதவியில் இருந்து நீக்கியுள்ளது.

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே அடுத்த மாதம் தொடர்கள் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பொலார்ட், பிராவோ மீண்டும் இடம்பிடிக்க வேண்டும் என்றும் மேற்கிந்தியத் தீவுகளின் தெரிவுக்குழு ஒருதலைப்பட்சமாக செயற்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார் தீவுகளின் பயிற்சியாளரான சிம்மொன்ஸ். இந்நிலையில் தகவல்களை வெளிப்படையாகவும் அவப்பெயர் ஏற்படும் வகையிலும் தெரிவித்தமையால் அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக்குவதாக தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் எதிர்வரும் 14ஆம் திகதி காலியில் ஆரம்பமாகிறது. (ம)

# கிண்ணத்தைக் கைப்பற்றும் நம்பிக்கையை இழந்த நடால்



களத்தில் இறுதிவரை போராடும் திறன்படைத்த நடால், அடுத்த சர்வதேச கிண்ணமொன்றை தன்னால் கைப்பற்ற இயலாது என்றவாறாக நம்பிக்கையை இழந்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

உலகின் முன்னணி ரென்னிஸ் வீரர்களில் ஒருவரான நடால், இதுவரை 14 சர்வதேச கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளார். இவற்றில் பிரான்ஸ் கிண்ணத்தை மட்டும் தொடர்ச்சியாக 9முறை கைப்பற்றி சாதனை படைத்திருந்தார். தோல்வி கிட்டத்தட்ட உறுதியென்று தெரிந்திருந்தாலும் இறுதிவரை போராடும் திறனாலேயே நடாலுக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். ஆனால் காயத்தில் இருந்து திரும்பிய அவரால் சமீபகாலமாக சிறப்பாக விளையாட இயலவில்லை. நடப்பு வருடத்தில் நடாலால் ஒரு சர்வதேச கிண்ணத்தைக் கூட கைப்பற்ற முடியவில்லை.

தனதுதிறன் தொடர்பாகநடால்தெரிவித்ததாவது: மீண்டும் ஒரு சர்வதேச கிண்ணத்தைக் கைப்பற்ற எனக்கு வாய்ப்பு இல்லை. நடப்பு வருடத்தின் தொடர் தோல்விகளால் மனமுடைந்து உள்ளேன். அடுத்த வருடத்திலாவது எனது வழக்கமான ஆட்டத் துக்கு திரும்பக்கூடிய மன வலிமையை பெறுவதுதான் தற்பொழுது பிரதான நோக்கமாக இருக்கிறது. சர்வதேச கிண்ணங்களை கைப்பற்ற வேண்டுமாயின் உள்ளூர் தொடர்களில் இருந்து கவனம் செலுத்த வேண்டும். அடுத்த வருடத்துக்கு இடைப்பட்ட நிலையில் இருக்கும் இந்த மூன்று மாதங்களையும் உள்ளூர் தொடருக்காக முழுமையாக பயன்படுத்தவுள்ளேன். என்றார். (ம)

## சீனாவுக்குள் ஊடுருவும் உதைபந்தாட்டம்



பிரேஸில் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான ரொனால்டோ, சீனாவில் 30 உதைபந்தாட்டப் பயிற்சிப் பாடசாலைகளை திறந்து வைத்துள்ளார்.

குறித்த பயிற்சிக் கல்லூரிகளைத் திறந்து வைத்து கருத்துத் தெரிவிக்கையில் ரொனால்டோ தெரிவித்ததாவது– வணிக நோக்கம் தவிர, சீனாவில் உதைபந்தாட்டப் பயிற்சிப் பாடசாலைகளை தொடங்கக் காரணம் உதைபந்தாட்டப் பயிற்சிப் பாடசாலைகளை வளர்த்தெடுக்க முனைப்புக் காட்டும் சீன அரசுக்கு உதவுவதே. சீனாவில் உதைபந்தாட்டத்துக்கான அடித்தளம் பலமாக உள்ளது, உறுதிப்பாடும் உள்ளது. அங்கு இல்லாதது முறையான பயிற்சி மற்றும் உதைபந்தாட்டம் குறித்த கருத் தாக்கமாகும். இந்த முறையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சீனா உதைபந்தாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாற்றம் பெறும். என்றார்.

ரொனால்டோ பிரேஸில், ஸ்பெயின், போர்த்துக் கல், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் இதுவரை மொத்தமாக 52 உதைபந்தாட்டப் பயிற்சிப் பாடசாலைகளுக்கு உரிமையாளராக உள்ளார்.(ம)

## பி.சி.சி.ஐயின் தலைவராகிறார் மனோகர்?

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ.) புதிய தலைவராக மனோகர் தெரிவுசெய்யப்பட அதிகப்படியான வாய்ப்புக்கள் உள்ளதாக இந்தியக் கிரிக்கெட் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் முன்னாள் தலைவரான டால்மியா சாவடைந்ததைத் தொடர்ந்து புதிய தலைவர் எதிர்வரும் நான்காம் திகதி தெரிவுசெய்யப்படுகிறார். இதில் புதிய தலைவராக மனோகர் ஒருமனதாக தெரிவுசெய்யப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



# 700 சர்வதேச வெற்றிகள் வீனஸ் புதிய மைல்கல்



சர்வதேச ரென்னிஸ் தொடரில் தனது 700ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார் அமெரிக்க வீராங்கனையும் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள செரினா வில்லியம்ஸின் சகோதரியுமான வீனஸ் வில்லியம்ஸ்.

சீன ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இதன் 2ஆவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 6:4, 6:3 என்ற நேர் செற் கணக்கில் ஜுலியாவை வீழ்த்தி, 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். சர்வதேச ரென்னிசில் 35 வயதான வீனஸ் வில்லியம்ஸ் பதிவு செய்த 700 ஆவது வெற்றி இதுவாகும். 700 வெற்றிகள் என்ற மைல்கல்லை எட்டிய 9ஆவது வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் ஆவார். (ம)



சிம்பாப்வே – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி பிற்பகல் ஒரு மணியளவில் ஆட்டம் ஆரம்பமாகும். (ம)

## கரப்பந்தாட்டக் காலிறுதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டங்களில் இரவு 7.30மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் புத்தூர் தமிழ்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் 'ஏ' அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் 'பி' அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கிளிநொச்சி வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட

# டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

**கிளிநொச்சி இளைஞர் யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.**

உரிய ஏற்றுமதி விலையான ரூ.1500/= & 3000/= வரையிலான நகைகளுக்கு

## ரூபா.150/=,300/= மட்டுமே




## 2015 ஒக்டோபர் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்)




**நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**
(பகல் உணவு இடைவேளை கிடையாது)

ரூ.150/= இற்கும், ரூ.300/= இற்கும் விற்பனை செய்யும் ரூ.3000/= ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

**இவ்விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை. சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**







- மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பென்ரன் ரூ.150/= Only
- சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் ரூ.150/= Only
- அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் ரூ.150/= Only
- மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் ரூ.150/= Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.150/= Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் ரூ.300/= Only
- பஞ்சாப் பியூட்டி குயின் மாலை ரூ.300/= Only
- அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் ரூ.300/= Only
- கிரிஸ்டல் நெக்லஸ் செட் ரூ.300/= Only
- ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் ரூ.300/= Only
- இத்தாலிய டயமன்ட் தோடுகள் ரூ.300/= Only
- ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் ரூ.300/= Only
- ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் ரூ.300/= Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.300/= Only

**விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபா 500/= & 5000/= வரை ஆபரணங்கள்**

# இடம் : பாரதி ஸ்டார் ஹோட்டல்

**இல. 164, A9 றோட், கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.**

**அனுமதி இலவசம்**

**தொலைபேசி : 077 604 7788**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.